REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 5 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 288 | Tuesday 05, December, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## நலன்புரி உதவித்தொகைக்கு 14,06,932 குடும்பங்கள் தகுதி

# 'ஒக்டோபர் மாத அஸ்வெசும' கொடுப்பனவு வங்கிகளில்

## அரசாங்கம் 8,775 மில்லியன் ரூபாவை ஒதுக்கி வங்கிகளில் வைப்பிலிடுகிறது



ஒக்டோபர் மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி உதவித்தொகையை பெறத் தகுதியுடைய 14 இலட்சத்து 6,932 குடும்பங்களுக்கென 8775 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை, வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இந்நிலையில் இன்று (05) முதல் குறித்த இத்தொகை பயனாளர்களின் கணக்குகளில் வைப்பிலிடப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"அஸ்வெசும" திட்டத்தின் அக்டோபர் மாதத்திற்கான பணக் கொடுப்பனவுகள் இன்று (05) முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி நேற்று (04) 877 கோடி ரூபாவை (8,775 மில்லியன் ரூபா) வங்கிகளுக்கு வழங்க திறைசேரி நடவடிக்கை எடுத்துள்ளது. இன்று முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு இப்பணம் விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்த கொடுப்பனவு 1,406,932 பயனாளி குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், அந்த பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் தவணைத் தொகையை வரவு வைக்க நடவடிக்கை

06

## ஜனாதிபதி மற்றும் சத்குரு ஆகியோர் சந்திப்பு



ஈஷா அறக்கட்டளையின் நிறுவுநரும் தலைவருமான சத்குரு ஜக்கி வாசுதேவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டார். டுபாயில் நடைபெற்ற COP 28 மாநாட்டுடன் இணைந்ததாக இச்சந்திப்பு இடம் பெற்றது.

## ஹோமாகம மஹிந்த வித்தியாலயம் சர்வதேச மொழியில் முன்னணி

### நாட்டுக்கு முன்னுதாரணம் என்கிறார் அமைச்சர் பந்துல

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இம்முறை ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் மாணவ, மாணவிகள் சர்வதேச மொழி பரீட்சையில் பெற்றுள்ள பெறுபேறுகள் முழு நாட்டுக்கும் முன்மாதிரியானதென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுவாக எமது நாட்டிலுள்ள கிராமிய பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு சர்வதேச மொழியில் கற்பதற்கான திறமை

06

## சிறுவர்களை போராளிகளாக சித்தரிக்கும் செயற்பாடுகள் வெறுக்கத்தக்க சிந்தனைகள்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வடக்கில் அண்மையில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் சிறுவர்களுக்கு போராளிகளைப்போல் ஆடையணிந்து அவர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிவித்த செயற்பாடுகள், முற்றிலும் வெறுக்கத்தக்கவை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். முற்றிலும் வெறுக்கத்தக்க இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை இனியாவது தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: மகனாகவும், கணவனாகவும், சகோதரனாகவும், இரு பிள்ளைகளின் தந்தையாகவும், நாட்டு பிரஜையாகவும் இந்த விவாதத்தில் உரையாற்றுகிறேன்.

கல்முனை பகுதியில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் 15 வயது சிறுவன், நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியான

06

## அபார பந்துவீச்சு: மாணவன் ரிஷியுதன் விளையாட்டுத்துறை அமைச்சரை சந்திப்பார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அபாரமாக பந்துவீசி ஓட்டங்கள் எதனையும் வழங்காது எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனைபடைத்த கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன், விளையாட்டுத்துறை அமைச்சரை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மாணவனின் எதிர்காலம் தொடர்பில் உதவி ஒத்துழைப்புக்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் ரோகண திசாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் விவகார, சமூக வலுப்படுத்துகை அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் கருத்து

06

## O/L மீளாய்வு விண்ணப்பங்கள் இன்று முதல் இணையத்தளத்தில்

கல்விப் பொதுத் தராத சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் மீளாய்வுக்கான விண்ணப்பங்களை கோரும் பணிகள் இன்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இணையத்தளம் மூலம் மீளாய்வு விண்ணப்பங்களை சகல மாணவர்களும் சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், அண்மையில் வெளியான கல்விப்

06

## வானிலை மாற்றம்: கடற்றொழிலாளர்கள் அவதானமாக செயற்பட வேண்டுகோள்

மிக்ஜாம் சூறாவளியானது வங்காள விரிகுடாவின் தென்மேற்கு கடல் பிராந்தியத்திற்கு மேலாக யாழ்ப்பாணத்திலிருந்து வடகிழக்காக சுமார் 365 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளதாக, சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட்

06



### கல்முனை சிறுவர் பராமரிப்பு நிலைய சம்பவம்:

## பராமரிப்பு அதிகாரியின் தகைமைகளை பரீட்சித்த பின்னர் உரிய நடவடிக்கைகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




கல்முனையில் சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில் 15 வயது சிறுவன் விக்கெட் மற்றும் தும்புத் தடியினால் மிக மோசமாக தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென மகளிர் விவகார சிறுவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறுவன் மீது இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டு கைது செய்யப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் பரிபாலகரான பெண், தொழில் ரீதியாக எந்த பயிற்சிகளையும்

06

## மூன்றே நாட்களில் 1,000 டெங்கு நோயாளர்கள் பதிவு!



நாட்டில் கடந்த மூன்று நாட்களில் சுமார் 1,000 பேர் டெங்குத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாளொன்றுக்கு சுமார் 300 நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுபற்றி, தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் (NDCU) பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போது, மழையுடனான காலநிலை நிலவுவதால், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது. எனவே, டெங்கு பரவலைத் தடுக்கும் வகையில் மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை

06

## மின்கட்டணம் செலுத்தாதோருக்கு எச்சரிக்கை: 45 நாட்கள் அவகாசம்

மின் கட்டணம் செலுத்தாத ஏழு இலட்சம் பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. நாட்டில் 70 இலட்சத்துக்கும் அதிகமானோர் மின்சாரத்தை பாவிக்கின்றனர். இவர்களில் பத்து வீதத்தினருக்கே இந்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏனையோர், கட்டணங்களை ஒழுங்காக

06



## 02 குவைத்தில் தங்கியிருந்த 35 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

## இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டோர் இலங்கைக்கு மீண்டும் வர வேண்டும்

### சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் பாரிய தவறிழைப்பு



சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட மலையகத்தவர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டுமென்பதே, தமது நிலைப்பாடென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தால் இழைக்கப்பட்ட வரலாற்றுத் தவறை சரி செய்வதற்கு இலங்கை, இந்திய அரசுகள் செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

சிறிமா சாஸ்திரி ஒப்பந்த விடயங்களை முழுமையாக அமுல்படுத்துவதில் இந்திய அரசு தவறிழைத்துள்ளதாக சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை வரவேற்கிறேன். இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட ஒரு தரப்பினருக்கு இன்னும் குடியுரிமை வழங்கப்படவில்லை.

இதனால் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. கடும் போராட்டங்களுக்கு மத்தியிலேயே எமது மக்களுக்கு இலங்கையில் குடியுரிமையை பெற்றுக்கொடுத்தோம்.

06

## பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி நீதிபதிகளுக்கு எதிராக கருத்துக்கூற முடியாது

### சட்டத்துறை, நீதித்துறையின் இணக்கப்பாடுகளே பிரதானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### ரிஷாட் பதியுதீன் எம்.பி மன்னிப்புக்கோர வேண்டும்



பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிபதிகளுக்கு எதிராக கருத்துக்களை முன்வைக்க முடியாது என நீதி, அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் முஸ்லிம் நீதியரசர் ஒருவரை சபிப்பதாக சபையில் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எம்.பி, இதற்காக பாராளுமன்றத்தின் ஊடாக பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று அமைச்சர் சபையில் கேட்டுக்கொண்டார். தமது அடிப்படை உரிமை மீறல் வழக்கு

06

## பள்ளிச்சங்க உப தலைவர் ரஸ்வி ஹாஜியார் காலமானார்

**அஜ்வாத் பாஸி**



பேருவளை, சீனன்கோட்டை பள்ளிச்சங்க உப தலைவரும் இரத்தினக்கல் வர்த்தகரும் பரோபகாரியுமான எம்.எஸ்.எம். ரஸ்வி ஹாஜியார் (வயது 71) நேற்று (04) சீனன் கோட்டை இல்லத்தில் காலமானார். இவர்,

06

## சென்னை விமான நிலையத்தில் வெள்ளம்

சென்னையில் பெய்த கடும் மழை மற்றும் மிக்ஜாம் புயலால் வீதிகள் நீரில் மூழ்கி, விமான நிலையமும் வெள்ளத்தில் மூழ்கியது. இதனால், விமானங்களுக்குள் வெள்ளநீர் புகுந்தன. மோசமான காலநிலையல் அங்கு மின்சாரமும் தடைப்பட்டது.

நான்கு மணிநேரத்தில், சராசரியாக 6.7 செ.மீற்றரளவுக்கு மழை பெய்தது. இதனால், தாழ்வான இடங்களில் மழை நீர் புகுந்ததால் தண்டவாளங்கள் வெள்ளத்தில் மூழ்கி, ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. விமான சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

06

## பொலிஸார் பற்றிய மக்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டும்

### பதில் பொலிஸ் மா அதிபர் தென்னகோன்



பொலிஸார் குறித்த பொதுமக்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டுமென பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து பொலிஸ் துறையினருக்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட போதே

06

# நகர்வலம்



## குவைத்தில் நீண்டகாலமாக
# சட்டவிரோதமாக விசா இன்றி தங்கியிருந்த 35 இலங்கை வீட்டு பணியாளர்கள்
## நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

இலங்கைக்கு வரமுடியாமல் குவைத்தில் நீண்ட காலமாக வீசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த 35 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் நேற்று (04) காலை குவைத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இக்குழுவினர் நேற்றுக் காலை 06.35 மணியளவில் குவைத் விமான நிலையத்தில் இருந்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் குவைத்தில் இருந்து இலங்கைக்கு வர முடியாமல் அங்குள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்துள்ள இலங்கையர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டனர். ஒரு ஆண் வீட்டுப் பணியாளரும், 34 வீட்டுப் பெண் பணியாளர்களும் இக்குழுவில் அடங்குகின்றனர். குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம், உள்விவகார அமைச்சு, குடிவரவுத் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இந்த வீட்டுப் பணியாளர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி, வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வழக்குகள் தீர்க்கப்பட்டு, தற்காலிக கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு, விமான பயணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு சம்பளம் மற்றும் பிற சலுகைகளை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை தூதரகம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ட்ரோன்களை பயன்படுத்தி விவசாய திட்டம் முன்னெடுப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



பொலன்னறுவை மெதிரிகிரிய பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கவுடுல்ல நீர்த்தேக்கத்தின் மூலம் விவசாயத்தில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் ஆளில்லா ட்ரோன்களை பயன்படுத்தி விவசாய இரசாயனங்களை தெளிக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சராசரியாக ஒரு ஏக்கருக்கு எண்ணெய் தெளிப்பதற்கு சுமார் 15 நிமிடங்கள் ஆகும். எண்ணெய் பயன்பாட்டின் செயற்திறனை சுமார் 50 வீதம் (சீரான தன்மை அதிக துள்ளியம் மற்றும் குறைவான விரயம்) என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

ட்ரோன்களை பயன்படுத்தி விவசாய நிலங்களுக்கு இரசாயனங்களை தெளிப்பதற்கான சுற்றுச்சூழல் அமைய வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

# புத்தளம்; மின்சார வேலியில் சிக்கி இரு கொம்பன் யானைகள் பலி!
## காணி உரிமையாளர் கைது



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் கருவலகஸ்வெவ தேவநுவர பகுதியில் மின்சார வேலியில் சிக்கி இரண்டு கொம்பன் யானைகள் உயிரிழந்துள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த கொம்பன் யானைகள் இரண்டும் தனிநபர் ஒருவருடைய காணியில் உள்ள மின்வேலியில் சிக்கியே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

35 வயது மதிக்கத்தக்க வாசல என்று அழைக்கப்படுகின்ற கொம்பன் யானை நேற்று முன்தினம் (03) அதிகாலை உயிரிழந்துள்ளதாகவும், 40 வயது மதிக்கத்தக்க வலகம்பா என்று அழைக்கப்படுகின்ற மற்றைய யானை ஒருவாரத்திற்கு முன்பே உயிரிழந்துள்ளதாகவும் கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அதிக வலுகொண்ட மின்சார வேலியை பொறுத்தியமையினாலேயே மேற்படி இரண்டு கொம்பன் யானைகளும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காணியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல்

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் தலைமையில் நாளை 06ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் 'சிறுவர் இலக்கியம்' என்னும் தலைப்பில் சேவுகன் இராசேந்திரன் உரை நிகழ்த்தவுள்ளார்.

# கொழும்பில் 146ஆவது ரிபாய் கந்தூரி நிகழ்வு

**ருஸைக் பாரூக்**



சுல்தானுல் ஆரிபீன் செய்யிதினா அஹ்மதுல் கபீரூர் ரிபாயி அவர்களின் 146வது ஆண்டு ரிபாயி கந்தூரி சங்கைக்குரிய ரிபாய் மௌலானா அல் ஹாஜ் யூ. பி. செய்யித் முஹம்மத் ஆசிக் தங்கல் அவர்களது தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (3) கொழும்பு 12, முஹியத்தீன் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலீபத்துல் ரிபாயி மௌலவி ஏ.சி.ஏ. பளீல் ( காஸிமி), அஜ்வாத் அல் பாஸி அரபிக் கல்லூரி அதிபர் கலீபத்துஷ் ஷாதுலி அஹமத் சூபி (மஹ்ழரி) மற்றும் ரிபாயிய்யா அரபிக் மகளிர் கல்லூரி அதிபர் மௌலவி அப்துல்லா (ரவ்லி) அவர்களின் விசேட சொற்பொழிவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அஹ்சன் மரிக்கார், மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி, கொழும்பு முன்னாள் மேயர் ஓமர் காமில், முன்னாள் பிரதி மேயர் எம். டி.எம். இக்பால், உம்மு சாவியா பள்ளிவாசல் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம், பலஸ்தீனத்தின் முன்னாள் தூதுவர் பௌஸான் அன்வர், வக்ப் சபை தலைவர் எம். ஐ. எம். மொஹிடீன், ரிபாய் தரீக்கா சங்கத்தின் தலைவர் காசிம் மரிக்கார் பாவா, உப தலைவர் ஹனீபா இஷாக், செயலாளர் எம். என். நாசிம், ஏனைய தரீக்காக்களின் பிரதிநிதிகள் உட்பட உலமாக்கள், ஸாதாத்மார்கள், முஹிப்பீன்கள், இஃவான்கள் மற்றும் ரிபாயி தரீக் சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த 09 பேர் கைது

## புத்தளம் கற்பிட்டியில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் கற்பிட்டி தேதாவாடிய பிரதான வீதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 9 பேர் நேற்று (04) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றுலா விடுதியின் உரிமையாளர் உட்பட அங்கு பணிபுரியும் ஊழியர்கள் உள்ளிட்ட 9 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மண்வெட்டி, கோடரி உள்ளிட்ட பொருட்களும், பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இதன்போது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தும்மலசூரிய மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெள்ளவத்தை கடற்கரை சுத்திகரிப்பு
# IDMNC சர்வதேச கல்வி நிறுவனம் பங்கேற்பு





IDMNC சர்வதேச கல்வி நிறுவனம் மற்றும் ஜனனம் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த கடற்கரை சுத்தப்படுத்தல் பணி கொழும்பு வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் (03) மிகச் சிறப்பாக இடம்பெற்றது.இப் இப்பணியில் IDMNC சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி. ஜனகன் சுத்திகரிப்பு பணியில் கலந்து கொண்டதுடன் கல்வி நிறுவனத்தின் ஊழியர்களும் மாணவர்களும் சுற்றுச் சூழல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பிப்பதை காணலாம்.

# மஹரகம அபேக்ஷாவுக்கு நிதி திரட்ட இசை நிகழ்ச்சி

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு நிதி திரட்டும் முகமாக கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 'லியோ கிளப்' ஏற்பாடு செய்துள்ள "ඔLAන 3.0" இசை நிகழ்ச்சி இம்மாதம் 12ஆம் திகதி செவ்வாய்கிழமை மாலை 5.30 மணி முதல் கொழும்பு பல்கலைக் கழகத்தின், New Art Theatre இல் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் Chanuka Mora தலைமையிலான YAKA CREW இசைக் குழுவின் நிகழ்ச்சிகளுடன், தினேஷ் கமகே, Kaizer Kaiz, அஷான்யா பிரேமதாச போன்ற பல பிரபல கலைஞர்கள் மேடையை அலங்கரிக்கவுள்ளனர்.

நிகழ்ச்சிக்கான பிரவேச சீட்டுகளை வாங்குவதன் மூலம் அல்லது அனுசரணை வழங்குவதன் மூலம் இந்த புண்ணிய நிகழ்வுக்கு பங்களிப்புச் செய்யுமாறு கொழும்பு பல்கலைக் கழக விஞ்ஞானபீட லியோ கழகம் உங்களை அன்புடன் அழைக்கிறது.

**மேலதிக தகவலுக்கு;**
**சதரு 076 463 4612**
**விஹங்கா 070 484 0800**
**அப்சாரி 077 267 7622**

# இ.தொ.கா ஏற்பாட்டில் செயலமர்வு










சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் (ILO) பங்களிப்புடன் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஏற்பாட்டில் நான்கு நாள் செயலமர்வு அண்மையில் கொட்டகலை காங்கிரஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்றது. வேலைத்தலங்களில் பாதுகாப்பும், சுகாதாரமும் எனும் தலைப்பிலான விழிப்புணர்வு செயலமர்வில் நடைமுறையிலுள்ள தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொழில் நடவடிக்கைகளின்போது எதிர்நோக்கும் சவால்கள், தொழில் சார் பாதுகாப்பும் மற்றும் சுகாதாரத்தை செயல்படுத்தும் முறைகள், தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தின் பொறுப்புக்கள் என்பன குறித்து இதில் மிக விரிவாக ஆராயப்பட்டன.

இச்செயலமர்வில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த 200 தொழிலாளர் அங்கத்தவர்களும் 70 இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் சாஹிரா மாணவர்கள் சா/த பரீட்சையில் சிறந்த பெறுபேறு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

அண்மையில் வெளியான க.பொ.த (சா.த) பரீட்சையில் வலய மட்டத்தில் சிறந்த பெறுபேறுகள் பெற்று புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி புத்தளம் கல்வி வரலாற்றில் சாதனை படைத்துள்ளது.

இம்முறை கல்லூரி மாணவர்களில் 05 பேர் 09 ஏ சித்திகளையும், 04 மாணவர்கள் 08 ஏ சித்திகளையும், 03 மாணவர்கள் 07 ஏ சித்திகளையும், 05 மாணவர்கள் 06 ஏ சித்திகளையும், 11 மாணவர்கள் 05 ஏ சித்திகளையும் பெற்றுள்ளதோடு 86 வீதமான சித்திகளைப்பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கு காரணமாக இருந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பகுதித் தலைவர் எஸ்.பீ.செய்யத் அஹ்மத், உதவிப் பகுதி தலைவர் எச்.எச்.எம். சஜீத் மற்றும் இதற்காக பங்களிப்பு செய்த பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் கல்லூரி நிருவாகம் சார்பாக அதன் அதிபர் ஐ.ஏ.நஜீம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# வெலிகம அறபா தேசிய பாடசாலை சிறந்த பெறுபேறு
## 07 மாணவர்கள் சகல பாடங்களிலும் 'A' சித்தி

**வெலிகம தினகரன் நிருபர்)**

வெளியாகிய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றின்படி, மாறை / வெலிகம அறபா தேசிய பாடசாலை சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.டி.எம். முதஹ்ஹர் தெரிவித்தார். தோற்றிய மாணவர்களுல் 77% வீதமான மாணவர்கள் சித்தியடைந்து க.பொ.த. உயர்தர கற்கை நெறிகளைத் தொடர தகுதி பெற்றுள்ளனர்.இவர்களுல் 7 மாணவர்கள் சகல பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளனர். ஒரே தடவையில் 7 மாணவர்கள் இவ்வாறு சகல பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளமை இதுவே முதற் தடவையாகும் எனவும் அதிபர் தெரிவித்தார்.

பாத்திமா நுஸ்கா நூஹுல் ரிஜா, பாத்திமா அம்னா வாஸில் அஹ்மட், பாத்திமா ஷத்னா ஸைனுல் இப்ஹாம், பாத்திமா முகம்மது ரிஸ்வி, பாத்திமா நுஹ்லா முகம்மது ஆகில், பாத்திமா பஹ்மா முஹம்மது ஜஸ்லி மற்றும் ஸபிய்யா மர்யம் முகம்மது ரிஸ்மி ஆகிய மாணவிகளே இவ்வாறு சகல பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளவர்களாவர். மேலும் எட்டு "ஏ", 7 "ஏ" , 6 "ஏ" , மற்றும் 5 "ஏ", பெற்றவர்களும் கணிசமானவர்கள் உள்ளனர்.

சித்தியடைந்த அனைவர்களுக்கும் இதே பாடசாலையில க.பொ.த உயர்தர வகுப்புகளில் கற்கை நடவடிக்கைகளை தொடர நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

# சர்வதேச மொழிக் கல்வியை நாடு முழுவதும் விரிவுப்படுத்த வேண்டும்

சர்வதேச மொழிக்கல்வியை நாடு முழுவதும் விரிவுப்படுத்த வேண்டுமென அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.ஹோமாகம சுபாரதி மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளியரங்க பீடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். சுபாரதி மகா வித்தியாலயம் இப்பிரதேசத்தில் உள்ள சிறந்த மாதிரிப் பாடசாலைகளில் ஒன்றாகும். குறிப்பாக மேல்மாகாண பிரதம செயலாளர் பிரதீப் யசரத்னவின் வழிகாட்டல் மற்றும் நிதியுதவி மற்றும் அதிபர் உட்பட ஆசிரியர் ஊழியர்களின் பங்களிப்புடன் ஹோமாகம பிரதேசத்தில் சுபாரதி பாடசாலையிலேயே சிறந்த ஆரம்பப் பிரிவு காணப்படுகிறது. இக்கல்லூரியில் உள்ள ஸ்மார்ட் டிஜிட்டல் வகுப்பறைகள் நாட்டின் எந்தப் பாடசாலைகளுக்கும் எடுத்துக்காட்டாக அமையும்.

நமது நாட்டில் நீண்டகாலமாக இருந்த பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறை 2024 ஆம் ஆண்டு முதல் புதிய தேசிய கல்விக் கொள்கையின் கீழ் மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வி முறையாக மாற்றப்படும். 2024 ஆம் ஆண்டில் ஒரு புதிய கல்விக் கொள்கை செயல்படுத்தப்படும். அங்கு வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் செயல்பாடுகளுக்கான மதிப்பீடுகள் செய்யப்படும், மேலும் இது நல்ல ஆளுமை கொண்ட குடிமக்களை உருவாக்கும். இந்த சிறு பள்ளி குழந்தைகளின் வாழ்க்கைக்கு புதிய மதிப்பை சேர்க்கும் நடனம், இசை, ஓவியம், நாடகம், நாடகக் கலைகள் போன்ற அழகியல் அம்சங்களுக்கு அங்கு அதிக இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் விசேட கவனம் செலுத்தி இக்கல்லூரியின் புதிய வெளியரங்கம் சிறுவர்களுக்காக இன்று திறந்து வைக்கப்படுகிறது. உலகக் கல்வி தீவிரமாகவும் வேகமாகவும் மாறி வருகிறது. கல்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன, குறிப்பாக செயற்கை நுண்ணறிவு பயன்பாடு மூலம்,எங்களைப் போன்ற சிறிய பொருளாதாரம் உள்ள நாடுகள் ஆங்கிலம் உள்ளிட்ட வெளிநாட்டு மொழிகளில் குழந்தைகளின் கற்றலை மேலும் மேம்படுத்த வேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த திறமையுடன் சித்தியடைந்த சுபாரதி வித்தியாலயத்தின் பெரும்பாலான பிள்ளைகள் இடைநிலைக் கல்விக்காக ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்திற்கு செல்கின்றனர். இது ஆசியாவின் மிகப்பெரிய இடைநிலைக் கலப்புப் பாடசாலையாகும். ஹோமாகம – மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி மாணவர்கள் இம்முறை வெளியான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில், சர்வதேச மொழிகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

**பெறுபேறுகளின் விபரங்கள்**

| பாடம் | தோற்றியோர் | சித்திபெற்றோர் | வீதம் | அதிவிசேட சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| ஆங்கிலம் | 769 | 768 | 99.87% | 452 | 191 |
| கொரியன் | 60 | 58 | 96.06% | 20 | 20 |
| ஜப்பான் | 23 | 23 | 100% | 13 | 05 |
| பிரெஞ்சு | 20 | 20 | 100% | 11 | 02 |
| ஹிந்தி | 02 | 02 | 100% | 02 | – |

# மலையக பெறுபேறுகள் பெரும் மகிழ்ச்சி தருகிறது

**இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்**

கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சை (2022) பெறுபேறுகளில் கடந்த வருடங்களை விட, இம்முறை கல்வி மட்டம் முன்னேற்றம் அடைந்துள்ளதையிட்டு பெருமிதம் கொள்வதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நாட்டில், மும்மொழி பாடசாலைகளிலும் மாணவர்களின் கற்றல் ஆற்றலை காண்கிறேன். அதேநேரம் மலையக பாடசாலைகளின் பெறுபேறுகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன .

கல்வியில் முழுமைத்துவம் பெற்ற ஒரு சமூகம் உருவாக வேண்டும் என்ற எனது கனவு நிச்சயமாக பயன் தரும்.இந்த நம்பிக்கையில் இன்னும் ஒரு வெற்றியை காண்கிறேன்.

2022 ம் ஆண்டு பரீட்சைக்கு தோறியற் சகல மாணவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நல்வாழ்துக்கள்.

# சென்னைக்கு அருகில் மிக்ஜாம் புயல்

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று (04)ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், இன்று (05) தென்மேற்கு வங்கக்கடலில் புயலாகவும் மாறும் எனத் தெரிவிக்கப்படகிறது.

இந்நிலையில், மிக்ஜாம் புயல் தற்போது சென்னையிலிருந்து 210 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

**சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம்**

# நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்களை அமுல்படுத்துவதே உரிய தீர்வை தரும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுக்க நடைமுறைக்குச் சாத்தியமான தீர்மானங்களை மேற்கொண்டுஅவற்றைநடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என, அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தரவுகளை முன்வைப்பதால் மாத்திரம் அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்றும், பாலியல் கல்வி முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலமே சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் மகளிர்,சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் தரப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் சபையில் குறிப்பிடப்பட்டன. ஆனால் அத்தகைய பிரச்சினைகளின் உண்மை தன்மை அம்பலப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் பாலியல் கல்வி கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

பாலியல் கல்வி மற்றும் உறவு நிலைகளின் முக்கியத்துவம் தொடர்பில் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் பாலியல் தொடர்பான அறிவு அல்லது தெளிவு சமூக மட்டத்தில் மிகவும் குறைவான மட்டத்திலேயே உள்ளதை அவதானிக்க முடிகிறது.

# தட்டுப்பாடின்றி சீரான சீனி விநியோகம்

வடமாகாண மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சீனி விநியோகத்தை சீர்செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்வதற்கு போதியளவு சீனி இல்லாமல் இருப்பதாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வடக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பொது முகாமையாளரினால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதுதொடர்பாக, துறைசார் அமைச்சருடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடிய நிலையில், மேலதிகமாக 100 மெற்றிக்தொன் சீனியை அனுப்புதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இளம் வீரர்களை கௌரவிக்க தேசிய இளைஞர்கள் விருது



நாட்டில், வளர்ந்து வரும் இளம் வீரர்களை கௌரவிக்கும் வகையில், 'தேசிய இளைஞர் வீரர்கள் விருது' அறிமுகப்படுத்தப்படவுள்ளது. எதிர்கால சமுதாயத்தில் மிகுந்த சவால்களை எதிர்கொள்ளும் வகையில், அதிகூடிய திறன்களுள்ள தலைமைப் பண்புகளைக் கொண்ட ஆற்றல்மிக்க, பல்துறை மற்றும் ஒழுக்கமான குடிமக்களாக இளைஞர்களை உருவாக்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

ரண்டம்பேயிலுள்ள தேசிய மாணவர் பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய மாணவர் படையணியின் 41வது தகுதிகாண் அதிகாரிகளின் சின்னம் அணிவிக்கும் அணிவகுப்பு மரியாதை நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில், 2022 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 10 பெண் உத்தியோகத்தர்கள் உட்பட 64 தகுதிகாண் உத்தியோகத்தர்கள் தங்களது பயிற்சியை நிறைவு செய்தமைக்காக இரண்டாம் லெப்டினன்ட் தரத்திலான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டனர்.

142 ஆண்டுகால தேசிய மாணவர் படையணியின் வரலாற்றில் முதன்முறையாக இம்முறை, அதிகாரிகளுக்கு வழங்கப்படும் ஆணையிடும் வாள்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பதில் பாதுகாப்பு அமைச்சர் இவற்றை வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் திஸாநாயக்க, விமானப்படையின் பிரதி பிரதம அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் வருண குணவர்தன, தேசிய மாணவர் படையணியின் 06

# வடக்கு கிழக்கு மக்களின் நிலைப்பாட்டை அங்குள்ள எம்பிக்கள் பிரதிபலிப்பதில்லை

**சபையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



வடக்கு, கிழக்கில் அங்குள்ள தமிழ் பிரதிநிகளை விடவும் பத்து மடங்கு அதிகமான சேவையை, தாமே செய்துள்ளதாகவும் தமிழ் மக்களின் உண்மையான நிலைப்பாட்டை அங்குள்ள எம்பிக்கள் பிரதிபலிப்பதில்லை என்றும் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவே அவர்கள் பாராளுமன்றத்தில் இனவாதம் பேசுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, சிங்கள மக்களை அழித்து நாட்டை பிளவுபடுத்துவது பிரபாகரனின் நோக்கமல்ல என்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்து வரலாற்றை அழிக்கும் நோக்கிலேயே அவர் செயற்பட்டதாகவும் இந்து மத தமிழ் தலைவர்களை அவர் படுகொலை செய்தமைக்கும் அதுவே காரணம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் தமிழ் பிரதிநிதிகள் முதலில் கற்றுக் கொள்ள வேண்டும் என சபையில் தெரிவித்த அவர், சுமந்திரனின் கருத்துக்கள் முற்றிலும் தவறானது என்றும் தன்னை கொலை செய்ய வந்தவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படும்போது, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத சுமந்திரன், ஏனையவர்களின் விடயத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை மற்றும் மகளிர், சிறுவர் பாதுகாப்பு அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நீதியமைச்சராக நான், பதவி வகிப்பதையிட்டு வெட்கமடைய வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம் .ஏ.சுமந்திரன் நீதியமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார். அது தற்போது பேசு பொருளாக மாறியுள்ளது.

மட்டக்களப்பு பகுதியிலுள்ள பிக்கு ஒருவரின் பெயரை குறிப்பிட்டு அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் என்மீது குற்றம் சாட்டியுள்ளார்.

நீதியமைச்சரால் அவரை எவ்வாறு கைது செய்ய முடியும்?. வெறுக்கத் தக்க கருத்தை அந்த மத குரு குறிப்பிட்டிருந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள். விசாரணைகளை பொலிஸ் மேற்கொள்ளும் என்று நான் குறிப்பிட்டேன், 06

# காஸாவை பிரேதங்களின் பிரதேசமாக்கும் பிரயத்தனங்களை நிறுத்த வேண்டும்

**இஸ்ரேலின் எதேச்சாதிகாரம் எல்லை மீறுகிறது**



போக்குகளை கடுமையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த ரிஷாட்பதியுதீன் எம்,பி,காஸாவை கைப்பற்றும் திட்டங்களை கைவிட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

சமாதான உடன்படிக்கையை மீறியுள்ள இஸ்ரேல் மீண்டும் கொலைகாரன்போல் செயற்படத் தொடங்கியுள்ளது. குழந்தைகள்,பெண்கள் மற்றும் அப்பாவிகளைக் கொன்று குவித்து காஸாவை பிரேதங்களின் பிரதேசமாக்கும் யூத அரசின் போக்குகள் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. உலகுக்கே ஜனநாயகத்தை போதிக்கும் மேற்கு நாடுகள் இஸ்ரேலின் காட்டுமிராண்டிச் செயற்பாடுகளை கண்டிக்காதுள்ளன. இவ்விடயத்தில் இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளை நன்றியுடன் நோக்குகிறேன்.

இருந்தாலும், இஸ்ரேலுக்கு இலங்கை தொழிலாளர்களை அனுப்பும் கேவலமான முடிவை அரசாங்கம் மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் மத்திய கிழக்கு நாடுகளின் உறவு, 06

# பத்து பேர்ச் காணித்துண்டு திட்டத்தை அவிசாவளையில் ஆரம்பியுங்கள்



பெருந்தோட்ட மக்களுக்கான பத்து (10) பேர்ச் வீடமைப்பு காணி திட்டம் முதலில், கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என,தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார். கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஏற்பட்ட தீவிபத்தின் சேதங்களை பார்வையிட சென்றபோதே மனோ கணேசன் எம்பி இவ்வாறு கூறினார் ஊடகங்களுக்கு அவர் கூறியதாவது :

இங்கே இடம்பெற்றுள்ள தீவிபத்தில் எட்டு வீடுகள் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. இன்னமும் நான்கு வீடுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகி உள்ளன. இங்கே ஏறக்குறைய இருபது குடும்பங்கள் வாழ்வதாக அறிகிறேன். இந்த இருபது குடும்பங்களுக்கும் வீடுகளை கட்டிக்கொள்ள தலா பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் வழங்கப்பட வேண்டும்.

பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வீடமைக்க காணி வழங்குவதாகக் கூறி, நானூறு கோடி ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார்.

இங்கே அனைவரும் இந்த தோட்டத்தில் பணி புரிபவர்கள் அல்ல. வெளியில் மாற்று தொழில் செய்பவர்களும் இங்கே உள்ளனர். ஆனால், அனைவரும் இங்கேதான் பரம்பரை பரம்பரையாக 06

# 5 இலட்சம் பாவனையாளர்களின் மின் இணைப்புகள் துண்டிப்பு

**கட்டண அதிகரிப்பால் மக்களுக்கு வந்த நிலை**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



மின் கட்டண அதிகரிப்பையடுத்து இதுவரை ஐந்து இலட்சம் மின் பாவனையாளர்களின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐம்பது இலட்சம் மின் பாவனையாளர்களின் மின் இணைப்பை துண்டிப்பதற்கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபை தற்போது அதிக இலாபம் ஈட்டி வருகின்றது. இந்நிலையிலும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட எதிர்க்கட்சி தலைவர், அந்த வகையில் நீர் மின் உற்பத்தி மூலம் மின்சாரசபை பெற்றுவரும் இலாபம் தொடர்பில் சபைக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்,

மின்சார சபை இலாபமீட்டி வருவதால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்ட போது அதனை நாம் எதிர்த்தோம்.

தற்போது அதிக மின் கட்டணம் காரணமாக இதுவரை ஐந்து இலட்சம் பாவனையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று 50இலட்சம் பேருக்கு மின்சார துண்டிப்புக்கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை தெரியவருகிறது.

முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் 06

# மாணவர்களை வெளியேற உத்தரவு

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

இதன்படி, மருத்துவ பீட விடுதிகள் தவிர்ந்த பல்கலைக் கழகத்தின் அனைத்து விடுதிகளும் மூடப்பட்டிருக்கும். அதேவேளை அனைத்து

மாணவர்களும் தத்தமது விடுதிகளை விட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் பாதுகாப்பு கருதியே பல்கலைக்கழக நிர்வாகம் இம்முடிவை எடுத்துள்ளது. நிலைமைகள் சீரான நிலைக்கு வந்த பின்னர் மூடப்பட்ட பீடங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 19ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 20

### குறள் தரும் சிந்தனை



இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு

கொலை செய்வதுபோல நேற்றுக் கொடுமைப்படுத்திய வறுமை, தொடர்ந்து இன்றைக்கும் வராமல் இருக்க வேண்டுமே என்று வறியவன் ஏங்குவான்.

# வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள புயல்!

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள 'மிக்ஜம்' (Michaung) புயல் தமிழகத்தின் வடக்கு மற்றும் ஆந்திர பிரதேசத்தின் தெற்கு பிரதேசங்கள் ஊடாக இன்று கரையைக் கடக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடந்த வாரம் இத்தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவானதுடன் நேற்றுமுன்தினம் முதல் தீவிரமடைந்து புயலாக மாறி நகர்ந்து கொண்டிருக்கிறது.

நேற்று நண்பகலாகும் போது யாழ்ப்பாணத்திற்கு தென்கிழக்காக 440 கிலோ மீற்றர் தூரத்தில் வங்காள விரிகுடாவில் காணப்பட்ட இப்புயல் கரையைக் கடக்கும் போது ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் முகம்கொடுப்பதற்கான முன்னேற்பாடுகளை தமிழக மற்றும் ஆந்திர மாநில அரசுகள் மேற்கொண்டுள்ளன.

இவ்வாறான சூழலில் இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள முன்னெச்சரிக்கையில் யாழ்ப்பாணத்திற்கு வடக்காக உள்ள கடற்பரப்பில் அடுத்துவரும் 24 மணித்தியாலயங்களுக்கு கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

அதேநேரம் மன்னார் முதல் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்பு கொந்தழிப்பாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், அப்பரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மினவர்களை உடனடியாகக் கரைக்கோ அல்லது பாதுகாப்பான பிரதேசங்களுக்கோ செல்லுமாறும் கேட்டுள்ளது.

அதனால் வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னெச்சரிக்கை குறித்து கடற்றொழிலாளர்கள் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது இன்றியமையாததாகும்.

வங்காள விரிகுடாவில் இத்தாழமுக்கம் உருவானதைத் தொடர்ந்து இலங்கையின் பல பிரதேசங்களிலும் மழையுடன் கூடிய காலநிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் சில தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள நிலைமை ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோடு மலையகத்தின் சில பிரதேசங்களில் சிறு மண்சரிவுகளும் பதிவாகியுள்ளன.

இதேவேளை நாட்டின் பல பிரதேசங்களுக்கும் பலத்த மழை கிடைக்கப்பெற்று வருவதற்கு இப்புயல் காரணமாக அமைந்துள்ளதாக போதிலும், அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு இச்சீரற்ற காலநிலை நீடிக்குமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் மக்கள் விழிப்புடனும் முன்னவதானத்துடனும் செயற்படுவது அவசியம். சீரற்ற காலநிலையில் கடும் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. அதனால் மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் அதிகம் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் போது மண்சரிவுகள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலும் நிலவுகிறது.

இந்நிலையில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றது. மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் தற்போதைய சூழலில் முன்னவதானத்துடன் செயற்பட வேண்டும். கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடாது.

மலையகத்தில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுமாயின் மண்சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம். மண்சரிவு ஏற்படுமாயின் அதற்கு முன்னர் சில முன்னறிகுறிகள் குறித்த பிரதேசத்தில் வெளிப்படும். குறிப்பாக நிலத்திலும் கட்டிடங்களிலும் அவதானிக்கலாம். குறிப்பாக நிலத்திலும் சுவர்களிலும் திடீரென வெடிப்புக்கள் ஏற்படும். அவை பிளவுகளாக விரிவடையலாம். நிலத்தில் புதிதாக நீரூற்றுகள் உருவாகலாம். அவற்றில் சேறு சகதியுடன் நீர் வெளிப்படலாம்.

அதேநேரம் ஏற்கனவே காணப்படும் நீரூற்றுகள் திடீரென மறைந்து போகலாம். உயரமான மரங்களும் மின் மற்றும் தொலைபேசிக் கம்பங்களும் சரிவடையலாம். இவை மண்சரிவுக்கான முன்னறிகுறிகளே அன்றி வேறில்லை. அதனால் அவ்வாறான அறிகுறிகள் தென்படுமாயின் தாமதியாது அப்பிரதேசத்தை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு பிரதேசவாசிகள் செல்ல வேண்டும். அந்த அறிகுறிகள் குறித்து பிரதேச கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தும் தவறக்கூடாது.

மேலும் இப் புயல் தமிழகத்தின் வடக்கு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் தெற்கு பிரதேசங்கள் ஊடாகக் கரையை கடந்தாலும் இலங்கையின் சில பிரதேசங்களில் அவ்வப்போது பலத்த காற்று வீச முடியும். அதனால் உயரமான மரங்கள் மற்றும் கம்பங்கள் குறித்து முன்னவதாத்துடன் செயற்படவும் தவறலாகாது. அத்தோடு இடி மின்னல் தாக்கம் குறித்தும் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் என்று அனரத்த முகாமைத்துவ நிலையம் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆகவே தற்போதைய சீரற்ற காலநிலையால் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் குறைத்து தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அது மிகவும் இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை-சவூதி இராஜதந்திர உறவு வலுவடைவதில் தூதுவர் காலித் அல் கஹ்தானி ஆற்றுகின்ற பங்களிப்பு

சவூதி அரேபியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட கால வரலாற்று கலாசார உறவுகள் இருந்தாலும், இராஜதந்திர ரீதியான உறவுகள் 1974 இலேயே ஆரம்பிக்கப்பட்டன. அன்றுமுதல் சுமார் 49 வருடங்களாக இரு நாடுகளும் நட்பு நாடுகளாகவே வலம்வருகின்றன.



இந்த இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில் பல முயற்சிகளை செய்து வருகின்றார் தற்போதைய இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலிதுல் கஹ்தானி.

1975 இல் ரியாத்தில் பிறந்த தூதுவர் 1997 ஆம் ஆண்டு மன்னர் சுஊத் பல்கலைக் கழக அரசியல் விஞ்ஞான பீடத்தில் கலைமாணி பட்டத்தையும், அதே துறையில் 2006 ஆம் ஆண்டு அலெக்ஸாண்ட்ரியா பல்கலையில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

பின்னர் வெளிவிவகார அமைச்சின் கீழ் இயங்கும் இராஜதந்திர கற்கைகளுக்கான இளவரசர் சுஊதுல் பைசல் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறியையும் பூர்த்தி செய்து இராஜதந்திர ரீதியான ஆளுமைப் பண்புகளை தனக்குள் உருவாக்கிக் கொண்டார்.

அரபு, ஆங்கிலம், பிரெஞ்ச் மொழிகளிலும் இவர் தேர்ச்சி பெற்றுள்ளார். கல்விப் பயணத்தில் தன்னை செதுக்கிக் கொண்ட அவர் தூரநோக்கு, பரந்து விரிந்த சிந்தனை, துல்லியமான செயற்திட்டம், விவேகத்துடனான வேகம் போன்ற பண்புகள் மூலம் நிர்வாக ரீதியாகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். சவூதி வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரங்களுக்கான பிரிவில் நான்கு வருடங்கள் கடமையாற்றியதைத் தொடர்ந்து அலெக்ஸாண்டிரியாவில் உள்ள சவூதி அரேபியாவின் துணைத் தூதரகம், பிலிப்பைன்ஸ், கனடா போன்ற நாடுகளிலுள்ள சவூதி அரேபிய தூதரகங்கள் போன்றவற்றில் பணியாற்றிய இராஜதந்திர அனுபவங்களுடன் கடந்த வருடம் ஜூன் மாதம் 21 ஆம் திகதி இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவராக கடமைகளைப் பொறுப்பேற்றார். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், திணைக்களத்





தலைவர்கள் போன்றோருடன் அவர் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான சந்திப்புக்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் என்பதில் சந்தேகமில்லை.



அவர் தனது இராஜதந்திர நடவடிக்கைகள், நகர்வுகள் மூலம் குறுகிய காலத்துக்குள் இலங்கை ஜனாதிபதி, அரசாங்கம், திணைக்கள உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் போன்றோரிடம் பெரும் செல்வாக்கைப் பெற்று வருகின்றார். அண்மையில் தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (SLIIT) கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் தூதுவர் கலந்து சிறப்பித்தமை இதற்கு சிறந்த உதாரணமாகும்.

அவரது வருகையின் பின்னரான மிகக் குறுகிய காலத்திற்குள் சவூதியின் மிக முக்கியமான தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். அமைச்சர்கள், வான்படை அதிகாரிகள், சவூதி அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள் என பலரும் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். அதுமட்டுமன்றி சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சு இலங்கையில் தேசிய ரீதியில் நடத்திய முதலாவது மாபெரும் அல்குர்ஆன் மனனப் போட்டியும் இவரது காலத்தில், இவரது தலைமையில் நடந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்காலத்தில் இந்த இரு நாடுகளுக்கிடையில் வலுவான சமூக, பொருளாதார, உறவுகள் வலுப்பெறுவதில் தூதுவரின் வகிபாகம் நிச்சயம் தாக்கம் செலுத்தும்.

**அபூ அரீஜ் பாஹிர்....**

# மிசோரம் மாநில சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு கிடைத்த படுதோல்வி!

இந்தியாவின் ஐந்து மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தல்களில் மிசோரம் மாநிலத்தில் தொங்கு சட்டசபைதான் அமையும் என்கின்ற அத்தனை தேர்தல் கருத்துக் கணிப்புகளையும் தவிடிபொடியாக்கி ஸோரம் மக்கள் இயக்கம் (Zoram People's Movement ZPM) 26 இடங்களுடன் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து ஆட்சி அமைக்கிறது.

மிசோரம் மாநிலத்தில் மொத்தம் 40 சட்டசபைத் தொகுதிகள் உள்ளன. இம்மாநிலத்தில் பெரும்பான்மைக்கு தேவை 21 இடங்கள் மாத்திரமே.

மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சியாக மிசோ தேசிய முன்னணி (Mizo National Front MNF)



ஆட்சி முதல்வர் ஜோரம்தங்கா தலைமையில் நடைபெற்றது.

மிசோரம் மாநில சட்டசபைத் தேர்தல் தொடர்பான அனைத்து கருத்துக் கணிப்புகளுமே தொங்கு சட்டசபைதான் அமையும். ஆளும் எம்.என்.எஃப் மற்றும் ஸோரம் மக்கள் இயக்கம் ஆகியவை அதிகமான இடங்களைக் கைப்பற்றும். காங்கிரஸ் அல்லது பா.ஜ.கவுடன் இணைந்து கூட்டணி ஆட்சியைத்தான் அமைக்கும் என அடித்துக் கூறின. ஆனால் தேர்தல் களத்தில் பா.ஜ.கவிடம் இருந்து ஆளும் எம்.என்.எஃப் விலகியே நின்றது.

மிசோரம் மாநில மக்களும் மணிப்பூரின் குக்கி இன பழங்குடிகளும் தொப்புள் கொடி உறவானவர்கள். மணிப்பூரில் குக்கி இன மக்கள், மைத்தேயி மக்களால் ஒடுக்கப்பட்டு படுகொலைக்குள்ளான போது மத்திய பா.ஜ.க அரசு கண்டு கொள்ளவும் இல்லை, மணிப்பூர் வன்முறையை ஒடுக்கவும் இல்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது.

**ஸோரம் மக்கள் இயக்கம் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி; மொத்தம் ஐந்து மாநிலங்களில் மூன்று மாநிலங்களைக் கைப்பற்றியது பா.ஜ.க!**



இந்தக் கோபம் மிசோரம் மாநில தேர்தல் களத்தில் எதிரொலித்துள்ளது. ஸோரம் மக்கள் இயக்கம் புதிய ஆட்சியை அமைப்பது உறுதியாகி உள்ளது. காங்கிரஸ் கட்சி ஒரு இடத்தில்தான் நேற்றுப் பிற்பகல் முன்னிலை வகித்தது. பா.ஜ.க 2 இடங்களில் மட்டுமே முன்னிலை வகித்தது.

இதேவேளை மொத்தம் ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் மூன்று மாநிலங்களை பா.ஜ.க கைப்பற்றியுள்ளதால், பிரதமர் நரேந்திர மோடி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளதாக அக்கட்சி முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

சத்தீஷ்கர், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களிலேயே பா.ஜ.க ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

# வடமத்திய மாகாணத்தில் கால்நடை வளத்தை பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கை அவசியம்!



வடமத்திய மாகாணத்தில் இருந்து ஒரு வாரத்தில் மூன்று கொள்கலன்கள் நிரம்பிய மாட்டிறைச்சி வெளிமாகாணங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. இதன் காரணமாக வடமத்திய மாகாணத்தில் கால்நடை வளம் குறைந்து கொண்டு செல்கின்றது. எனவே இம்மாகாணத்தில் கால்நடைகள் வளத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணசபை கூட்ட மண்டபத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தின் போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

பசும்பால் அதிகமாக உற்பத்தி செய்வதில் அனுராதபுரம் மாவட்டம் முதன்மை இடத்தை வகிப்பதாக ஆளுநர் தெரிவித்ததுடன், "குழந்தைகளுக்கான பால்மா மற்றும் ஏனைய பால்மா வகைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதன் மூலம் எமது நாட்டுக்கு பாரிய நிதி செலவாகின்றது. அதனால் உயர்தர பசும்பால் உற்பத்தி செய்வதன் மூலம் மக்களின் போஷாக்குத்தன்மையை மேம்படுத்த முடியும். நாட்டின் பணமும் சேமிக்கப்படும்" எனவும் குறிப்பிட்டார்.

"கால்நடை வளம் அழிக்கப்பட்டு வருவதாக சமீப காலமாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. எனவே இம்மாகாணத்தில் கால்நடை வளத்தை பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கையும் தீர்மானமும் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் உரிய சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தி, பொலிசாரின் உதவியுடன் இது தொடர்பில் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களின் வாழ்வாதாரம் கால்நடைகளிலேயே தங்கியுள்ளது. இந்த கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி உண்ணும் போது அந்தப் பண்ணையாளர்கள் எவ்வாறு வாழ்வது? வடமத்திய மாகாணத்தில் 275,000 கால்நடைகள் உள்ளன. வருடத்திற்கு 100,000 கன்றுகள் ஈன்றெடுக்கப்பட்டாலும், கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்குமென்று கூற முடியாது. காரணம் வருடத்திற்கு 75,000 கால்நடைகள் கொல்லப்படுவதாக தெரியவந்துள்ளது.



வாரத்தில் மூன்று கொள்கலன்கள் அளவில் இறைச்சி மாகாணத்திற்கு வெளியில் கொண்டுசெல்லப்படுதாகத் தெரியவந்துள்ளது. அவை சட்டபூர்வமற்ற முறையிலான இறைச்சி எனவும் மாகாண எல்லைக்குள் மாத்திரம் இறைச்சியைக் கொண்டு செல்ல முடியும். மாகாணத்திற்கு வெளியில் இறைச்சி கொண்டு செல்லப்படுவது சட்டவிரோதம்" எனவும் ஆளுநர் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் 27 மாடறுக்கும் மடுவங்களும், பொலன்னறுவை மாவட்டத்தில் 05 மாடறுக்கும் மடுவங்களுமாக 32 கூடங்கள் உள்ளன. சட்டபூர்வமாக கால்நடைகளை இறைச்சிக்கு அறுப்பதைத் தவிர, திருட்டுத்தனமாக கால்நடைகள் அறுக்கப்பட்டு மேல்மாகாணம் உள்ளிட்ட பல வெளிமாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

**மதார் தம்பி ஆரிப்...**
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# வெள்ளத்தில் மூழ்கியது சென்னை மாநகரம்!

**மிக்ஜாம் புயல் காரணமாக தொடர்ச்சியான பலத்தமழை!**



மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னையில் பல்வேறு இடங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. திரும்பிய திசையெல்லாம் மழைநீர் சூழ்ந்துள்ளதால், சென்னை வெள்ளத்தில் தத்தளிக்கிறது. பள்ளிக்கரணை, மேடவாக்கம் சுற்றுவட்டாரப் பகுதி வெள்ளத்தினால் ஸ்தம்பித்துப் போயுள்ளது.

பள்ளிக்கரணையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் தரைதளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அவற்றை மீட்பதற்கு அதன் உரிமையாளர்கள் போராடினர்.

தகவலறிந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் கார்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். கயிறு உள்ளிட்டவற்றின் மூலம் தரைத் தளத்தில் நின்று கொண்டிருக்கும் மற்றைய கார்களை பத்திரப்படுத்தினர். மிக்ஜாம் புயலால் சென்னையில் பலத்த காற்றுடன் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்றும் பலத்தமழை பெய்தது. பல இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. ரயில் நிலையங்களிலும், தண்டவாளங்களிலும் தண்ணீர் தேங்கியதாலும், புயல் காற்று வீசுவதாலும் ரயில்களை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் சென்னை சென்ட்ரல்_ அரக்கோணம், சென்னை கடற்கரை_ செங்கல்பட்டு வழித்தடங்களில் புறநகர் ரயில் சேவை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதே போல சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் கோவை சதாப்தி எக்ஸ்பிரஸ், கோவை எக்ஸ்பிரஸ், மைசூர் சதாப்தி, பெங்களூரு பிருந்தாவன் எக்ஸ்பிரஸ், பெங்களூர் ஏசி டபுள் டக்கர் எக்ஸ்பிரஸ், திருப்பதி சப்தகிரி எக்ஸ்பிரஸ் ஆகிய 6 விரைவு ரயில்களும் ரத்து செய்யப்பட்டன.

விமான நிலையத்திலும் வெள்ளநீர் தேங்கியுள்ளது. மக்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகினர். பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# அமலோற்பவ மாதா திருநாள்

## மாசற்ற வாழ்வுக்கான அழைப்பை விடுக்கும் பெருவிழா டிசம்பர் 8ல்

மார்கழி மாதம் என்றாலே பண்டிகைகளின் மாதம். கொண்டாட்டங்களில் மாதம். மற்றும் ஒரு வருடத்தை வரவேற்பதற்காக மிகுந்த சுறுசுறுப்புடன் எம்மை ஆயத்தப்படுத்தும் மாதம் இது.

அத்து நம் ஆண்டவர் இயேசு பூமியில் அவதரித்த நத்தார் பண்டிகைக்கான மாதம்.





"இதோ மகிழ்ச்சியூட்டும் செய்தி! உங்களுக்காக மீட்பர் பூமியில் பிறக்கப் போகின்றார்" என ஆண்டவரின் தூதர் மகிழ்ச்சி தரும் செய்தியை நமக்கு வழங்கிய மாதம். அந்த மகிழ்ச்சி இந்த மாதம் பிறந்ததோடு இன, மத வேறுபாடுகள் இன்றி அனைத்து மனங்களுக்குள்ளும் குடிகொள்ளும் மாதம் இது.

இந்த மகிழ்ச்சியான காலத்தில் தான் கத்தோலிக்கத் திருச்சபையானது டிசம்பர் 8ஆம் திகதி அமலோற்பவ அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகின்றது. மாதா பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும் இந்த திருவிழாவுக்கான அமலோற்பவ மாதா என்ற சிறப்புப் பெயரும் அவருக்குள்ளது.

அமலோற்பவ அன்னை என்பது இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு வழங்கப்படுகின்ற சிறப்புப் பெயரும் மரியாள் பிறப்பு நிலைப் பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார் என்னும் மறையுண்மையை வெளிப்படுத்தும் போதனையுமாகும்.

இந்த மறையுண்மையைக் கத்தோலிக்க திருச்சபை அறிக்கையிடுகிறது பொதுவான கிறிஸ்தவ நம்பிக்கையின்படி ஆதாமினால் தோன்றிய பாவம் மரபுவழியாகத் தொடர்ந்து உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையோடும் இணைந்து பிறக்கிறது.

இது ஜென்மப் பாவம் அல்லது பிறப்புநிலைப் பாவம் என்று குறிப்பிடப்படுகிறது. இப் பாவம் மனிதரை கடவுளின் அருள் நிலையிலிருந்து பிரித்து உலகின் தீய நாட்டங்களுக்கு அடிமை யாக்குகிறது.

கடவுள் உலக மீட்பரின் தாயாகுமாறு மரியாளை தொடக்கம் முதலே தெரிந்துகொண்டார். எனவே, மரியாளுக்கு மிகுதியான அருளைப் பொழிந்து பாவமாசற்ற நிலையில் தாயின் வயிற்றில் கருவாக உருவாகச் செய்தார்.

இதுவே மரியாளின் அமல உற்பவம் என்று அழைக்கப்படுகிறது. மீட்பரின் தாயானதால் மீட்பின் பேறுபலன்கள் மரியாவுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டன.

இயேசுவின் தாய் மரியா பிறப்புநிலைப் பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார் என்னும் மறையுண்மை கிறிஸ்தவ நம்பிக்கையாகத் தொடக்ககாலத் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான். ஆயினும் அந்த மறையுண்மையை அனைத்துலகுக்கும் அதிகாரபூர்வமாக எடுத்துரைத்தவர் திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் ஆவார்

திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் 1854ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி இயேசுவின் அன்னையாகிய மரியாள் பற்றிய மறையுண்மையை வழூவா வரத்தோடு அதிகார பூர்வமாக அறிவித்தார்

புனித கன்னி மரியாள் தாம் கருவில் உருவான முதல் நொடியிலிருந்தே வல்லமைமிக்க கடவுளின் அருளாலும் சலுகையாலும் மனுக்குலத்தின் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டு பிறப்புநிலைப் பாவக் கறை அனைத்தினின்றும் பாதுகாக்கப்பட்டார்.

இன்றைய காலகட்டத்தில் திருவருகைக் காலத்தில் அன்னை மரியாள் நமக்கு வழங்கும் நற்செய்தி என்னவென்றால்,நாம் அனைவரும் மரியாளைப் போன்று அமல உற்பவமாகப் பிறக்கும் பேறு கிடைக்கவில்லை என்றாலும் நம்மாலும் மாசற்றவர்களாக வாழ முடியும். அதற்கான ஆற்றலை நாம் திருமுழுக்கின் மூலம் பெற்றுக் கொண்டுள்ளோம் என்பதே.

நாம் மாசற்றவர்களாக வாழ வேண்டும் என்பதற்காகவே கடவுள் இறைமகன் இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அதனை புனித பவுல் அடிகளார் "நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்." ( எபேசியர் 1:4)என குறிப்பிடுகின்றார்.

கன்னி மரியாள் நம்மைப் போன்று மனிதப் பெண் தான். கடவுள் அவருக்கு கொடுத்த தூய உடலையும் உள்ளத்தையும் பாவத்திலிருந்து தொடர்ந்து தம் வாழ்நாள் முழுவதும் அவர் பாதுகாத்தார். ஆணவத்திற்கு சிறிதும் இடம் கொடுக்கவில்லை. தாழ்ச்சியோடு இறை சித்தத்தை நிறைவேற்ற தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்.

நாமும் கிறிஸ்து இயேசுவின் மூலம் திருமுழுக்கின் வழியாக புனிதப்படுத்தப்பட்டுள்ளோம். நாம் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள். மாசற்ற வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம். அந்த வகையில் நாம் எந்தளவிற்கு எமது புனிதத்தன்மையை பாதுகாக்க முயற்சி செய்கிறோம் என்று இந்த சிறப்பு திருவருகை காலத்தில் சிந்திப்போம்.

இயேசுவின் மதிப்பீடுகளான அன்பு, அமைதி, தூய்மை என்ற புண்ணியங்களை எமது வாழ்நாளில் மேற்கொள்வோம். அதற்காக ஆண்டவரின் அருள் வரப் பிரசாதத்தை வேண்டுவோம்.

**எல். செல்வா**




# திருவருகைக் காலம்

திருவருகைக் காலத்தில் பயணிக்கின்றோம். இக்காலம் நமது மீட்பராம் இயேசுவின் பிறப்பு விழாவுக்காக நம்மைத் தயாரிக்க அழைக்கின்றது.

திருவருகைக் காலத்தை ஆரம்பிக்கும் கடந்த முதலாவது ஞாயிறு வாசகங்கள் நாம் விழிப்பாய் இருந்து விடியல் பெறவேண்டும் என நமக்கு அறிவுறுத்துகின்றன.

அன்றைய முதல் வாசகத்தில் தாங்கள் விழிப்பற்று இருந்த காரணத்தினாலேயே கடவுளின் அன்புக்கு எதிராகப் பாவம் இழைத்தாகப் புலம்பி அழுகின்றனர் இஸ்ரயேல் மக்கள்.

நாம் வாழும் இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதரும் தன்னைக்குறித்து அறிந்துணர்ந்து கொள்ளாத காரணத்தினால்தான் பாவங்கள் மலிந்துபோயுள்ளன என்பதே உண்மை.

அப்படியானால், ஒவ்வொரு மனிதருக்கும் 'தன்னை உணர்தல்' என்பது மிகவும் அவசியமாகிறது. தான் யாரால் படைக்கப்பட்டிருக்கின்றோம், எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றோம், எமது கடமைகளும் பொறுப்புகளும் என்ன என்பதை ஆய்ந்துரணர்த்து, தெளிந்துதேர்ந்து செயல்படும்போது ஒவ்வொரு மனிதரும் பாவம் என்னும் கொடிய நஞ்சிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

ஆனால் அது நடப்பதில்லை, காரணம், ஆணவம், அதிகாரவெறி, பொருளாசை, தனது சுயநலத்திற்காகத் தன் இனத்தை, நண்பர்களை, உடன்பணியாளர்களைக் காட்டிக்கொடுத்து, பிரிவுகளையும் பிளவுகளையும் உண்டாக்குவது, சண்டை சச்சரவுகளை வளர்ப்பது, சாதி வெறியாட்டம், மத வன்முறைகள் ஆகிய யாவும் பாவத்திற்கான வாய்க்கால்களாக அமைகின்றன. ஆக, தங்களைப் படைத்து, பராமரித்து, பாதுகாத்து, வழிநடத்தி, அடிமைத்தளையிலிருந்து மீட்டு பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்குக் கொணர்ந்து வாழ்வளித்த இறைவனை அடிக்கடி மறந்து பாவத்தில் வீழ்ந்தனர்.

கடந்த ஞாயிறு நற்செய்தியில் இயேசு கூறும் அறிவுரை, திருவெளிப்பாட்டு உரையில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் நிறைவேறும் காலத்தைக் குறித்துக்காட்டுவதாக இருக்கின்றது.

அவை நிகழும் என்பது எந்தளவுக்கு உண்மையோ, அதே அளவிற்கு இவை நிகழும் காலம் ஓர் இரகசியம் என்பதும் உண்மை. ஏனென்றால், மானிட மகனின் வெற்றி வருகையின் மகத்துவம் இது! இயேசு வெளிப்படப்போகும் இந்த நாள்தான் மக்களைத் தீர்ப்பிடப்போகும் நாளாகவும் கருதப்பட்டது ( லூக் 21:34, 2 தெச 1:10; 2 திமொ 1:12, 4:8).

இந்தத் தீர்ப்புகள் இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால், அது யாருக்கும் தெரியாது என்றும், மக்கள் தங்களின் கடமைகளை நிறைவேற்றி அந்தத் தீர்ப்பு நாளை எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டும் என்பதும் இயேசு கூறும் இந்த வார்த்தைகளுக்குப் பொருத்தமாக அமைகின்றது.

காரணம் என்னவென்றால், கிறிஸ்தவ வாழ்வில் நிரந்தரமாக ஓர் ஒழுக்க நிலை இருக்கவேண்டும் என்பதும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒவ்வொரு நாளையும் கிறிஸ்துவின் வருகை நாளாகவே கருத வேண்டும் என்பதும் இங்கே முக்கியத்துவம் பெறுகிறது.

இத்தகைய சிந்தனைகளை உள்வாங்கி நற்செய்தி வாசகத்தை நோக்கினால் கவனமாயிருங்கள், விழிப்பாயிருங்கள். ஏனெனில், அந்நேரம் எப்போது வரும் என உங்களுக்குத் தெரியாது. நெடும்பயணம் செல்லவிருக்கும் ஒருவர் தம் வீட்டைவிட்டு வெளியேறும்போது தம் பணியாளர் ஒவ்வொருவரையும் அவரவர் பணிக்குப் பொறுப்பாளராக்கி, விழிப்பாயிருக்கும்படி வாயில் காவலருக்குக் கட்டளையிடுவார்.

அதுபோலவே நீங்களும் விழிப்பாயிருங்கள். ஏனெனில், வீட்டுத் தலைவர் மாலையிலோ, நள்ளிரவிலோ, சேவல் கூவும் வேளையிலோ, காலையிலோ எப்போது வருவார் என உங்களுக்குத் தெரியாது. அவர் திடீரென்று வந்து நீங்கள் தூங்குவதைக் காணக்கூடாது. நான் உங்களுக்குச் சொல்லுவதை எல்லாருக்குமே சொல்கிறேன்: விழிப்பாயிருங்கள்."

இயேசு, எருசலேம் கோவிலின் அழிவுபற்றி முன்னறிவிக்கிறார். அதன்பிறகு, இயேசு கோவிலுக்கு எதிராக உள்ள ஒலிவ மலைமீது அமர்ந்திருந்தபோது பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா ஆகியோர் அவரிடம் தனியாக வந்து, "நீர் கூறியவை எப்போது நிகழும்? இவையனைத்தும் நிறைவேறப்போகும் காலத்திற்கான அறிகுறி என்ன? எங்களுக்குச் சொல்லும்" (காண்க மாற் 13:13) என்று கேள்விகள் எழுப்புகின்றனர். அப்போதுதான், வரப்போகும் கேடு, கொடும் வேதனைகள் குறித்தெல்லாம் அவர்களிடம் பேசுகிறார் இயேசு. அதனைத் தொடர்ந்து மானிட மகனின் வருகைப் பற்றி பேசும்போதுதான் 'விழிப்பாய் இருங்கள்' என்று அறிவுறுத்துகின்றார். குறிப்பாக, சீடர்கள் விழிப்பாய் இருக்கவேண்டும் என்ற எச்சரிக்கையை இயேசு நான்கு முறை விடுகின்றார் அப்படியென்றால், 'விழிப்பாய் இருங்கள்' என்ற வார்த்தை எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது.

விழிப்பாய் இருப்பது பற்றி இயேசு கூறும் இவ்வுரையில், ஒரு வீட்டுத் தலைவரிடம் அவரது பணியாளர் எந்தளவுக்கு விழிப்பாய் இருக்க வேண்டும் என்பதை ஒரு சிறிய எடுத்துக்காட்டு வழியாக விளக்குகின்றார். எனவே, உண்மைத்தன்மை கொண்ட விழிப்புணர்வே வெற்றி என்னும் விடியலைத் தரும் என்பதையும் நம் மனங்களில் இருத்துவோம்.



**அருட்பணி செல்வராஜ் சூசைமாணிக்கம்**

**போர்ச் சூழலின் விளைவுகள்**

# மனிதர்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கும் பெத்லகேம்

திருவருகை காலத்தில் பயணிக்கின்றோம். இயேசு பிறந்த பெத்லகேமில் யுத்தம் மற்றும் வன்முறையினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை நினைவுகூரும் விதமாக இவ்வாண்டு திருவருகைக்கால செயற்பாடுகள் அமைதி மற்றும் செபத்தை உள்ளடக்கியதாக அமைகின்றது என்றும், காசா, இஸ்ரேல் மட்டுமின்றி மேற்குக் கரையிலும் பெத்லகேம் மூடப்பட்ட ஒரு நகரமாக, எருசலேமிலிருந்து பிரிக்கப்பட்ட நகரமாகக் காட்சியளிக்கின்றது என்றும், வரலாற்றில் இதுவரை நடந்திராத இச்செயல் பெத்லகேம் யுத்தம் மற்றும் மோதல்களின் விளைவுகளை அனுபவித்து வருகிறது என்பதை முழு உலகிற்கும் நினைவூட்டுகின்றது என்றும் தெரிவித்துள்ளார் அருள்பணியாளர் பேட்டன்.



பதற்றமான சூழல் நிலவி வருகிறது என்றும் அருட்பணியாளர் பிரான்சிஸ்கோ பேட்டன்.

டிசம்பர் 2 சனிக்கிழமை திருவருகைக் காலத்தின் முன்தயாரிப்பிற்கான நாளை முன்னிட்டு புனித பூமியில் நடைபெற்ற திருவருகைக்காலத் தயாரிப்புக்கள் குறித்து புனித பூமியின் காவலரான பிரான்சிஸ்கன் சபை அருள்பணியாளர் பிரான்சிஸ்கோ பேட்டன் தகவல்களை வெளியிட்டார்.

இயேசு பிறந்த பெத்லகேமில் திருப்பயணிகள் எவரும் இல்லை, மனிதர்கள் யாருமின்றி புனித தலங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன என்பதை சுட்டிக் காட்டிய அருள்பணியாளர் பேட்டன் அவர்கள், காசா மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் இடம்பெற்று வரும் யுத்தம் மற்றும் வன்முறைகளே இதற்குக் காரணம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை பெத்லகேம் திருத்தலத்தில் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் மற்றும் ஆர்மேனிய தலைவர்களால் வரவேற்கப்பட்டு அவர்களோடு இணைந்து அருள்பணியாளர் பேட்டன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மதியம் எருசலேம் திரும்பினார்.

பெத்லகேமுக்குள் நுழைவது என்பது இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்த அனுபவத்தை நினைவூட்டுகின்றது என்றும், மக்களுக்கு விடுதலையின் ஒளியைக் கொடுக்கும் அறிகுறிகளின் வரிசையில் ஒரு சுவரைக் கடந்து செல்வது என்பது தற்போதைய யுத்த சூழ்நிலையில் நம்பிக்கையின் வலுவான அடையாளமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**மெரினா ராஜ்**

# இராஜதந்திர அறக்கட்டளை பஸாரில் சவூதி அரேபிய தூதரகமும் பங்கேற்பு





இலங்கை வெளிவிவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இராஜதந்திர அறக்கட்டளை பஸாரின் இலாபம் லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.

கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமையன்று நடைபெற்ற இராஜதந்திர அறக்கட்டளை பஸாரில் சவூதி அரேபியாவும் பங்கேற்றது. இதன் வருமானமும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இவ்வாண்டு நடைபெற்ற அறக்கட்டளை பஸாரில் அமையப் பெற்றிருந்த சவூதி விற்பனையகத்தில் உள்ள உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய காட்சிப் பொருட்களுக்கு அதிக கேள்வி இருந்ததாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்தார்.

சவூதி அரேபிய தயாரிப்புகள் உட்பட, பிரபலமான சவூதி உணவுகளும் காணப்பட்டமையாள் அங்கு வந்த பார்வையாளர்கள் அவற்றை நுகர்வதில் பெரும் ஆர்வம் காட்டியதாகவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

பல நாடுகள் பங்கு பற்றிய இவ் அறக்கட்டளை பஸாரில் சவூதி அரேபியாவின் பல சுவையான தயாரிப்புகள் மலிவு விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இது ஒரு முன்மாதிரியான செயல் என அங்கு சமுகம் தந்த நுகர்வோர்கள் கருத்து தெரிவித்தனர்.

## பள்ளிச்சங்க உப...

சீனன்கோட்டை அல் ஸலாஹ் அறபிக்கல்லூரி, சீனன்கோட்டை ஸகாத் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபைத் தலைவரும் பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம், இக்ரா தொழில்நுட்பக்கல்லூரி ஆகியவற்றின் நிர்வாக சபை உப தலைவருமாக, இறுதி வரை பதவி வகித்தவர். சீனன் கோட்டை பிரதேசத்தின் கல்வி மறுமலர்ச்சிக்காகவும் பிரதேச அபிவிருத்தி, சமூக சமய கலாசார மேம்பாட்டுக்காகவும் வாரி வழங்கிய ஒரு பரோபகாரியாகவும் இவர் செயற்பட்டார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா, நேற்று அஸர் தொழுகையின் பின் சீனன்கோட்டை பாஸியா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க நிர்வாகிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு சமூகங்களைச்சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், ஊர் பிரமுகர்கள், சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள், அரபுக் கல்லூரிகளின் உஸ்தாத்மார்கள், மத்ரஸா மாணவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உட்பட பெருந்திரளானோர் ஜனாஸாவில் பங்குபற்றினர்.

## ஒக்டோபர் மாத அஸ்வெசும...

எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இன்று முதல் அஸ்வெசும கொடுப்பனவு பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். அதேவேளை, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத் தவணைகள் இந்த வருட இறுதிக்குள் பயனாளிகளுக்கு செலுத்தப்படும். மேலும் புதிய விண்ணப்பங்கள் இம்மாதம் கோரப்படும் எனவும் எனவும் நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

காத்திரிப்பு பட்டியல் பிரிவின் கீழ் 209,225 குடும்பங்களும், பாதிப்புக்குள்ளான பிரிவின் கீழ் 290,070 குடும்பங்களும், வறிய பிரிவின் கீழ் 605,379 குடும்பங்களும், மிகவும் ஏழ்மையான பிரிவின் கீழ் 302,258 குடும்பங்களும் இந்த ஆண்டு நன்மைகளைப் பெறவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அஸ்வெசும மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக செஹான் சேமசிங்க தெரிவித்தார். மேலும், முதியோர், சிறுநீரக மற்றும் ஊனமுற்றோருக்கான கொடுப்பனவுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சென்னை விமான நிலையத்தில்...

புனேவிலிருந்து சென்னை வந்து சேர வேண்டிய விமானங்கள் தாமதமாகின.

சென்னையிலிருந்து புறப்பட வேண்டிய விமானங்களும் தாமதித்தே புறப்பட்டன.

## வானிலை மாற்றம்:...

சாலிஹீன் கூறினார். வானிலை குறித்து மேலும் அவர் கூறுகையில், மிக்ஜாம் சூறாவளியானது மேலும் தீவிரமடைகிறது.

இது, வடமேற்குத் திசையை நோக்கி நாட்டிலிருந்து அப்பால் நகர்ந்து சென்று, தமிழ் நாட்டின் வடகரையை சென்றடையும்.

இதன்பிற்பாடு வடதிசையை நோக்கி திரும்பி, நாளை தென் ஆந்திராப் பிரதேசத்தை ஊடறுத்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதனால்,நாட்டின் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும்,திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சில இடங்களில் 75 மில்லிமீற்றர் வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 60 70 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும்.

## மின்கட்டணம் செலுத்தாதோருக்கு...

செலுத்தி வருவதாகவும் அச்சபை அறிவித்துள்ளது. இந்நிலையில்,கட்டணங்களை செலுத்துவதற்கு 45 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

## O/L மீளாய்வு...

பொதுத்தராத சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான சான்றிதழ்களை இணையவழியில் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஹோமாகம மஹிந்த வித்தியாலயம்...

காணப்படுவதாகவும்,கடந்த கல்வி பொது தராதர சாதாரண பரீட்சையின் சிறந்த பெறுபேறுகள் இதற்கு சான்றாக அமைவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சையில் ஆங்கில மொழியில் 769 மாணவர்கள் தோற்றினர். இதில், 768 மாணவர்கள் சித்தி பெற்று 452 மாணவர்கள் ஆங்கில மொழியில் அதி விஷேட புள்ளிகளைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சிறுவர்களை போராளிகளாக...

பெண்ணால் மிக கொடுமையாக தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.இச்செய்தியை அறிந்து மனவேதனையடைந்தேன். கடந்த மாதம் மாத்திரம் 16 வயதுக்குக் குறைவான 131 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோக கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்விரு செய்திகளும் மிகவும் கொடுமையானவை.

அதேவேளை, கடந்த வாரம் வடக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில், விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை போன்ற சீருடைகளை சிறுவர்களுக்கு அணிவித்து அவர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிவித்திருந்ததையும் காண முடிந்தது.இது முற்றிலும் வெறுக்கத்தக்கது.

யுத்த காலத்தில் பல சிறுவர்கள் போராளிகளாக்கப்பட்டனர். இந்த நினைவுகளை ஞாபகப்படுத்தும் வகையில் தற்போது செயற்படுவது முறையற்றது. சம உரிமை,பெண் சமத்துவம் தொடர்பில் அரசியலமைப்பில் பேசப்படுகிறது.ஆனால், பாரம்பரிய சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்படுவதால் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படுவதில்லை. அநுதாரபுரத்திலும்,கண்டியிலும் மாவட்ட செயலாளர் பதவிக்கு பெண் ஒருவர் நியமிக்கப்படவில்லை. பத்தினி தெய்வம் ஒரு பெண் ஆனாலும் கோயில் கருவறைக்குள் செல்வதற்கு பெண்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இந்த நிலைமை மாற்றமடைய வேண்டும். முப்படைகளில் பெண்கள் உள்ளனர் .கடற்படையில் இதுவரை காலமும் ஆண்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட பதவிகள், தற்போது பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## பராமரிப்பு அதிகாரியின்...

பெறாதவர் என்றும் அப்பதவிக்கான எந்த தகுதியும் அவருக்கு இல்லை என்றும் இராஜாங்க அமைச்சர் சபையில் தெரிவித்தார். மேற்படி சம்பவம் தொடர்பில் தற்போது உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த பெண் முறைப்படி அந்த பதவிக்கு வந்தவரா? அல்லது பின் கதவால் வந்துள்ளாரா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.இதைக் கருத்திற்கொண்டு தான்,நன்னடத்தை அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கும் வேலைத் திட்டம் அமைச்சு மட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கல்முனை சம்பவம் தொடர்பில் தமது முழுமையான அவதானத்தை செலுத்தியுள்ளதாக தெரிவித்த அவர், மேற்படி சிறுவன் பெற்றோர்களினால் கைவிடப்பட்டவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சபையில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

பராமரிப்பு நிலையம் என்பது சிறுவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், அவர்களுக்கான கல்வி உள்ளிட்ட அனைத்தையும் வழங்கும் இடமாகும். அவ்வாறான ஒரு நிலையத்தில் இவ்வாறான மோசமான சம்பவமொன்று இடம்பெற்றுமை தொடர்பில் நாம் பெரும் கவலையடைகிறோம். சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் அதிகாரி என்பவர் வெறுமனே அதிகாரியாக, ஊழியராக செயல்படுபவர் அல்ல.

## பாராளுமன்ற சிறப்புரிமைகளை...

விசாரணையிலிருந்து விலகியுள்ள முஸ்லிம் நீதியரசரை சபிப்பதாக ரிஷாட் பதியுதீன் எம், பி சபையில் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. இதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிபதிகளுக்கு எதிராக அவ்வாறு கருத்துக்களை முன்வைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து சபையில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நீதியமைச்சின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தனது வழக்கு விவகாரத்தை குறிப்பிட்டு மேற்படி 'நீதியரசரை சபிப்பதாக 'குறிப்பிட்டுள்ளார்.

உயர்நீதிமன்றத்தில், நீதியரசர் நவாஸ் முஸ்லிம் மதத்தை சேர்ந்தவர். அவர் ஒருபோதும் மதத்தை முன்னிலைப்படுத்தி கடமையாற்றுபவர் அல்ல. கௌரவமான வகையில் அவர் தனது பணிகளை முன்னெடுத்துச் செல்பவர்.

ரிஷாட் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை, முதலாவதாக நீதியரசர் ஜனக் டி சில்வா அதிலிருந்து விலகிக் கொண்டார்.

வில்பத்து காடழிப்பு விவகாரத்தில் ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக இவர் தீர்ப்பு வழங்கியதால், அந்த வழக்கிலிருந்து விலகியிருப்பார் என எண்ணத் தோன்றுகிறது. அதேபோன்று, இரண்டாவதாக நீதியரசர் சமயவர்தன தனிப்பட்ட காரணங்களை முன்னிலைப்படுத்தி வழக்கிலிருந்து விலகினார். மூன்றாவதாக நீதியரசர் யசந்த கோடாகொட வழக்கிலிருந்து விலகினார்.இவர் விலகியதற்கான காரணத்தை நான் குறிப்பிட விரும்பவில்லை. ஏனெனில், இதற்கான காரணத்தைக் குறிப்பிட்டால் அது ரிஷாட் பதியுதீனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இறுதியாக நீதியரசர் ஏ.எச். நவாஸ் முன்னிலையில் குறித்த அடிப்படை உரிமை மீறல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.அவரும் வழக்கிலிருந்து விலகினார். அவர் ஏன் விலகினார் என்பதற்கான காரணத்தை அவர் குறிப்பிடவில்லை. அவர் மீது முன்வைக்கப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டை தொடர்ந்து, அவ்விடயம் தொடர்பில் நான்,ஆராய்ந்தேன்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன் தினமிரவு இந்த வழக்கில் முன்னிலையாகிய சட்டத்தரணி ஒருவர் நீதிபதிக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு'உங்கள்முன்னிலையில்இந்த வழக்கை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கம் சிரேஷ்ட சட்டத்தரணிக்கு உண்டு' என குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர் மறுநாள் காலையில் அந்த சிரேஷ்ட சட்டத்தரணி தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு 'இந்த வழக்கில் முன்னிலையாக வேண்டாம்' என்று நீதியரசர் நவாஸிடம் குறிப்பிட்டுள்ளார்.இதனை, நீதியரசர் நவாஸ் பிரதம நீதியரசரிடம் குறிப்பிட்டுள்ளார்.அதன் பின்னரே அவர் வழக்கு விசாரணையிலிருந்து விலக தீர்மானித்துள்ளார்.

அந்த வகையில், நீதியரசர் நவாஸ் தொடர்பில் ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்ட கருத்து பாரதூரமானது. முஸ்லிம்களுக்காக இவர் முன்னிலையாவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.நீதியரசர் நவாஸ் தொடர்பில் இவர் எமக்கு கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை.

நீதியரசர் நவாஸிற்கு எதிராக நான் பல வழக்குகளில் முன்னிலையாகியுள்ளேன்.அவர் இனவாதத்தை தோளில் சுமந்து கொண்டு சேவையாற்றுபவர் அல்ல.

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு நீதிபதிகளை விமர்சித்து,சபித்தால் எவ்வாறு சட்டத்துறையும், நீதித்துறையும் இணக்கமாக செயற்பட முடியும்? ராஜபக்ஷக்களின் வழக்குகளுக்கு நீதியரசர் நவாஸ் முன்னிலையாவதாகவும் ரிஷாட் எம்பி குற்றஞ்சாட்டியுள்ளார்.

## அபார பந்துவீச்சு:...

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் 13 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாம் கட்ட முதல்தர போட்டியில், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் அபாரமாக பந்துவீசி ஓட்டங்கள் எதனையும் வழங்காது எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி பாடசாலை மட்டத்தில் சாதனைப் படைத்துள்ளார். அடுத்த வாரம் அந்த மாணவன் விளையாட்டுத்துறை அமைச்சரை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அவர் தொடர்பான உதவிகளை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். விளையாட்டுத்துறை அமைச்சரின் வழிகாட்டலுக்கு அமைய நான், கல்லூரியின் அதிபரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடினேன்.

அந்த வகையில் அடுத்த வாரம் அந்த மாணவனுக்கு விளையாட்டுத்துறை அமைச்சரை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். அதற்கிணங்க விளையாட்டுத்துறை அமைச்சின் மூலம் அவருக்கு செய்யக்கூடிய அனைத்து உதவி ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## மூன்றே நாட்களில்...

தூய்மையாக வைத்துக் கொள்ளவும், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டில்,இவ்வருடம் முதல் (2023) டிசம்பர் (04) வரை, மொத்தம் 77,487 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே (16,363) அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.மேலும்,மேல் மாகாணத்தில் 36,266 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டோர்...

இந்த வரலாற்று தவறை சீர்செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருகின்றார். எமது மக்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டும் நல்லிணக்க பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், 10 பேர்ச்சஸ் காணி உரிமையும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.இவை போதுமானவை அல்ல. பலவந்தமாக நாடு கடத்தப்பட்டுள்ள மக்கள் இலங்கை திரும்ப வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பொலிஸார் பற்றிய மக்களின்...

அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.எதிர்காலத்தில் போக்குவரத்து பொலிஸார் குறித்து கூடிய அவதானம் செலுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மூன்று மாத காலத்துக்கு பதில் பொலிஸ் மா அதிபராக தென்னகோன் அண்மையில் நியமிக்கப்பட்டமை தெரிந்ததே!

## இளம் வீரர்களை... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி


பணிப்பாளர் பிரிகேடியர் சுதந்த பொன்சேகா, தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நிலைய கட்டளைத் தளபதி கேர்ணல் ஆர்.எம். பிரேமதிலக்க, முப்படை அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


## இன்றைய பலன்கள்

(05. 12. 2023)


கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)






**மேஷம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகளால் மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் மூலம் அனுகூலம் உண்டாகும்.



**ரிஷபம்:**
குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் கவனம் செலுத்துவீர்கள்.



**மிதுனம்:**
கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும்.குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள்.




**கடகம்:**
குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே பந்த பாசங்கள் கூடும். வாழ்க்கை துணையின் மூலம் லாபம் கிடைக்கும்.



**சிம்மம்:**
கணவன், மனைவிக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் விலகி ஒற்றுமையுடன் வாழ நேரிடும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.




**கன்னி:**
கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். குடும்ப விஷயங்களை மூன்றாவது நபரிடம் பேசாமல் இருப்பது நன்மை தரும்.




**துலாம்:**
கணவன் மனைவிக்கிடையே இருந்த மனவருத்தங்கள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்து சேர்வார்கள்.



**விருச்சிகம்:**
குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். நீங்கள் கூறும் வார்த்தைகளுக்கு மதிப்பு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும்.



**தனுசு:**
குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே சுமூக உறவு இருக்கும். பெண்களுக்கு எப்படிப்பட்ட சிக்கலான பிரச்சினைகளையும் தீர்க்கும் வல்லமை உண்டாகும்.



**மகரம்:**
வருமானம் வழக்கம் போல் இருக்கும். உத்தியோகஸ்தர்கள் கவனமாக பணி செய்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களையும், வாழ்க்கை துணையையும் அனுசரித்து செல்வது நன்மை தரும்.



**கும்பம்:**
பிள்ளைகளிடம் எதையும் பக்குவமாக சொல்வது நன்மையை தரும். வாழ்க்கை துணையுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது. பெண்களுக்கு புதிய நட்புகள் கிடைக்கும்.



**மீனம்:**
குடும்பத்தினர் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சியான நிலை காணப்படும். பெண்கள் வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

## 5 இலட்சம் பாவனை... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி

அபயராம விகாரையின் மின்சாரத்தை அநீதியான முறையில் துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்சார சபை நீர் மின்சார உற்பத்தி மூலம் கோடிக்கணக்கில் இலாபம் ஈட்டிவரும் நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்ந்து வரும் 50 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுத்திருப்பது நியாயமற்றது. மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். மின்சார கட்டணத்தை செலுத்த தவறியுள்ள 50 இலட்சம் மக்களின் மின்சாரத்தை துண்டிக்க அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கும் போது, அது தொடர்பில் நாம் பேசாமல் இருக்க முடியாது.

## பத்து பேர்ச் காணித்துண்டு... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி

நீண்ட காலம் வாழ்கின்றனர். ஆகவே தலா பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

சொந்தமாக வருமானம் உள்ளவர்கள் அரசாங்கம் தரும் காணியில் வீடு கட்டிக்கொள்ள வேண்டும். இயலாதவர்களுக்கு அராசங்கம், இலங்கை, இந்திய வீடமைப்பு திட்டங்களின் கீழ் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். இதுதான் நிரந்தர தீர்வு. இதுதான் எனது கோரிக்கை என்றார்.

## காஸாவை பிரேதங்களின்... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆதரவுகளை நாம் இழக்க நேரிடும். இலட்சக்கணக்கான இலங்கையர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளே தொழில்வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. இதனால், அதிகளவு அந்நியச்செலாவணி நாட்டுக்கு கிடைப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.தாக்குதலை நிறுத்துமாறு கோரி 150 எம்பிக்கள் ஒப்பமிட்டுள்ள கடிதத்தை ஐ,நாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுங்கள்.இஸ்ரேலின் விடயத்தில் இனியும் மெத்தனப்போக்குடன் ஜனநாயக நாடுகள் நடந்துகொள்ளக்கூடாது.காதி நீதிமன்றங்களை வினைத்திறனாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியம்.சிறந்த கல்விமான்களை காதி நீதிபதிகளாக நியமியுங்கள். இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியங்கள் போதுமானதாக இல்லை. முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டங்களை செயலுருப் படுத்தியமைக்கு அமைச்சர் விஜேதாச ராஜக்ஷவுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கிழக்கு மக்களின்... 03 ஆம் பக்கத் தொடர்ச்சி

அத்துடன் மாவீரர் நிகழ்வுகளுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிபதிகள் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதையிட்டு நீதியமைச்சர் வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நீதிபதிகள் சுயாதீனமாக செயற்படுவதையிட்டு நீதியமைச்சர் ஏன் வெட்கப்பட வேண்டும் என கேட்க விரும்புகிறேன்.

உண்மையில், இதற்காக நான்,பெருமைப்பட வேண்டும். அதேவேளை, நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதையிட்டு நீதியமைச்சர் வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சுமந்திரன் எம்.பி முன்வைத்துள்ள இந்த மூன்று விடயங்களையும் சாதாரண பிரஜை ஒருவர் குறிப்பிட்டிருந்தால் அதற்கு பதிலளிக்கலாம், ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் இவ்வாறு குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும் என்றே நான் தெரிவிக்கின்றேன். பாராளுமன்ற உறுப்பினர் எம்.சு.சுமந்திரனை கொலை செய்வதற்கு புலம்பெயர் அமைப்பினர் 20 இலட்சம் ரூபா ஒப்பந்தம் செய்தார்கள்.சுமந்திரனின் உயிரின் பெறுமதி 20 இலட்சமா என்பது ஆச்சரியத்துக்குரியது.இந்த ஒப்பந்தத்துக்கு அமைய சுமந்திரனை கொலை செய்ய முற்பட்ட ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த ஐவருக்கும் எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தன்னை கொலை செய்ய முற்பட்டவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று சுமந்திரன் குறிப்பிடுகிறார். ஆனால் ஏனையவர்களை கொன்றவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்கிறார். பயங்கரவாத தடைச்சட்டம் நாட்டின் சட்டம். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவே அந்த சட்டம் கொண்டு வரப்பட்டது.




## 650 மில்லியன் ரூபா செலவில்

# நாவலப்பிட்டியில் உயர் தொழில்நுட்ப கல்லூரி





(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

நாவலப்பிட்டி உயர் தொழில்நுட்ப கல்லூரி 650 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது.

உயர் தொழில்நுட்ப கல்லூரி நிறுவனம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

650 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2000 மாணவர்கள் கல்வி கற்கும் வசதி வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாவலப்பிட்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஹோட்டல் முகாமைத்துவம் டிப்ளோமா, விவசாய தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா, ஆங்கிலத்தில் தேசிய டிப்ளோமா, தமிழ் மொழி தேசிய டிப்ளோமா ஆகிய தகமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க, உயர் தொழில்நுட்ப பணிப்பாளர், பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உப தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, சமிந்திரனி கிரியெல்ல மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



(மடுல்சீமை நிருபர்)

மடுல்சீமை /மஹதோவ கீழ் தமிழ் வித்தியாலயத்தில் முதல் தடவையாக கல்வி பொதுதராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 16 மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்தரத்தில் கல்வியை தொடர்வதற்கு தகுதிப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் சந்தன யேசு தெரிவித்தார்.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் பி.சமில்டா 7ஏ, 1சி, 1 எஸ், எம். வித்தியா 6ஏ, 1பி, 1சி, ஜி.தோமினிபிரியா 5ஏ, 2பி, 2சி, ஆர். சிந்துஜா 5ஏ, 1பி, 2சி, 1 எஸ், என சிறப்பு சித்திகளை பெற்றதோடு ஏனைய மாணவர்களும் சிறப்பு சித்திகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் அதிபர் சந்தனயேசு மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

## க.பொ.த. சா/தரப் பரீட்சையில் மஸ்கெலியா புளும்பீல்ட் த.ம. வித்தியாலயம் சாதனை

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



ம.மா/ஹவ கோட்டம் புளும்பீல்ட் தேசிய பாடசாலையில் 2022 க.பொ.த. சா/தரப் பரீட்சையில் மாணவன் சக்திவேல் சுரேந்திரன் 9A சித்திகளை பெற்று பாடசாலைக்கும் மலையக சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவரது அயராத உழைப்புக்கு துணையா கவிருந்த சுரேந்திரனின் தாயார், முன்னாள் அதிபர் திருவாளர் என்.பரமேஸ்வரன் , பிரதி அதிபர், உப அதிபர்கள், பெருமைக்குரிய ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## வாகன சாரதிகள் எச்சரிக்கை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டம் உட்பட இப்பிரதேசத்தை அண்மித்த மலையக வீதிகள் வழுக்கும் நிலையில் காணப்படுவதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை ஹப்புத்தளை ஊடாக பதுளை வீதி, பலாங்கொடை பொகவந்தலாவை வீதி, பலாங்கொடையில் இருந்து வேவல்வத்தை ஊடாக இரத்தினபுரி மாற்று வீதி பெரகல வெள்ளவாய வீதி, இரத்தினபுரி சிவனொளிபாத மலை வீதிகள் போன்றவற்றில் அதிக வழுக்கும் தன்மை காணப்படுவதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதுமட்டுமின்றி பனிமூட்டம் அதிகமாக காணப்படுவதாக எச்சரிக்கின்றனர்.



பதுளை பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை, வை.எம்.எம் போன்றவை இணைந்து 'நல்லிணக்கத்துக்கு உதவும் கரம்' எனும் தொனிப்பொருளில் நடாத்திய மாபெரும் இஸ்லாம் தொடர்பான நிகழ்வு பதுளை பெரிய பள்ளிவாசலில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது முஸ்லிம்களின் நம்பிக்கை, கலாசாரம், கலை, வீட்டுப் பாவனை பொருட்கள், சுத்தம், சுகாதாரம், அழகுபடுத்தல், அரபு எழுதணி, பள்ளி வாசல் சூழல், தொழுகை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

# நுவரெலியா இ.போ.ச. ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

தலவாக்கலை குறூப் நிருபர்



நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று (04) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் (03) மாலை இராகலை பிரதேசத்தில் மூன்று இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் தனியார் பஸ் ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியமையால், இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் அனைவரும் தமது கடமைகளிலிருந்து விலகி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் உதயசிறி பண்டார, தனியார் பஸ் ஊழியர்கள் குழுவினரால் தனது ஊழியர்கள் மூவர் தாக்கப்பட்டதாகவும் அவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதன் பின்னரே மாலையில் பஸ்களை இயக்க முடியுமென நம்புவதாகவும் பண்டார தெரிவித்தார். இதுதொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இலங்கை போக்குவரத்து சபையினர் வேலை நிறுத்தம் காரணமாக அரசாங்க மற்றும் தனியார் அலுவலக ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய பயணிகள் போக்குவரத்து வசதிகளை பெற முடியாமல் கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். இதுதொடர்பில் இராகலை மற்றும் நுவரெலியா பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## நுவரெலியா கிரகறி வாவியில் தவறி வீழ்ந்த இந்தியப் பிரஜை



நுவரெலியாவுக்கு சுற்றுலா நிமிர்த்தம் வருகைத்தந்த 75 வயதுடைய இந்திய பிரஜையொருவர் நேற்று நுவரெலியா கிரகறி வாவி கரையில் நடந்து செல்லும்போது தவறுதலாக வாவி கரையில் விழுந்துள்ளார்.

இவ்விபத்தில் சுற்றுலாப் பயணியின் ஒரு காலில் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிரகறி வாவியில் தவறி விழுந்த சுற்றுலா பயணி தற்போது நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுரெலியா சுற்றுலா பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

### ஏழு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த ஏழு வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த ஏழு வர்த்தக நிலையங்களும் கண்டுபிடிக்கப்பட்டு மாத்தளை மாநகர சபையினால் சீல் வைக்கப்பட்டுள்ளது. மாவா, பாபுல், புகையிலைத்தூள் போன்ற போதைப்பொருட்கள் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனை செய்து வருவதாக தெரியவருகின்றது. வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மாத்தளை ரோஸ வீதி, கலேவல பஸ் தரிப்பிடம், கண்டி பஸ் தரிப்பிடம் ஆகிய இடங்களிலுள்ள கடைகளில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

வெற்றிலை, பாக்கு விற்பனை என்ற போர்வையில் கடைகளில் மாவா, பாபுல், புகையிலைத்தூள் போன்ற போதைப்பொருட்கள் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாக மாத்தளை மாநகர சபை ஆணையாளர் மாயாதுன்ன தெரிவித்தார்.

# சீரற்ற காலநிலை; அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஸ்தாபிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளையும், ஏற்பாடுகளையும் செய்துகொடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுக்கமையவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இயங்கும் இக்குழுவில் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம சேவகர்கள், பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதிநிதிகள், தோட்ட நிர்வாகத்தினர் உள்ளடங்கியுள்ளதாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் கண்டி, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் அவ்வப்போது ஏற்பட்டு வருகின்றன. இவ்வாறு பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதும், அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதும் இக்குழுவின் பிரதான பணியாகும். அந்தவகையில் சீரற்ற காலநிலையால் கம்பளை, கோணடிக்கா தோட்டதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டில், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி செய்து கொடுத்தார்.

அத்துடன், ஹற்றனில் வெள்ள அபாயம் ஏற்பட்ட ஸ்டிரதன் பகுதிக்கும் தேவையான நடவடிக்கைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஏதேனும் அனர்த்த அபாயம் இருப்பின் அதுதொடர்பில் பெருந்தோட்ட நிதியத்துக்கு அல்லது கிராம சேவகருக்கு அல்லது தோட்ட அதிகாரிக்கு அறிவிக்குமாறும் பாரத் அருள்சாமி தெரிவித்தார். அத்துடன், சீரற்ற காலநிலை தொடர்பில் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கடும் மழை

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

(ஹற்றன் விசேட நிருபர்)



சீரற்ற காலநிலை காரணமாக காசல்ரி, கெனியோன், மவுசாக்கலை, லகஷ்பான, நவலக்ஸபான, பொல்பிட்டிய, மேல்கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வான் பாயும் அளவினை எட்டியுள்ளன. நேற்றுமுன்தினம் 03 மாலை முதல் நோட்டன் பிரிஜ் பகுதியில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளிலும் நீர் வான் பாய்ந்து வருகின்றன.

மழை காரணமாக ஏனைய நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் அதிகரித்து எந்த வேளையிலும் வான் கதவுகள் தன்னிச்சையாக திறக்கப்படலாம் எனவும் அணைக்கட்டுக்கு மேலாக வான் பாயலாம் எனவும் நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் எச்சரித்துள்ளனர். எனவே நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு அபாய மிக்க பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை ஹற்றன் கொழும்பு மற்றும் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியிலும் ஹற்றன் கண்டி பிரதான வீதியிலும் பல இடங்களில் மண் திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் பல பகுதிகளில் மண்சரிவு அபாயமும் காணப்படுவதுடன் சீரற்ற காலநிலையுடன் பனிமூட்டம் அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களுக்கு உரிய பக்கத்தில் எச்சரிக்கையுடன் பயணிப்பதன் மூலம் விபத்துக்களை தவிர்த்து கொள்ளலாம் என போக்குவரத்து பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
ஞாயிறு 2023.12.03
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5317 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,946,472.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 0 3 6 6 0 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3559 — சீட்டிழுப்பு திகதி 2023.12.03 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,807,904.80
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 02 05 25 46 — விசேட எழுத்து D — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 10312

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1665 — 2023.12.03 — 23776 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 416,767,720.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 27 38 40 53
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2023.12.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0143
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 9 5 7 1 2 1 — L7 எழுத்து E
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,883,944.28

ராசி சுப பலன் — திகதி 2023.12.03 — சீட்டிழுப்பு இலக்கம் 626 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,178,224.08
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 07 12 26 51 — தனயோக இலக்கம் 50069 — நாளுக்கான விதி எண் 16

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1347 — 2023.12.03 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 123,814,837.60
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 05 44 70 71 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31360

# கிழக்கின் குரல்



ரூ. 02 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்ட

## மட்டக்களப்பு நாவலடி சுகாதார நிலையம் ஆளுநரினால் திறப்பு

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகன் நிருபர்கள்**





கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நாவலடி ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையம் நேற்று (04) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் மற்றும் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனின் இணைப்பு செயலாளர் பிரசாந்தன் உட்பட பலர் அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாவலடி ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையத்தின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி தமிழ்வாணனின் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவைவங்களில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் செயலாளர் திருமதி எஸ் முரளிதரன் உட்பட பலரும் வருகை தந்திருந்தனர். சுனாமி தாக்கத்தினால் முற்றாக பாதிக்கப்பட்ட நாவலடி பிரதேசத்தில் சுகாதார வைத்திய நிலையம் இன்மையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மட்ட களப்பு வைத்தியசாலைக்கு சென்று தமது வைத்திய தேவைகளை நிறைவேற்றி வந்த நிலையில், ராஜாங்க அமைச்சர்களான சிவனேசத்துறை சந்திரகாந்தன் மற்றும் சதாசிவம் வியாழன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை அடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான முயற்சியினால் இவ்வைத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் வயோதிப பெண் உயிரிழப்பு

### காத்தான்குடியில் சம்பவம்

**(மண்டூர் தினகரன் நிருபர்)**

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவலர் வீதி குருக்கள்மடம் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான (64) வதுடைய கண்ணமுத்து கிருபையம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த வாரம் தனது வீட்டிலிருந்து தனது மகனின் மோட்டார் சைக்கிளில் உறவினரின் நிகழ்வொன்றிற்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை குறித்த வீதியால் நபர் ஒருவர் திரும்ப முற்பட்ட வேளையில் மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்ட போது பின்னால் இருந்த பெண் தவறுதலாக வீதியில் விழுந்து படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் (03) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## எம்.எஸ். றதீப் அஹமட் நீதிபதியாக நியமனம்

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**



அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்.எஸ். றதீப் அஹமட் நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார். நீதிச் சேவைகள் ஆணைக் குழு அவருக்கான நியமனத்தை இம் மாதம் 01ஆம் திகதி செயற்படும் படியாக வழங்கியுள்ளது.அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி என்பனவற்றின் பழை மாணவரான எம்.எஸ்.றதீப் அஹமட், யாழ் பல்கலைக்கழக LLB பட்டதாரியாவார்.

கடந்த 07 வருடங்கள் சட்டத்தரணியாக கடமையாற்றிவந்த நிலையில் நீதிபதி போட்டிப்பரீட்சைக்குத் தோற்றி, அதில் சித்தியடைந்த றதீப் அஹமட் நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

இளமையிலயே பல்வேறு திறமைகள், ஆற்றல்களுடன் மிளிர்ந்த றதீப் அஹமட் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

## சாரண ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு



**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான கலைக்கூறு இரண்டு நாள் பயிற்சி நெறி அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மாகா வித்தியாலயத்தில் நேற்று (04) திங்கள் கிழமை ஆரம்பிக்கப் பட்டது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் இரண்டு நாள் நடைபெறவுள்ள இப்பயிற்சி பாசறைக்கு திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய கல்வி வலயங்கலிருந்து சுமார் ஐம்பது ஆசிரிய, ஆசிரியர்களும் கலந்து கொண்டு பயிற்சிகளை பெறவுள்ளனர்.

சாரணியத்துறையில் உயர் பயிற்சிகளை பெற்ற வாளவாளர்களைக் கொண்ட பயிற்சி குழுவினரால் இப் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளதாக பயிற்சிக் குழு தலைவரும், மாவட்ட சாரண ஆலோசாகருமான யூ.எல்.எம்.ஹாசிம் தெரிவித்தார்.

## சர்வோதய பிரதான வீதியின் பணிகளை ஆரம்பிக்க கோரிக்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**



பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் இடைநிறுத்தப்பட்டுள்ள சர்வோதயபுரம் பிரதான வீதியின் அபிவிருத்திப் பணிகளை மீளவும் ஆரம்பித்து வீதியை பயன்பாட்டுக்கு வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பயணித்து வருகின்றனர். இவ் வீதி பொத்துவில் பிரதேசத்தில் மிகவும் முக்கியமான வீதியாக காணப்படுகின்றது.

இவ்வீதி சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு சுமார் 12 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கும் வேலைகள் கடந்த 2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த வீதியானது ஆங்காங்கே சிறுசிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு சரியான திட்டமிடல் இன்மையால் குறைந்தளவிலான அபிவிருத்திப் பணிகள் நிறைவு பெற்று, மீதியாக காணப்படும் வீதியின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவே கைவிடப்பட்ட நிலையில் வீதியின் சில பகுதிகள் குன்றும் குழியுமாக காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

எனவே, கைவிடப்பட்டுள்ள இவ் வீதியின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகளும், பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கிழக்கு மாகாண தமிழ் பேசும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கு இருநாள் செயலமர்வு





**( காரைதீவு குறூப் நிருபர் )**

கிழக்கு மாகாண தமிழ் பேசும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான இருநாள் வதிவிட செயலமர்வு சனி, ஞாயிறு தினங்களில் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர் சண்முகம் தங்கராஜா தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் வளவாளர்களாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சொலிஸ்டன் ஜனரல் ஜானக பண்டார மற்றும் சிரேஸ்ட அரசதரப்பு சட்டவாதியான நாகரெட்னம் நிசாந்தன் ஆகியோர் விரிவுரை வழங்கினர்.

இதன் போது நீதிமன்றத்தில் மதுவரி திணைக்களத்தின் ஊடாக வழக்குகளை கொண்டு செல்லும் போது வழக்கில் ஏற்படும் சட்டரீதியான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், நஞ்சு அபின் அபாயகரமான ஔடதங்கள் சட்டம், குற்றவியல் சட்டம், சாட்சி கட்டளை சட்டம், தண்டனை கோவை சட்டம் போன்றவற்றில் ஏற்படும் சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்வதாகவும் இச்செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் நடைபெற்ற இச்செயலமர்வை கிழக்குமாகாண மதுவரி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ச.தங்கராஜாவின் வழிகாட்டலில் நடைபெற்ற செயலமர்வில் ஊவா மாகாண உதவி ஆணையாளர் செ.ரஞ்சன், மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் நியுட்டன் அவுஸ்கோன், மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, திருகோணமலை மதுவரி திணைக்களத்தின் பொறுப்பதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருது நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்பு



**(கல்முனை விசேட நிருபர்)**

கட்டார் நாட்டில் பணியாற்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த பொறியியலாளர் எச்.எம். பர்ஸாத் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன்கருதி சாய்ந்தமருது பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

இவற்றை அவரது சார்பில் எம். சித்தி நிபாரா, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எச். ஜௌஸி, கணக்காளர் கே.எம். றியாஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

தூரநோக்கு சிந்தனையுடன் மாணவர் நலன்கருதி மிகவும் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தமைக்காக பொறியியலாளர் எச்.எம். பர்ஸாதிற்கு மாநகர சபை சார்பில் மிகுந்த நன்றியும் வாழ்த்தும் தெரிவிப்பதாகக் கூறிய ஆணையாளர் பாராட்டுப் பத்திரம் ஒன்றையும் வழங்கி வைத்தார்.

## முதலை கடித்து குடும்பஸ்தர் பலி

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு ஊத்த வாய்க்கால் ஆற்றில் மாடு மேய்க்கச் சென்ற ஒருவரை முதலை கடித்ததில் உயிரிழந்த சம்பவம் (03) இடம்பெற்றுள்ளது.

முதலையின் தாக்குதலுக்கு உள்ளானவர் சிப்பித்திடல் தம்பலகாமத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கே. சசிகுமார் வயது (36) என்பவராவர்.

மாடு மேய்க்க சென்றவரே இவ்வாறு முதலைக்கடியின் தாக்குதளுக்கு உள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரிய வருகிறது.மாடு மேய்க்கச் சென்ற இருவரில் ஒருவரே இவ்வாறு ஆற்றில் காணாமல் போய் பின்னர் ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## சதுரங்க சுற்றுப்போட்டியில் கோணேஸ்வரா வெற்றி



**(றொட்டவெவ குறூப் நிருபர்)**

பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் பாடசாலைகளுக்கு இடையில் 7 பேர் கொண்ட குழுக்கள் முறையில் கந்தளாய் மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் மாகாண மட்டடத்தில் (03) தி/இ.கி.ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வெற்றியீட்டியுள்ளது.

11 வயது மற்றும் 13 வயது மாணவர்கள் பங்குபற்றிய போட்டிகளில் 2 ஆம் இடத்தையும் 09 வயது மற்றும் 17 வயது மாணவர்கள் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் 15 வயது மாணவர்கள் கலந்து கொண்டு 5 ஆம் இடத்தையும் பெற்று அகில இலங்கை ரீதியாக நடைபெற உள்ள போட்டிகளில் கலந்துகொள்ள தகுதி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும் குறித்த மாணவர்களை தெரிவு செய்து பயிற்சியளித்து போட்டிகளுக்கு ஒழுங்குபடுத்தி கால நேரம் பாராது அவர்களுடன் பாடுபட்டு அயராது உழைத்து வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்ற விளையாட்டுத்துறை ஆசிரியர் சுபைடீன்க்கு பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

க.பொ.த. (சா/த) பரீட்சை;

## மருதமுனை அல் ஹம்றா வலய மட்டத்தில் முதலிடம்

**துறைநீலாவணை நிருபர்**

அண்மையில் வெளியான க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கல்முனை கல்வி வலயத்தில் மருதமுனை அல் ஹம்றா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று கல்முனை கல்வி வலயத்தில் சாதனை படைத்துள்ளது

கல்முனை வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தினை காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையும் மூன்றாம் இடத்தினை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையும் பெற்றுக் கொண்டுள்ளது

இதேவேளை, கிழக்கு மாகாணத்திலுள்ள பதினேழு கல்வி வலயங்களுள் மட்டக்களப்பு, கல்முனை மஹாஓயா கல்வி வலயங்கள் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் நூலகர்களின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நூலக நிர்வாகம் தொடர்பான ஒருநாள் பயிற்சி பட்டறை மட்டக்களப்பு நொச்சிமுனை கூட்டுறவு அபிவிருத்தி பயிற்சி பிரிவு கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வளவாளராக கலந்து கொண்ட கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் என். எம். ரவிக்குமாருடன் பயிற்சி முடிந்தபின் நூலகர்கள் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம்.

படம் இறக்காமம் தினகரன் நிருபர்

# வடக்கின் உதயம்

யாழ். போதனா வைத்தியசாலையில்

## நுரையீரல் கிருமி தொற்றாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

(யாழ்.விசேட நிருபர்)

அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனை காரணமாக நுரையீரல் மற்றும் இருதய 'வால்வு' ஆகியவற்றில் கிருமி தொற்றுக்குள்ளாகி யாழ், போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அதில் பெருமளவானோர் 25 வயதுக்குட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடுகளுக்கு செல்வதற்காக, இளையோர் பலர் மருத்துவ சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ பரிசோதனைக்காக வருகின்றனர். அவ்வாறானவர்களுக்கு பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது, நுரையீரல் மற்றும் இருதய வால்வு ஆகியவற்றில் கிருமி தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதுதொடர்பில் அவர்களிடம் பெற்றுக்கொண்ட தகவலின் அடிப்படையில் ஊசி மூலம் போதைப்பொருளை நுகர்ந்துள்ளமை கண்டறியப்பட்டது.

அதேவேளை சுவாசிக்க முடியாமல் சிரமத்துடன், கடும் காய்ச்சலுடனும் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் இளையோருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் அவர்களுக்கும் இருதய வால்வில் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. அவர்களும் ஊசி மூலம் போதைப்பொருளை நுகர்பவர்கள். இவ்வாறாக தினமும் சராசரியாக மூவர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் யாழ்ப்பாணத்தில் ஊசி மூலமான போதைப்பொருள் நுகர்வினால் 15 ற்கும் மேற்பட்டோர்உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாவற்குழியில் கடலாமை இறைச்சியுடன் இருவர் கைது



(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று பிற்பகல் 21 கிலோ கடலாமை இறைச்சி மீட்கப்பட்டிருப்பதுடன் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பகுதியில் பிடிக்கப்பட்ட கடலாமைகளை தென்மராட்சி நாவற்குழிப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து இறைச்சியாக்கிய போதே சாவகச்சேரிப் பொலிஸார் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர். இதன்போது கைதான சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



(யாழ். விசேட நிருபர்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், டெங்கு தடுப்பு உதவியாளர்களால் கையளிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவை கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென கோரியே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

## சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. தனியார் காணியொன்றில் தென்னம்பிள்ளை நடுவதற்காக கிடங்கு வெட்டிய போதே கைக்குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுதொடர்பாக காணி உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. கைக்குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கீழியன் குடியிருப்பு புனித சவேரியாரின் பெருவிழா

(தலைமன்னார் விசேட நிருபர்)

மன்னார் மறைமாவட்டத்தின் கீழியன்குடியிருப்பு புனித சவேரியாரின் பெருவிழா நேற்றுமுன்தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பங்குத் தந்தை அருட்பணி லோறன்ஸ் லியோன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருப்பலியானது பேசாலை பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அடிகளாரின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இக்கூட்டுத்திருப்பலியை அருட்பணி எஸ்.ஜெஸ்மன்ராஜ் அடிகளார், அருட்பணி எஸ்.அருண்தாஸ் குரூஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து நடாத்தினர்



திருப்பலி முடிவில் திருச்சுரூபம் பவனியாக வெளியில் ஏடுத்துச் செல்லப்பட்டு திருச்சுரூப ஆசீரும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

## ஆந்திர மாநில ஸ்ரீராம ஜெயபக்த குழுவினர் நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்கு வருகை

(கோப்பாய் குறூப் நிருபர்)

இந்திய நாட்டின் ஆந்திர மாநில ஸ்ரீராம ஜெயபக்த குழுவினர்கள் நேற்று(04) காலை 09 மணியளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்கு வருகை தந்தனர். நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

இந்திய ஆந்திர மாநில ஸ்ரீராம ஜெயபக்த சபையின் தலைவர் சிறி இராம ஜெய கீர்த்தி நாராயணசுவாமி தலைமையிலான 40 இற்கு மேற்பட்ட குழுவினர் இவ் வழிபாட்டில் கலந்துகொண்டனர். இவர்கள் யாழ். வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்கள், ஆலயங்கள் என்பவற்றை பார்வையிட்டனர்.



## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை



(கோப்பாய் நிருபர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்ற ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை, கலாசாலை அதிபர் த.சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் கலாசாலை வாயிலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலைக்கு கலாசாலை அதிபர் ச. லலீசனும் இந்து மாமன்ற காப்பாளரும் விரிவுரையாளருமாகிய கு.பாலசண்முகனும் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

அதனைத்தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் மலர் வணக்கம் செலுத்தினர். கலாசாலை ஆசிரிய மாணவர்கள் சமய வேறுபாடின்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குறித்து தாங்கள் அறிந்ததை சபையின் முன் குறுகிய நேர உரையாக சமர்ப்பித்தனர்.

நிகழ்வின் கருத்துரைகளை பிரதி அதிபர் த.கோபாலகிருஷ்ணன் மற்றும் தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆகியோர் ஆற்றினர். இந்து மன்ற காப்பாளர் கு. பாலஷண்முகன் நிறைவுரை ஆற்றினார். நிகழ்ச்சியினை மாணவர் மன்ற தலைவர் சு தனசீலன் நெறிப்படுத்தினார். நிகழ்வில் வரவேற்புரையை க.பிரசாந்தனும் நன்றியுரையை ச.கஜராஜூம் நிகழ்த்தினர்.

## சர்வதேச மனக்கணித போட்டியில் யாழ்ப்பாண மாணவன் சாதனை

சர்வதேச மனக்கணித போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவரொருவர் இரண்டாமிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

UCMAS இன் திருநெல்வேலி கிளை மற்றும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த சுதர்சன் அருணன் என்ற மாணவனே ஆறு வயதுக்குட்பட்ட ஏ1 பிரிவு போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தை பெற்றுள்ளார். மலேசியாவில் நேற்றுமுன்தினம் (03) நடைபெற்ற போட்டியில் 80இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் யாழ். திருநெல்வேலி UCMAS கிளை வெற்றிப் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.







சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பிரதேச செயலகம் நடாத்திய நிகழ்வில் 10 சக்கர நாற்காலிகள் நேற்றுமுன்தினம் லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அனுசரணையில் தமிழ் விருட்சகம் அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டன. (படம் ஓமந்தை விசேட நிருபர்)

## வட்டுக்கோட்டை இளைஞன் விவகாரம்; அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

வட்டுக்கோட்டை இளைஞனின் வழக்கு விசாரணையின் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 08ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார்.

அதுதொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று நடைபெற்றது. அந்நிலையில், வழக்கின் பிரதான சாட்சியமான, உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் நீதிமன்றத்தில் சமூகமளிக்காத காரணத்தால் அடையாள அணிவகுப்பு 08ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் செவ்வாய்க்கிழமை மதியம் 2.30 மணிக்கு மரண விசாரணைக்காக திகதியிட்டுள்ளது.

## யாழில் 2203 டெங்கு நோயாளர்கள் பதிவு

(பருத்தித்துறை விசேட நிருபர்)

யாழ். மாவட்டத்தில் இவ்வருடத்தின் இறுதி வரையான காலப் பகுதியில் டெங்கு தாக்கத்தால் 2203 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மேலும் இரண்டு இறப்புக்களும் பதிவாகியுள்ளன.



இதனை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நிலவும் மழையுடனான காலநிலைக்குப் பின்னர் நவம்பர் மாத இறுதி வாரத்திலிருந்து டெங்கு நோயின் பரம்பல் சடுதியாக அதிகரித்து செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதன்படி, யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தின் இறுதி வரையான காலப்பகுதியில் 2203 நோயாளிகள் இனங்காணப்பட்டதுடன் இரண்டு இறப்புக்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் பிரீமியர் லீக் சுற்றுப்போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த அயிலன் FC அணி



(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி, மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (3) மாலை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட உதைப்பந்தாட்ட லீக்கினால் மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இவ்விளையாட்டுப்போட்டி கடந்த யூலை மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 42 விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த வீரர்கள், 12 உரிமையாளர்கள் தமக்கு தேவையான வீரர்களை ஏலத்தில் பெற்று தமது கழகங்களை அமைத்து போட்டியில் பங்குபற்றி வந்தனர்.

லீக் முறையில் போட்டிகள் இடம்பெற்று புள்ளி அடிப்படையில் 4 அணிகள் 2 ஆம் சுற்றுக்கு தெரிவானது. இரண்டாவது சுற்றுக்கு 2 அணிகள் தெரிவானது. இப்போட்டியானது ஏ.கே.ஆர்.FC அணிக்கும் அயிலன் FC அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இதன்போது அயிலன் FC அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிப் பெற்று வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

முதல் நிலையை பெற்றுக் கொண்ட அணிக்கு 10 இலட்சம் ரூபாவும்,2ஆவது இடத்தை பெற்றுக்கொண்ட அணிக்கு 5 இலட்சம் ரூபாவும் பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கான நிதி அனுசரணையை சிறி சபாரத்தினம் அறக்கட்டளை வழங்கியது.

இப்போட்டியில் விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,முன்னாள் வடமாகாண செயலாளர் பத்திநாதன், அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ்,மற்றும் அருட்தந்தையர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீதிமன்ற கடமைக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில், நீதிமன்ற விசாரணைக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே நேற்றைய தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்துக்கு சாட்சியமளிப்பதற்காக சென்றிருந்தார்.

இந்நிலையி ல் அந்நபர் நீதிமன்ற அமர்வில் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அதனையடுத்து நபரை கைது செய்த, நீதிமன்ற பொலிஸார் பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அவரை சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்த உத்தரவிட்டார்.

அதேவேளை பொலிஸ் உத்தியோகத்தர் மது போதையில் குழப்பத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

## வங்காலை சென்.ஆன்ஸ் வித்தியாலயத்தில் 39 மாணவர்கள் உயர்தரத்துக்கு தகுதி

(தலைமன்னார் விசேட நிருபர்)

கல்வி பொதுதராதர சாதாரணப் தரப்பரீட்சையில் மன்.வங்காலை சென்.ஆன்ஸ் கல்லூரியில் 51 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் 04 மாணவர்கள் 09 ஏ பெற்றுள்ளதுடன் 03 மாணவர்கள் 08 ஏ பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையில் 39 மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்குச் செல்லத் தகுதி பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. 76.5 வீதமான இப்பாடசாலை மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

09 ஏ பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு செல்வன் பிரான்சீஸ் கொல்சன். செல்விகள் யேசுதாசன் மேரி பவுஸ்ரினா. இனோக் றூஹாம்மா, றெஜினோல்ட் இராஜநாயகம் றொசாறி மார்க் ஆகியோர் ஆவர்.

## சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வு நடைபவனி

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 வருட பூர்த்தியை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடை பவனி அண்மையில் நடைபெற்றது.

இணைந்த சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சி. சபாஆனந் மற்றும் விரிவுரையாளர்கள் கூட்டாகக் கொடியசைத்து ஆரம்பித்து வைத்த இந்த நடை பவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ் வீதி, வைத்தியசாலை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடை பவனி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

இந்நிகழ்வில் விளையாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கண்டி இலக்கிய இனிய நண்பர்கள் குழும ஏற்பாட்டில் கௌரவிப்பும் பாராட்டும்

## முக்கிய கல்விமான்கள் பங்கேற்பு



கண்டி இலக்கிய இனிய நண்பர்கள் குழுமத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் மிகப் பிரபல்யமான ஒளிப்படக் கலைஞர் ஜீவராஜ் (ஜீவன்) அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கண்டி விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் எஸ். சிவஞான சுந்தரம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் சமூகச் செயற்பாட்டாளர் எஸ். பரமேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

இதில் மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ். விஜயச்சந்திரன், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் எழுத்தாளர் கவிஞர் ரா. நித்தியானந்தன், ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் ஆர். பார்த்தீபன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர் இரா. அ இராமன் நிகழ்ச்சியினை சிறப்புற தொகுத்து வழங்கினார்.

**இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் சமூகச்செயற்பாட்டாளர் எஸ் பிரமேஸ்வரன் உரையாற்றும் போது;** இலட்சிய வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகின்றவர்கள் எந்த துறையாக இருந்தாலும் உயர் இலக்கை அடைய முடியும். அந்த வகையில் ஒளிப்படக் கலைஞர் ஜீவன் தனது ஒளிப்படத் துறையின் மூலம் தனது முகவரியை அடையாளப்படுத்தியுள்ளார். அவர் இலங்கையில் வாழ்ந்து விட்டு எங்கேயோ கண்காணாத இடமான கனடாவில் வாழ்ந்தாலும் ஒளிப்படத் துறையில் அதிக நாட்டம் கொண்டு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டதன் காரணமாகத்தான் நம் எல்லோர் மனதிலும் இன்னும் அவர் மறவாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் வெறுமனே ஒரு பல்கலைக்கழக பட்டதாரியாக மாத்திரம் இருந்து விட்டுச் சென்று இருந்தால் அவருடைய பெயர் இந்தளவுக்கு பிரகாசித்து இருக்க முடியாது.

அவர் எடுத்துக் கொண்ட ஒளிப்படத்துறை அவரின் பெயரை ஓங்கச் செய்துள்ளது. அவருடைய கடின உழைப்பு இலங்கையில் மட்டுமல்ல கனடாவிலும் அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. அந்த வகையில் எமது கண்டியில் உள்ள கலை இலக்கிய நண்பர்கள் ஒன்று சேர்ந்து ஒளிப்படத் துறையில் திறமை வாய்ந்த மாபெரும் கலைஞரைப் பாராட்டி கௌரவிப்பது நல்லதொரு விடயம் ஆகும். அந்த வகையில் நானும் சந்தோசம் அடைகின்றேன் என்றார்.

**மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் இங்கு உரையாற்றுகையில்;**

ஜீவன் என்னுடைய பல்கலைக்கழக நண்பர். அவர் பற்றிப் பேசுவதென்றால் 1983 களில் நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஜீவனோடு வசந்தக் குமார் என்ற நண்பர் இருப்பார். அவரும் கனடாவில் இருக்கிறார். தற்போது ஜீவன் மட்டும்தான் இலங்கை வந்துள்ளார். காரணம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1983 மற்றும் 1984 களில் புகு மாணவர்களது ஒன்று கூடல் திருகோணமலையில் இடம்பெற்றது. அதற்காக அவர் வந்தார். நானும் சென்றிருந்தேன்.

ஜீவன் என்றால் எப்பொழுதும் ஒளிப்படக் கருவியோடுதான் இருப்பார். 1983 களில் உருவங்களைப் பதிவு செய்வதில் யாராவது இருந்திருப்பார்களா என்றால் என்பது எனக்குத் தெரியாது. அவர் அத்துறையில் நிறையப் பரிசில்கள் பெற்றிருந்தார். பல்கலைக்கழகத்தில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் படித்து இருப்பார்கள். அந்த 2000 பேருக்கும் ஜீவனைத் தெரியும். அவர்கள் ஜீவனிடம் இருப்பார்கள். நாங்கள் எங்களுடன் இருப்போமோ தெரியாது. ஆனால் நாங்கள் ஜீவனிடம் இருப்போம். ஜீவனுடைய கமராவில் ஒளிப்படக் கருவியினுள் இருப்போம். பேராதனைப் பல்கலைக்கழகத்தினுடைய அந்த இயற்கை அழகையும். அங்கு இருக்கக் கூடிய செயற்கையான செயற்பாடுகள் அல்லது விரிவுரையாளர்களுடைய செயற்பாடுகளை தன்னுடைய ஒளிப்படக் கருவிக்குள் உள்வாங்கி அதனை மேலும் பதிப்பித்து தருகின்ற விடயங்கள் எங்களுக்கு ஞாபகம் இருக்கின்றன. அங்கு அவ்வாறு அறிமுகமான எங்களுடைய ஜீவன். மூன்று அல்லது நான்கு வருடங்களாக அங்கே கல்வித் துறையில் ஈடுபட்டார்.

ஜீவன் எங்களோடு படித்த அக்கால கட்டங்கள் மிகப் பெறுமதியானது. அவற்றை மீளவும் நினைவூட்டக் கூடியது என்றார்.

**ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆலோசகர் ஆர். பார்த்தீபன் உரையாற்றும் போது;**

கனடா எல்லோரையும் வரவேற்கும் ஒரு நாடு. எல்லோரும் கனடாவை நோக்கிப் போய் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் கனடா அனுப்புவதாக 80 இலட்சம் ரூபாவை என் நண்பரிடம் சுருட்டிக் கொண்டார். அவர் மட்டக்களப்பிலுள்ள நண்பரிடம் சென்று கடனாக வாங்கிக் கட்டினார். பணத்தை சுருட்டிக் கொண்டவன் சிறையில் வாடுகிறான். இது இன்றைய கனடாக் கனவு. ஜீவன் சிறந்த ஒளிப்படக் கலைஞர். அக்கால கட்டத்தில் ஒளிப்படக் கலைஞர்கள் ரொம்பக் குறைவு. ஒரு நல்ல ஆசிரியர். அவர் கம்பளை சாஹிராக் கல்லூரியில் கற்பித்தார். அவர் ஆசிரியராக இருந்து மாணவர் சமூகத்திற்குப் பெரும் பங்காற்றியிருக்கலாம் என்ற மனக் கவலை அவருக்கு இருக்கிறது.

வாழ்க்கையில் இறைவன் தான் தீர்ப்பு எழுதுவான். யாராக இருந்தாலும் அவர் எங்கு இருக்க வேண்டும். என்ன தொழில் செய்ய வேண்டும். எப்படி இருக்க வேண்டும். வாழ்க்கை ஒரு மாய இன்பம். மிகக் குறுகிய காலம் வாழப் போகின்றோம். இதில் மிகச் சிறந்தது எவை என்றால் அடுத்தவர்களைச் சந்தோசப்படுத்திப் பார்ப்பதுதான் மிகச் சிறந்தது. குறைந்தது அடுத்தவர்களுக்கு உதவி செய்ய முயுமா? செய்து விடுங்கள்.

ஒருவர் இறந்த பின் அவருக்காக புத்தகம் எழுதுவது வாழ்த்துக் கவி பாடுவது என்பதில் எந்தப் பயனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஜீவனோடு கதைத்துக் கொண்டிருக்கின்ற போது அவர் மக்களுக்கு நிறையச் செய்ய வேண்டும் என்ற நல்ல உள்ளம் இருக்கிறது. இவர் கிழக்கு மாகாணத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் மலையகத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஆசையும், ஆர்வமும் இருக்கிறது. இது வரவேற்கத்தக்க விசயம்.



**கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் உரையாற்றும் போது;** ஔவையார் பாடலில் கூறும் போது 'சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நா பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம். கொடையும் நற்பும் தயவும் பிறவிக் குணம்' என்பார்கள். ஆகவே இங்கு ஜீவன் மூன்று விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளார்.

பழைய நட்புக்களைத் தேடி









கனடாவில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்து தன்னுடைய நட்பை மேலும் வலுப்படுத்தியது மட்டுமல்லாமல் சமூகப் பணிகளையும் ஆற்றி வருகிறார். இப்படிப்பட்ட சமூகப் பணிபுரிவோர்களைக் காண்பது மிக அரிது. அவர் எங்களுடைய பாடசாலைக்குள் நுழைந்த போது அவர் வசற்படியிலேயே இப்பாடசாலைக்கு ஏதாவது செய்வோம் என்று கூறினார்.

அந்த வகையில் தம் சமூகத்திற்கு கட்டாயம் சேவை செய்ய வேண்டும் என்று வந்திருக்கின்ற ஜீவன், இந்தப் பாடசாலைக்கு ஜீவனாக வர வேண்டும் என்று வரவேற்பதோடு இன்றைய தினம் அவருக்கு பாராட்டு விழாவினை நடத்திய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே அறம் என்பது மிக முக்கியமான கடமை. எங்களுக்கு அடுத்த பிறவி பற்றி நம்பிக்கை இருக்கிறது. நாங்கள் செய்யும் அறமும் தர்மமும்தான் எங்களுடைய அடுத்த பிறவியைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கின்றது என்றார்.



**முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறை விரிவுரையாளரும் மலையக எழுத்தாளருமான கவிஞர் ரா. நித்தியானந்தன் உரையாற்றும் போது;**

நாங்கள் மலையகம் 200 என்ற நிகழ்வில் ஜீவனைக் கௌரவிப்போம் என்று தீர்மானித்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தில் அது ஒத்தி வைக்கப்பட்டது. எனவே அப்படியான நிகழ்வை நடத்த முடியாமை போய் விட்டதே என்ற ஆதங்கம் இருந்தமையின் காரணமாக எப்படியாவது நாங்கள் ஜீவனின் சிறப்பம்சங்களைப் பேசி பாராட்டி கௌரவித்து வழியனுப்பி வைக்க வேண்டும் என்ற ஆதங்கம் இருந்தமையினால் தான் அவசர அவசரமாக இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டி ஏற்பட்டது. ஏனென்றால் அவர் மிகக் குறுகிய காலத்தில் கனடாவை நோக்கிச் சென்று விடுவார்.



அவருக்கும் எனக்கும் உறவு என்றால் 40 ஆண்டுகளைக் கொண்டது. எனினும் இடைப்பட்ட காலத்தில் முகவரி காணாமற் போய் விட்டோம். 1983, 1984 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழக மாணவர் களுடைய ஒன்று கூடல் நிகழ்வு தொடர்பில் முயற்சிகளை மேற்கொண்ட போது தற்செயலாக அவர் என்னுடைய தொலைபேசி இலக்கத்தை எடுத்துக் கதைக்க ஆரம்பித்து விட்டார். அது புதுமையாக இருந்தது. நாங்கள் நீண்ட நேரம் கதைத்தோம். அதன் பிற்பாடு தான் அவர் கனடாவில் இருப்பதையும் மற்றும் அவர் பற்றிய பல்வேறு விடயங்களை அறிந்து கொண்டேன்.



இரண்டு அருமையான பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவர் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னுமொருவர் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஜீவன் எங்கள் குடும்பத்தோடு உறவு கொண்டவர். என்னுடைய திருமணத்தில் ஒரு சதம் காசு வாங்காமல் அவ்வளவு புகைப்படத்தையும் எடுத்து தந்தவர் இவர்தான். அந்தப் படங்களைப் பார்க்கின்ற போது ஜீவன் ஞாபகம்தான் வரும். அது மாத்திரமல்ல உறவினர் வீடுகளுக்கும் வந்து இவர்தான் படம் எடுப்பார். இங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பரமேஸ்வரன் என்னுடைய மாணவர். என்னுடைய மாணவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் நல்ல நிலையில் இருக்கிறார்கள். அந்த வகையில் பரமேஸ்வரன் இன்று உயர்ந்த நிலையில் இருக்கிறார். அவர் உயர்ந்த நிலையில் இருப்பது ரொம்ப பெருமையாக இருக்கிறது.

**பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் விஜயச்சந்திரன் உரையாற்றும் போது;** ஜீவன் பல்கலைக்கழகத்தில் எல்லோர்களிடத்திலும் நட்பாகக் பழகக் கூடிய ஒருவர். அவர் பல்கலைக்கழகத்தில் படித்தாலும் அவர் பிரபல்யமான படப்பிடிப்பாளர். எங்களுடைய எல்லா நிகழ்வுகளையும் அவர்தான் படம் எடுப்பார். அந்த நிகழ்வுகளை அவருடைய கமராக்குள் அடக்கி வைத்திருந்து ஞாபகமூட்டுகின்ற திறமையுடையவர். அந்தக் காலத்தில் அவரை சிங்கள மாணவர்களாக இருந்தால் என்ன, முஸ்லிம் மாணவர்களாக இருந்தால் என்ன எல்லா மாணவர்களும் அவரை நன்கு தெரியும். எல்லா நிகழ்வுகளிலும் அவர் முன்னிற்பார். அவர் கனடா சென்றிருந்தாலும் மிகவும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த ஒருவர். நிறையப் பேர் பல்கலைக்கழகத்தில் படிப்பதுண்டு. ஆனால் தொடர்ந்து நட்பைப் பேணுவது இல்லை. ஏனென்றால் தொழில் நிமித்தம் காரணமாக சோலிகள் காரணமாக தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆனாலும் அதற்கப்பாலும் நட்பைப் பேணுபவர்கள் இருக்கின்றார்கள். அதுவும் 40 வருடங்களுக்கு பிறகு நட்பைப் பேணுவது என்பது கடினமான விடயம். குறிப்பிட்ட பெயர்கள் ஞாபகத்தில் இருக்கும். ஆனால் ஜீவனை பெயரைச் சொல்லாமலே ஜீவனைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளலாம். அன்று பார்த்த ஜீவனாகத் தான் இருக்கின்றார்.

**கனடாவில் இருந்து வருகை தந்த ஒளிப்படக் கலைஞர் எஸ். ஜீ வராஜ் (ஜீ வன்) ஏற்புரையாற்றும் போது;**

நான் கனடாவுக்கு இடம்பெயர்ந்து சுமார் 30 வருடங்கள் ஆகின்றன. புகைப்படம் என்று பொதுவாக அழைப்பதில்லை. ஒளிப்படம் என்று சொல்வார்கள். ஏனென்றால் புகைப்படம் என்ற சொல் இல்லாமற் போய் இப்பொழுது ஒளிப்படம் என்று அழைக்கின்றார்கள். நான் புகைப்படம் எடுக்கின்ற காலப் பகுதி சுருள் நாடாவில் ஒளிப்படங்களை கழுவும் காலம். அப்பொழுதுவிரும்பினமாதிரிநாங்கள் படம் எடுக்க முடியாது. புகைப்படச் சுருள்கள் விலை உயர்ந்தவை. ஆகவே அவற்றைக் கவனமாகப் பார்த்துத்தான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும். இப்பொழுது எடுத்தவுடன் பார்க்கின்ற வசதி கூட இல்லை. எடுக்கும் போது முதல் கவனமாக எடுக்க வேண்டும். என்ன காட்சிகள் உள்ளடக்கப்பட வேண்டும். என்னென்ன காட்சிகள் உள்ளடக்கப்படக் கூடாது என்று இருக்கிறது. அதற்குரிய முறைப்படி எடுக்க வேண்டும. எவ்வாறு படம் எடுக்க வேண்டும் என்கின்ற பல விதி முறைகள் இருக்கின்றன. அதற்கு ஏற்ற வகையில் எடுக்க வேண்டும்.

நான் கனடாவில் வாழ்ந்தாலும் எமது இலங்கை வாழும் எமது சமூகத்தின் தொப்புள் கொடி உறவுகளின் நல்வாழ்வுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் கல்வி மேம்பாட்டுக்காகவும் அயராது பாங்காற்ற தயாராகவுள்ளேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**எஸ். பரமேஸ்வரன்...**

# கெக்கிராவ கனேவல்பொலவில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

*கெக்கிராவ குறூப் நிருபர்*



இளைஞர்களும் பங்கேற்பு

கெக்கிராவ கனேவல்பொலயில் "ரிவர்சைட் போய்ஸ்" இளைஞர்கள் அமைப்பினாள் ஏற்பாடு செய்யப் பட்ட டெங்கு ஒழிப்பு சிரமதானம் நேற்று முன்தினம் (3) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் நடைபெற்றது. கனேவல்பொல பஸார், கனேவல்பொல ஆற்று வீதி ஆகிய பொது இடங்களில் இந்த சிரமதானம் நடைபெற்றது.

கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் நிர்வாக பொதுச்சுகாதார ஆய்வாளர் கெ. கருணாதிலகவின் பிரதான மேற்பார்வையில் இச்சிரமதான நிகழ்வு நடைபெற்றதோடு, கனேவல்பொல பிராந்திய பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி டி.எம்.சி.எச். திஸாநாயக்க, மரதங்கடவல பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.டி. சமரகோன், பொலிஸ் சார்ஜன் பண்டார ஆகியோரும் இச்சிரமதான நிகழ்வில் கலந்து கொண்டு மேற்பார்வை செய்தனர்.

நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு அபாயம் அதிகரித்து வருவதனால் முன்னெச்சரிக்கையாக இவ்வாறான சிரமதான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது பாராட்டத்தக்க விடயம் என்றும் மக்கும் குப்பைகள், மக்கா குப்பைகள் என்பவற்றை வேறுபடுத்தி மக்கள் அப்புறப்படுத்தினால் குப்பைகளை சரியான முறையில் முகாமை செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீரச்சோலை மு. வித்தியாலயத்தில் 39 பேர் உயர்தரம் கற்க தகுதி

*(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)*

வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி அநுராதபுரம், வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.ஐ.நதீர் ஹம்ஸா தெரிவித்தார்.

இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 41 மாணவர்களில் 39 பேர் உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்பதற்கு சித்தியடைந்துள்ளனர். எம்.கே.எம். சதாத் ,எச்.எப். நாசிரா ,எஸ்.எப். நுஸ்கி ,பீ.எப். சஹானி,எஸ்.எப். சஷீஹா ஆகிய ஐந்து மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் '9 ஏ' சித்திகளை பெற்றுள்ளனர்.

மேலும் ஏ.பீ.எம். அசீம், பீ.பீ. பஸ்ஹானா ஆகிய மாணவர்கள் 07 ஏ, 02 பீ சித்திகளையும் எம்.ஜீ. ரிப்கி 06 ஏ, 03 பீ சித்திகளையும் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

# ஹம்பாந்தோட்டையில் மீண்டும் அடைமழை

## மக்களின் இயல்பு வாழ்வும் பாதிப்பு

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*

ஹம்பாந்தோட்டை பிரதேசமெங்கும் மீண்டும் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருவதினால் மக்களின் அன்றாட வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கடந்த பல மாதகாலமாக தொடர்ச்சியாக பெய்துவந்த மழை இடைக்கிடை பெய்ததினைத் தொடர்ந்து மக்கள் தடையின்றி அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்ததோடு விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வந்திருந்த நிலையில் மீண்டும் தொடர்ச்சியாக மழைபெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.



மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்து வருவதினால் மீனிற்கு தட்டுப்பாடும் நிலவி வருகிறது. சந்தையில் அரிசி மற்றும் மரக்கறி வகைகள் உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுவதோடு பொருட்களுக்கு தட்டுப்பாடும் நிலவி வருகின்றன. சந்தைகளில் பொருட்களை கொள்வனவு செய்யவரும் மக்களின் தொகையும் குறைந்துள்ளது.

SUNDAY OBSERVER adz it's what you want | වරම | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Gampaha - 033 22 23 464**
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

**Wattala - 011 2 937 989**
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

**Nilpanagoda - 077 8 627 321**
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

**Wattala - 011 2 932 511**
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

**Kochchikade - 031 22 78 359**
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

**Batuwatta - 071 8 921 271**
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

**Dunagaha - 077 3 517 752**
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

**Ja-Ela - 011 2 947 379**
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

**Negombo - 071 480 43 55**
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

**Katunayake - 077 4 115 998**
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

**Kandana - 011 2 233 651**
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

# தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| நாச்சிக்குடா வீதிக்கு கொன்கிறீட்டை நிர்மாணித்தல் |
| பளத் பள்ளி வீதிக்கு கொன்கிறீட்டை நிர்மாணித்தல் |
| மாஞ்சோலை மார்க்கட் வீதிக்கு கொன்கிறீட்டை நிர்மாணித்தல் |
| துளசிபுரம் வீதி மற்றும் தபோவனம் வீதிக்கு கொன்கிறீட்டை நிர்மாணித்தல் |
| புல்மோட்டை-04 உள்ளக வீதிக்கான (0+00-0+750 கிமீ) (பிரிவு-01) மேம்படுத்தல் |
| புல்மோட்டை-04 உள்ளக வீதிக்கான (0+750-1+080 கிமீ) (பிரிவு-02) மேம்படுத்தல் |
| கேணியடி 5 ஆம் ஒழுங்கை, நாக கோவில் வீதி, புகையிரதபாதை வீதி, பன்சல கிணற்றிற்கு அருகிலுள்ள வீதிக்கான மேம்படுத்தல் |
| பட்டிக்குடா கரையாவெளி வீதிக்கான மேம்படுத்தல் |
| சாந்திபுரம் வீதிக்கான மேம்படுத்தல் |
| கிளினிக் நிலைய வீதி, ஐஸ் தொழிற்சாலை வீதி மற்றும் ஜின்னாநகர் வீதிகளுக்கான மேம்படுத்தல் |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (0+1000 இலிருந்து 0+400 கிமீ வரை) |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (0+000 இலிருந்து 0+400 கிமீ வரை) |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (0+400 இலிருந்து 0+800 கிமீ வரை) |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (0+800 இலிருந்து 1+300 கிமீ வரை) |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (1+300 இலிருந்து 0+710 கிமீ வரை) |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (1+710 இலிருந்து 2+120 கிமீ வரை) |
| நீலபொல பார்ட்டி மஹத்தகே வீட்டிற்கு கங்குவெளி பாலம் வீதிக்கு அருகிலுள்ள பாலத்திற்கான மேம்படுத்தல் (பிரிவு-01) (2+120 இலிருந்து 2+540 கிமீ வரை) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் www.rda.gov.lk என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதள பக்கத்தை 2023.12.05 ஆம் திகதியிலிருந்து 2023.12.14 ஆம் திகதி வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**திருகோணமலை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

### சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை

## நீச்சல் தடாக இரசாயனப் பொருட்களை வழங்குதல் – 2024

1. ''2024ஆம் வருடத்தில் நீச்சல் தடாக இரசாயனப் பொருட்களை வழங்குவதற்கு'' தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் சார்பில் அமைச்சு கேள்விச் சபைத் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, நிர்வாகக் கட்டிடம், பெறுகை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2023-12-06ஆம் திகதி முதல் 2023-12-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பின்வரும் முகவரியில் கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. தகுதியுடைய விலைமனுதாரர் இலங்கையில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் இதுவரை வெற்றிகரமாக நீச்சல் தடாக இரசாயனப் பொருட்களை வழங்குவதில் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2,500.00 ரூபா (வெட் சகிதம்) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023-12-06ஆம் திகதி முதல் 2023-12-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பின்வரும் முகவரியிலுள்ள கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2023-12-28ஆம் திகதி பி.ப 2.00 மணி அல்லது அதற்கு முன் சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை, த. பெ. இல. 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து சமுகம் தந்துள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அல்லது நிகழ்நிலை (online) ஊடாக பின்வரும் முகவரியிலுள்ள கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, திறந்தவெளி அரங்கு, நிர்வாகக் கட்டிடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட ஒரு இலட்சம் (100,000.00 ரூபா) இலங்கை ரூபாவிற்கான விலைமனு பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுப் பிணை முறி 2023-12-28ஆம் திகதி முதல் 2024-04-15ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 107 நாட்கள் வரை)
9. விலைமனுக்கள் 2023-12-28ஆம் திகதி முதல் 2024-03-13ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 77 நாட்கள் வரை).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை,**
**த.பெ. 2211,**
**ஆர்தர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

# Ministry of Education
## Vocational Training Authority of Sri Lanka

VTA

### Procurement Notice

The Chairman, Procurement Committee, Vocational Training Authority of SriLanka (VTA) Invites Sealed Bids from eligible and qualified bidders for Supplying ofTraining Equipment & CBT, Daily Diary Books for VTA.

| No. | Bid No. | Description | No of Items | non-refundable fee |
|---|---|---|---|---|
| 01 | VTA/PROC/GOODS/ 13Y/Special/ NCB/2023/01 | Automobile Training Equipment | 09 Nos. | Rs. 3,500.00 |
| 02 | VTA/PROC/GOODS/ TF/NCB/ 2023/26 | CBT, Daily Diary Books(Sinhala & Tamil) | 63,500 Nos. | Rs. 3,500.00 |

1. Bidding documents can be collected from the Procurement unit of the VTA on submission of a written application to the Chairman, Vocational Training Authority of Sri Lanka from 05.12.2023 to 25.12.2023 between 9.00 am to 3.00 pm on working days upon payment of a non-refundable fee as mentioned in above table. The method of payment should be in cash.
2. Bidder should mention the contract reference "file name" on the top left hand corner of the envelope. Sealed Bids shall be delivered by registered post to the Chairman, Procurement Committee, Vocational Training Authority of Sri Lanka, "Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05. to reach on or before 10.30 am on 27.12.2023, or can be deposited in the Tender box kept at the Procurement Unit of the VTA on or before at 10.30 am on 27.12.2023. The Bids will be opened immediately after closing of the Bids and late bids will be rejected.
3. Bidders or their authorized representatives can be presented at the bid opening.
4. Any further clarification with regard to the Procurement can be obtained from the Procurement Unit prior to the closing of bids.
5. Broachers and Catalogs should be forwarded when submitting the Bids.
6. Pre-Bid meeting will be held on 18.12.2023 at 10.30 am at the Conference Room of the 05th Floor "Nipunatha Piyasa" building Premises. All Bidders are expected to be attended for pre bid meeting.

**Chairman**
**Department Procurement Committee**
**Vocational Training Authority of Sri Lanka,**
**"Nipunatha Piyasa"4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05.**
**Tel :011-2596516**

# கேள்வி அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## 2024-2025 ஆம் ஆண்டுகளுக்காக பீடைக் கட்டுப்பாட்டு சேவையை வழங்குவதற்கான கேள்வி
## Q 614/23

01. 2023.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பீடை ஒழிப்பு அமைப்பொன்றாக பதிவு செய்யப்பட்டதும் இந்தத் துறையில் சிறந்த அனுபவத்தையுமுடைய புகழ் வாய்ந்த நிறுவனங்களிலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் பீடைக் கட்டுப்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கேள்விச் சபையின் தலைவர் கேள்விகளை கோருவதற்கு விரும்புகின்றார்.
02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. 2023.12.27 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் 3,000 ரூபாவை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக செலுத்தி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்டு பணப் பற்றுச்சீட்டுடன் உத்தியோகபூர்வ கடிதத்தையும் சமர்ப்பிப்பதன் மூலம், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகரிடமிருந்து கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2023.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தலைவர்-பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய, நுகேகொட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தலைவரின் அலுவலகத்திற்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
05. 2023.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் கேள்விகள் திறக்கப்படும்.
06. கேள்விதாரர் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவதுடன் கேள்விகளை திறக்கும் அலுவலரானவர் ஒவ்வொரு கேள்விதாரரினாலும் கோரப்பட்ட விலைகளை சமுகமளித்துள்ளவர்களுக்கு வாசித்துக் காட்டுவார்.
07. விலைமனுப்பிணையானது 50,000 ரூபாவாகும்

தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2778624, 0112778610 நீடிப்பு: 3142. தொலைநகல்: 011-2778624. .மின்னஞ்சல்: supplicesjgh@gmail.com

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

CAV-4977 ZOTYE Z100 2017, கார் அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 079484

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

CAG-5072 TOYOTA AXIO 2015, கார் அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 079481

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

ABE-7877 BAJAJ, 2015, QU-3249 BAJAJ, 2009, முச்சக்க ரவண்டி அதியுயர் வி லைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலை பேசி 07 11210810. 079485

PX -3666 TATA AC E 2014, அதி யு யர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 079479

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## PMF பினான்ஸ் பீஎல்சீ

### மீட்கப்படாத தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

PMF பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்தின் தங்கக் கடன் திட்டத்தின் கீழ் பிணையாக பின்வரும் கிளைகளில் 2023 ஜனவரி மாதம் வரை அடகு வைக்கப்பட்டு மீட்கும் காலம் நிறைவடைந்து இதுவரை மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் பின்வரும் நாட்களில் மு.ப. 09.30 மணி முதல் ந.ப. 12.00 மணி வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| கிளை மற்றும் அடகு நிலையம் | ஏலவிற்பனை இடம்பெறும் திகதி மற்றும் இடம் |
|---|---|
| திருகோணமலை, எல்பிட்டிய, வெள்ளவத்தை, கண்டி, மாத்தறை, அனுராதபுரம், மத்துகம, கம்பஹா, மாத்தளை, நீர்கொழும்பு, ஹோமாகம மற்றும் குருநாகல் | 2023 டிசம்பர் 13ஆம் திகதி இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு-03. |

- முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனைக்கு முன்வைக்கப்பட்டுள்ள பொருட்களின் ஒரு பகுதியை அல்லது சகலதையும் அகற்றிக்கொள்ளல் மற்றும் இந்த ஏலவிற்பனையை இரத்துச் செய்தல் அல்லது ஒத்திவைத்தல் தொடர்பான உரிமையை PMF பினான்ஸ் பீஎல்சீ நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.
- ஏலவிற்பனைக்கு வரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
- ஏலவிற்பனைக்கு நுழைவுக் கட்டணமொன்று அறவிடப்படும்.

**முகாமையாளர் - தங்கக் கடன்**
**PMF பினான்ஸ் பீஎல்சீ**
**இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு-03.**
**தொலைபேசி: 011-7 733 600 / 0719 342 413**

## அநுராதபுரம் மாநகர சபை

மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 245 பந்தியின் 212 (ஆ) பிரிவின் பிரகாரம் அநுராதபுரம் மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வரைவின் வரவு - செலவுத் திட்ட ஆவணம் 2023.12.06 ஆம் திகதி தொடக்கம் 07 நாட்களுக்கு பரீட்சிப்பதற்காக அநுராதபுரம் மாநகர சபை முகப்பு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகிறோம்.

**டபிள்யு.எம்.ஆர். விஜேசிங்க**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**அநுராதபுரம்.**

## பெறுகை அறிவித்தல்

ரம்புக்கணை பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் ஆதனங்களை 2024ஆம் வருடத்தில் குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக்கள் 2023-12-04ஆம் திகதி முதல் 2023.12.18ஆம் திகதி வரையில் வழங்கப்படும்.

| தொ. இல. | ஆதனத்தின் விபரங்கள் |
|---|---|
| 1. | பிரதேச சபைக் கட்டிடத்தின் தரை தளத்தில் இடதுபக்க அமைந்துள்ள இடப்பரப்பு (NSB முன்னால்) |
| 2. | சபைக்குரித்தான இறைச்சிக் கடை |
| 3. | சபைக்குரித்தான மீன் கடை |
| 4. | ரம்புக்கணை பொது மலசலகூடம் |
| 5. | விளைச்சல் காணி |

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விசாரணைகள் - 0352265275**

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**ரம்புக்கணை.**

www.adz.lk
it's what you want

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம்

# 2024 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

1. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஏழு (7) பிராந்திய நிலையங்களுக்கு (யாழ்ப்பாணம்/ திருகோணமலை/ மட்டக்களப்பு/ காலி/ தங்கல்லை/ நீர்கொழும்பு/ பாணந்துறை) 2024ஆம் ஆண்டுக்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட பிரிவுகளின் வழங்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து 2023.12.05 ஆம் திகதி தொடக்கம் 2023.12.28 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. கீழ் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய வெவ்வேறான சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பதிவுக்காக சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி,
   - கீழ்குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்பதோடு ஒவ்வொரு உருப்படிக்காகவும் 1000 ரூபாவின் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் அறவிடப்படும்.
   - பதிவுக் கட்டணத்தை இலங்கையில் உள்ள எந்த ஒரு மக்கள் வங்கி கிளை வழியாக 214-1-001-6-3629909 என்ற கணக்கு இலக்கத்தில் மக்கள் வங்கியின் முத்துவெல் கிளைக்கு வைப்புச் செய்யலாம். மேலதிக விபரங்களுக்காக இலங்கை சமுத்திர பல்கலைக்கழக, சிரேஷ்ட உதவி பணிப்பாளரை (பெறுகை) தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி: 011-4346991/ 011-4346993/ 011-7112655)

3 வங்கி வைப்பு ரசீதுடன் சேர்த்து விண்ணப்பத்தை 2023 டிசம்பர் 28 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கொழும்பு 15, மட்டக்குளி, காக்கைதீவு, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்பு பெட்டிக்கு இடுதல் வேண்டும். விண்ணப்பத்தை மூடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

3 விண்ணப்பிக்கும் ஒப்பந்தத்தின் பெறுமதிக்கு தொடர்புடைய சான்றிதழை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். வெற்றிகரமான ஒப்பந்ததாரர்களாக இருப்பதன் அத்தாட்சியில் எழுது மூலமான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். ICTAD பதிவைக் கொண்ட ஒப்பந்ததாரர்கள் பெறுமதிச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தேவையில்லை. எவ்வாறாயினும், பதிவுச் சான்றிதழ் 24.12.31 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

| உருப்படி இலக்கம் | வழங்கல்கள் மற்றும் சேவைகள் |
|---|---|
| | **உபகரணங்களின் வழங்கல்** |
| 1 | அலுவலக தளபாடங்கள்/ விரிவுரை மண்டப தளபாடங்கள்/ நூலக தளபாடங்கள் (மரப்பலகை/ உருக்கு மற்றும் ஏனையவை) |
| 2 | UPS/ அச்சுப்பொறிகள்/ நிழல்பிரதி இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திரங்கள்/ ஸ்கேனர்கள் / பல்லூடக உபகரணங்கள் / திரைபெருக்கிகள் / ரோனியோ/ கைரேகை அடையாள இயந்திரம் முதலியன. |
| 3 | கணினிகள்/ கணினி துணைப்பொருட்கள் / மடிக்கணினி/ நோட் புக்குகள்/ டெப்கள் |
| 4 | வளிச்சீராக்கிகள் மற்றும் துணைப்பொருட்கள்/ மின்பிறப்பாக்கிகள்/ மின்விசிறிகள்/ குளிர்சாதனப்பெட்டிகள்/தொலைக்காட்சி பெட்டிகள் முதலியன. |
| 5 | கெமரா மற்றும் கட்புல செவிப்புல உபகரணம்/ பணி நிலையங்கள்/ சி.சி.டீ.வி. கெமரா |
| 6 | வலைப்பின்னல் துணைப்பொருட்கள்/ கணினிகளுக்கான துணைப்பொருட்கள்/ Storage Media/ வைரஸ் தடுப்பு மென்பொருட்கள் |
| 7 | விளையாட்டு பொருட்கள்/ உடல் பயிற்சி உபகரணங்கள் |
| 8 | தீக் காப்பு உபகரணங்கள் (தீ அணைப்பு/ தீ அபாய ஒலி முறை முதலியன) |
| | **அலுவலக நுகர்வுகள்/ அச்சு மற்றும் விளம்பரம் வழங்கல்** |
| 09 | அனைத்து வகையான அலுவலக மற்றும் பொதுவான எழுதுபொருட்கள் |
| 10 | அச்சுப்பொறி/ நிழல்பிரதி டோனர்கள், இன்க் காட்ரிட்கள், ரிப்பன்கள்/ மாஸ்டர் ரோல்கள்/ அடையாள அட்டை அச்சிடும் பிளாஸ்டிக் அட்டைகள் |
| 11 | பெயர் பலகைகள்/ அறிவித்தல் பலகைகள்/ இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்/ கேடயங்கள் மற்றும் பதக்கங்கள் |
| 12 | அனைத்து வகையான வடிவமைப்பு மற்றும் அச்சு வேலைகள் (செய்தி மடல்கள்/ ஆண்டு அறிக்கைகள்/ சஞ்சிகைகள்/ தபாலுறைகள்/ வருடாந்த பாராட்டு வடிவங்கள் (நாட்குறிப்புகள்/ நாட்காட்டிகள்), பிரசுரங்கள், சுவரொட்டிகள், பதாகைகள் முதலியன) |
| 13 | துப்புரவு இரசாயனங்கள்/ கழிப்பறை சுத்தம் செய்தல் திரவம்/ கிருமிநாசினிகள் முதலியன. |
| | **பயிற்சி உபகரணங்கள்/ ஆய்வுகூட/ வேலையிட உபகரணங்களின் வழங்கல்** |
| 14 | வானொலி தொடர்பாடல் உபகரணங்களுடன் வழிச்செலுத்தல் உபகரணங்கள் (ஜி.பீ.எஸ்./ ராடார்) |
| 15 | நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் உயிர்க்காப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள். |
| 16 | Gas Arc Welding இற்கான அனைத்து வகையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் |
| 17 | லேத் வேலைகளுக்கு தொடர்புடைய அனைத்து வகையான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் |
| 18 | கண்ணாடியிழை மூலப் பொருட்கள் மற்றும் படகு கட்டுமானப் பொருட்கள் |
| 19 | கடல்சார் வண்ணப்பூச்சுகள், Manila, Polypropylene மற்றும் நைலான் கயிறு மற்றும் மீன்பிடி சாதனங்கள் |
| 20 | Marine Craft, Marine Engines இற்கான உதிரிப்பாகங்கள் |
| 21 | ஸ்கூபா டைவிங் உபகரணங்கள் |
| 22 | ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனங்கள் மற்றும் கண்ணாடி பொருட்கள் |
| 23 | மரைன் எஞ்சின் நடைமுறை மாதிரிகள் (Out/In Board) |
| 24 | மீன்பிடி மற்றும் கடல்சார் மின்னணு பயிற்சி கருவிகள்/ உபகரணங்கள்/ இயந்திரம் |
| 25 | மீன்பிடி உபகரணங்கள் |
| 26 | மீன் வளங்கலுக்கான அனைத்து உதிரிப்பாகங்கள் |
| | **மீன் வளர்ப்பு மற்றும் நீர் வளங்கல் உபகரணங்களின் வழங்கல்** |
| 27 | மீன் வளர்ப்பு மற்றும் நீர் சோதனை தொடர்பான அனைத்து வகையான சோதனை கருவிகள் |
| 28 | பல்வேறு வகையான நீர் குழாய்கள் மற்றும் பாகங்கள்/ நீர் மானிகள் |
| | **புத்தக வெளியீடுகள்** |
| 29 | மீன்வள விஞ்ஞானம்/ மீன்வளர்ப்பு/ கடல் பொறியியல்/ கடல்சார் விஞ்ஞானம்/ கடல் போக்குவரத்து மற்றும் தளபாடங்கள்/ கடலோர வள முகாமைத்துவ இயந்திரங்கள் தொடர்பான புத்தகங்கள், இதழ்கள், சஞ்சிகைகள், பருவ இதழ்கள் மற்றும் வீடியோக்கள். |
| | **வாகன உதிரிப்பாகங்கள்/ நன்னிலைப்படுத்தல்கள் மற்றும் பழுதுபார்த்தல்களின் வழங்கல்** |
| 30 | டயர்கள், ட்யூப்கள் மற்றும் பெற்றரிகள் |
| 31 | அனைத்து வகையான மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் |
| 32 | வாகனங்களின் நன்னிலைப்படுத்தல் (15 கி.மீ. இற்குள்) |
| 33 | ஒட்டோ மின் பழுதுபார்த்தல்கள் மற்றும் நன்னிலைப்படுத்தல்கள் |
| 34 | டிங்கரின் மற்றும் வண்ணப்பூச்சு/ வீல் அலைன்மன்ட்ஸ் மற்றும் சரிசெய்தல்கள் |
| 35 | அப்ஹோல்ஸ்டரி வேலை (வாகன இருக்கை குஷன், இருக்கை உறை, இறப்பர் தரை விரிப்பு முதலியன) |
| 36 | சைலென்சர், ரேடியேட்டர் மற்றும் வளிச் சீராக்கிகளை பழுதுபார்த்தல் |
| 37 | மோட்டார் வாகன பழுதுபார்த்தல் கராஜ்கள் (20 கி.மீ.) |
| | **உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்** |
| 38 | உபகரணங்களின் பழுதுபார்த்தல்கள்/ பராமரித்தல் (தொலைநகல்/ நிழல்பிரதி இயந்திரம்/ அச்சுப்பொறிகள்/ வளிச் சீராக்கிகள் முதலியன) |
| 39 | வளிச்சிராக்கிகளின் பழுதுபார்த்தல்கள், நன்னிலைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் |
| 40 | அலுவலக தளபாட பழுதுபார்த்தல்கள் (மரப்பலகை/ உருக்கு) |
| 41 | ஆய்வுகூட உபகரணங்களின் பழுதுபார்த்தல்கள் |
| | **கட்டிட பொருட்கள் மற்றும் துப்புரவு பொருட்கள்** |
| 42 | அனைத்து வகையான கட்டிட பொருட்கள்/ துப்புரவு துணைப்பொருட்கள் |
| 43 | அனைத்து வகையான குழாய் பொருத்தல்/ வன்பொருள் உருப்படிகள்/ வண்ணப்பூச்சுகள், தின்னர் மற்றும் வர்ணம் பூசுவதற்கான பொருட்கள் |
| 44 | மின் உபகரணங்கள், பொருத்தல்கள் மற்றும் துணைப்பொருட்கள் |
| 45 | அனைத்து வகையான மரச்சாமான்கள் |
| | **துணி மற்றும் தோல் உற்பத்திகள்** |
| 46 | சீருடை பொருட்கள் (ஆண் மற்றும் பெண்) |
| 47 | திரைச்சீலை பொருட்கள் (துணிகள், Vertical Blinds, Wooden Blinds) |
| 48 | மெத்தைகள் மற்றும் மெத்தை உறைகள் |
| 49 | மேற்போர்வை மற்றும் பட்டமளிப்பு மாலைகள் |
| | **சேவைகளின் வழங்கல்** |
| 50 | பாதுகாப்பு சேவைகள் |
| 51 | சுத்தம் செய்தல் மற்றும் துப்புரவு சேவைகள் |
| 52 | இணையதளம் மற்றும் மீள் உருவாக்கலின் உருவாக்கம்/ மேம்பாடு |
| 53 | தேர்ச்சி பெற்ற தொழிலாளர் உப ஒப்பந்த வேலையின் வழங்கல் (மேசன்கள், தச்சர்கள், குழாய் மற்றும் வடிகால் வேலை முதலியன) |
| 54 | உள்ளக முன் புனைவு அலுமினிய பிரிப்பு மற்றும் கட்டிட பழுதுபார்த்தல் |
| 55 | மின் கம்பியிணைப்பு/ கணினி மற்றும் வலைப்பின்னல் கம்பியிணைப்பு |
| 56 | நீர் விநியோகம் மற்றும் நீர் நிரப்புதல் |
| 57 | புகைப்பிடிப்பாளர்கள் |
| 58 | வாகனங்கள் மற்றும் போக்குவரத்து சேவைகளை வாடகைக்கு பெறுதல் |
| 59 | மீன்பிடி படகுகள் மற்றும் எஞ்சினின் பழுதுபார்த்தல் |
| 60 | தீயணைப்பின் மீள் நிரப்பல் |
| 61 | புகைப்படப்பிடிப்பாளர்கள் |
| 62 | ஓடியோ/ வீடியோ ஆவண தயாரிப்பு |
| 63 | பூச்சி கட்டுப்பாடு |
| 64 | மொழிபெயர்ப்பாளர்கள் (ஆங்கிலத்தில் இருந்து தமிழ், ஜப்பான், சீனம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகள்) |
| 65 | ஆலோசனை சேவை (சிவில் பொறியியல் வேலை) |

**ஒப்பந்ததாரர்களுக்கான வேலை**

| | ஒப்பந்தத்தின் பெறுமதி | பதிவுக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1 | 500,000/- ரூபா வரை சிவில் நிர்மாண வேலைகள் | 1000/- |
| 2 | ரூபா 500,000/- மற்றும் ரூபா 2,000,000/- இற்கு இடையிலான வேலைகள் | 1200/- |
| 3 | ரூபா 2,000,000/- மற்றும் ரூபா 10,000,000/- இற்கு இடையிலான வேலைகள் | 2000/- |
| | | |

**வழங்குநர்களை பதிவு செய்யும் நிபந்தனைகள்**

1. தேவை ஏற்படும்போது பதிவு செய்யப்பட்ட பட்டியலுக்கு வெளியில் உள்ள மூலங்களில் இருந்தும் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்க கூறுவிலைகளை அழைப்பதற்கு இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உள்ளது.
2. ஒப்பந்ததாரர்கள் வழங்கல்கள் மற்றும் சேவைகளின் ஒவ்வொரு பிரிவுகளுக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறு கொடுப்பனவை மேற்கொள்ளல் வேண்டும்.
3. வழங்குநர்கள் வழங்கல்களை மேற்கொண்ட தினத்தில் இருந்து குறைந்தது 45 நாட்களுக்கு கடன் வசதி ஒன்றை வழங்குதல் வேண்டும்.
4. வழங்குநர்களுக்கு முற்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.
5. பொருட்கள்/ சேவைகளை வழங்குவது தொடர்பிலான விபரக்குறிப்பின்படி பொருட்களை வழங்குவதை உறுதி செய்த பின் மாத்திரமே கொடுப்பனவுகள் முன்னெடுக்கப்படும்.
6. தாமதித்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம்**
**2024ஆம் ஆண்டுக்காக வழங்குநர்/ சேவை/ ஒப்பந்ததாரர் வழங்குநர் ஒருவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம்**

1. வழங்குநர்/ ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் பெயர்: ..............................
2. வழங்குநர்/ ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் முகவரி: ..............................
3. தொலைபேசி இல.
   i. நிரந்தர தொலைபேசி இல.: ..............................
   ii. கைபேசி இல. ..............................
4. மின்னஞ்சல் முகவரி: ..............................
5. தொலைநகல் இல.: ..............................
6. வர்த்தகப் பதிவு இலக்கம் மற்றும் திகதி: ..............................
7. வர்த்தகத்தின் பண்பு: ..............................
8. பதிவுக்கான பொருட்கள்/ சேவைகளின் பிரிவு:

| உருப்படி இல | வழங்கப்படும் பொருட்கள்/ சேவைகளின் விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

9. கடன் வசதிக்காக வழங்கப்படும் காலம்: ..............................
10. வங்கியின் பெயர்கள் மற்றும் கணக்கு இலக்கங்கள்: ..............................
11. VAT இல. (இருந்தால்): ..............................
12. ICTAD பதிவு இல. (இருந்தால்):- ..............................
    பதிவின் துறை: ..............................
    காலாவதித்திகதி: .............................. தரம்: ..............................
13. வழங்குநர்/ ஒப்பந்ததாரர் ஒருவராக பதிவுக்கான கட்டணங்கள் - மேல் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுக்காக ............ ...................... வைப்பு ரசீது/கள் உடன் மூடப்பட்ட ..................... ரூபா

இங்கு தரப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானது மற்றும் சரியானது மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் மற்றும் பொருட்கள்/ சேவைகளை வழங்குவதற்கு இலங்கை சமுத்திர பல்கலைக்கழக, பெறுகைக் குழு, தலைவர் மூலம் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பின்பற்ற நான் இணங்குகிறேன் என்று நான் கூறிக்கொள்ள விரும்புவதோடு, அதன்படி வழங்குநர்/ ஒப்பந்ததாரர் ஒருவராக பதிவு செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விண்ணப்பதாரர்களின் பெயர்: ..............................
விண்ணப்பதாரர்கள் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ மத்திரை: ..............................
திகதி: ..............................

SUNDAY OBSERVER adz it's what you want | வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

Mahara - 011 2 925 168
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.

Mirigama - 033 22 740 19
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.

Veyangoda - 033 22 903 86
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.

Weliweriya - 077 4 965 266
1986 - K. L. P. Perera - Nilanka Stores, No. 4, New Kandy Road, Weliweriya.

**Kaluthara District**

Panadura - 072 6 267 432
1730 - B. D. P. Perera - Sausiri Adds, No. 121, Horana Road, Mahawila, Panadura.

Panadura - 038 22 324 80
1776 - Mahen Silva - Suwena News and Adds, 28/A, Weeraman Road, Panadura.

Panadura - 038 22 400 60
1819 - G. R. Gunasingha - 467, Media Lick, Main Street, Panadura.

Mathugama - 076 6 589 582
1737 - D. C. S. Lakmal - Janahitha Newspaper Agency - Mathugama.

Ingiriya - 077 9 806 680
1757 - A. D. Nimal Chandra - Chandra Stores, No. 03, Main Street, Ingiriya.

Beruwala - 034 22 775 84
1784 - Upali Weerasingha - Kanthi Book Shop, No. 10, Market Road, Beruwala.

Bandaragama - 071 4 475 504
1785 - Sumith Kumara - Dawasa Book Shop, No. 17, Panadura Road, Bandaragama.

Wadduwa - 077 2 671 013
1850 - Chinthaka Cooray - No. 509, Galle Road, Wadduwa.

Horana - 071 8 863 522
1852 - D. Nandawathi - Add House, No. 262A, Rathnapura Road, Horana.

Bandaragama - 070 2 424 240
1860 - W. A. V. Perera - Nearest Gelanigama Highway Entrance, Kothalawala, Bandaragama.

**Kegalle District**

Mawanella - 071 6 946 452
9113 - D. K. R. Ranasingha - No.132, Main Street, Mawanella.

Kegalle - 077 6 778 481
9119 - M. M. Salgado & Sons - No. 88, Kandy Road, Kegalle.

Mawanella - 077 0 217 854
9131 - P. M. A. Indunil Bandara - Nimalasiri Book Shop, No. 14, Main Street Mawanella.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343


**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்: -

| | பெயரும் முகவரியும் | பதவி |
|---|---|---|
| 1 | திரு பாலித குணரத்ன மஹிபால<br>இலக்கம். 262, 7 ஆவது வலயம்<br>"பாரடைஸ்", மில்லினியம் சிட்டி அதுருகிரிய | சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர். |
| 2 | திரு கே. சானக லேஷான் த சில்வா<br>இலக்கம் 78, காலி வீதி, மொரகொல்ல<br>பேருவள | லங்கா அசோக் லேலன்ட் லிமிட்டட் மற்றும் லங்கா லேலன்ட் லிமிட்டட் நிறுவனங்களின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 3 | திரு டப்ளியூ. டென்சில் இந்திராஜித் பெரேரா<br>இலக்கம் 53, ஆர்.ஜி. சேனாநாயக்க<br>மாவத்தை கொழும்பு 7 | லங்கா சலுசல லிமிட்டட் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 4 | திரு ருஷான் மாரம்பகே<br>இலக்கம் 199, களணிமுல்ல, அங்கொட | இலங்கைக் கைப்பணிகள் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 5 | திரு டப்ளியூ.ஜி.கே.பீ. ரணதுங்க<br>அரச ஊழியர்கள் வீடமைப்புத்திட்டம் புதிய நகரம், பொலன்னறுவ | தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 6 | திருமதி டீ. நந்தனி சமரவிக்ரம<br>மொரன்துடுவ வத்தை, மொரன்துடுவ | இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் . |
| 7 | திரு வஜிர த சில்வா<br>இலக்கம் 56717, எக்கமுத்து மாவத்தை,<br>தளவத்துகொட | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 8 | திரு ஏ.எம்.ரத்நாயக்க<br>இலக்கம் 100/96, மயான வீதி, குருந்த<br>மாவத்தை, தலபத்பிட்டிய | இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 9 | திரு ஜி.ஏ.எம்.பீ.பி. அம்பன்வெல<br>இலக்கம் 23110, கொட்டுவேகெதர<br>மாத்தளை | வ/ப இலங்கை பொசுபேற்றுக் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 10 | கலாநிதி திரு சாரங்க அழகப்பெரும<br>இலக்கம் 352/N, ப்ரிலியென்ஸ்<br>ரெசிடென்ஸீஸ்<br>மாதிவெல, கோட்டே | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 11 | திரு கே.எல்.பி. காரியப்பெரும<br>இலக்கம் 355/2, சாம மாவத்தை,<br>கிரில்லவெல, கடவத்த | தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 12 | திரு அஜித் நிலங்க முணசிங்க ரத்னாராம<br>வீதி, ஹோகந்தர, மாலபே | இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 13 | கலாநிதி திரு ஜி.ஏ.எஸ். பிரேம் குமார<br>இலக்கம் 76/2A, எதிரிசிங்க மாவத்தை<br>நுகேகொட | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 14 | திரு நிலங்க ஆர்.ஜயவர்த்தன<br>இலக்கம் 6, ரொட்டுன்டா தோட்டம்,<br>கொழும்பு-03. | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 15 | கலாநிதி திரு துலான் ஹெட்டிஆராச்சி<br>"ஆசிறி", கம்மெத்த, கொட்டாவகம, காலி | வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 16 | திரு எஸ்.என். சுமனசேக்கர<br>இலக்கம் 93A, தேசபந்து சரத் சுமனசேக்கர<br>மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்ல. | வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 17 | திரு என்.எஸ். இலங்ககோன்<br>இலக்கம் 45/25 H, ஹிக்கஹவத்த மாவத்தை,<br>பெப்பிலியான | இலங்கை மின்சார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 18 | திரு எஸ். ஜயசேக்கர<br>இலக்கம் 193/5, ஜயந்தி மாவத்தை<br>ஹிம்புட்டான, அங்கொட | இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 19 | திரு பீ. விஜேரத்ன<br>இலக்கம் 39 A, கண்டி வீதி,<br>கல்தொட்டமுல்ல யக்கல. | தேசிய நீர் உயிரன வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 20 | கலாநிதி திரு கிங்ஸ்லி பெர்னாட்<br>இலக்கம் 392 A, பாடசாலை மாவத்தை,<br>தலவத்துகொட, பன்னிப்பிட்டிய. | ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 21 | திரு தினேஸ் வீரக்கொடி<br>இலக்கம் 43 A, சுமங்கல மாவத்தை<br>கொழும்பு-8 | கொழும்புத் துறைமுக நகர பொருளாதார அதிகார சபை மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |
| 22 | கலாநிதி சஞ்சய் பெரேரா<br>1037/9, பரகும்பா இடம், அதுருகிரிய வீதி,<br>மாலபே. | புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர் நியமிக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" என்ற விலாசத்திற்கு 2023 திசம்பர் மாதம் 18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**
2023 திசம்பர் 5 ஆம் திகதி

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

# 2024ஆம் வருடத்திற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

## தேசிய தொற்றுநோய் நிறுவனம், ஐ.டி.எச். அங்கொட

அங்கொட, ஐ.டி.எச். தேசிய தொற்று நோய் நிறுவனத்திற்கு 2024ஆம் வருடத்தில் கட்டிடங்களை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்வதற்கு ICTAD C10 அல்லது அதற்கு மேற்பட்ட தர ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023-12-18ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இயைபுடைய தகைமைகளை உறுதி செய்ததன் பின் மற்றும் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும். கணக்காளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் கிடைக்கச் செய்யலாம். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இதில் விலைமனுதாரர் அல்லது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம்,**
**ஐ.டி.எச்., அங்கொட.**

**வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**

ச தொ ச கட்டுமானம் மற்றும் பொறியியல் பிரைவேட் லிமிடெட்

## 2023/2024ஆம் ஆண்டுகளுக்காக ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்தல்

2023/2024 ஆம் ஆண்டுகளுக்காக பின்வரும் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக சதொச கட்டுமானம் மற்றும் பொறியியல் பிரைவேட் லிமிடெட் உடன் தம்மை பதிவு செய்வதற்கு விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர்கள், ஒப்பந்ததாரர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் அல்லது தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள் மற்றும் சேவைகள்:**

- ✓ கட்டிட நிர்மாணம்/பழுதுபார்த்தல்கள் மற்றும் புதுப்பித்தல்கள்
- ✓ மின்னியல் வேலை ஒப்பந்தங்கள்
- ✓ பராமரிப்பு அடங்கலான குளிரூட்டிகள், உறைவைப்பான்கள் மற்றும் போத்தல் குளிரூட்டிகள்.
- ✓ பராமரிப்பு அடங்கலான வளிச்சீராக்கிகள் அலகுகள்
- ✓ சுப்பர்மார்க்கட்டுகளுக்கான தட்டு முறைமைகள், கருமபீடங்கள் போன்றவை
- ✓ மின்பிறப்பாக்கிகள்
- ✓ நிறுவுதல் அடங்கலான டிஜிட்டல் சைகை பலகைகள் (பெயர் பலகைகள், தூண்கள் போன்றவை)
- ✓ சுப்பர்மார்க்கட்டுக்களுக்கான உபகரணங்கள்
- ✓ உள்ளக வேலை மற்றும் தரைவிரிப்புக்கள்

**அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய சேவைகள்**

- ✓ தகவல் தொழில்நுட்பம் இணைந்த மென்பொருள் மற்றும் உபகரணங்கள்
- ✓ தளபாடம் (உலோகம்/பலகை)
- ✓ தராசுகள்/எடைப்பொறிகள்
- ✓ லேபில்கள் உருவாக்கல் இயந்திரங்கள்
- ✓ கடைப் பொருட்களுக்கான கூடைகள்
- ✓ பாதுகாப்பு பெட்டகங்கள்
- ✓ கடைப் பொருட்களுக்கான பைகள்
- ✓ அலுவலக போக்குவரத்திற்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்
- ✓ அலுவலக பாவனைக்கான காகிதாதிகள்
- ✓ பொறியியல் மற்றும் கட்டிடகலைசார்ந்த உசாத்துணையாளர்கள்

**கவனிக்க வேண்டிய குறிப்புகள்:**

- மேற்குறிப்பிட்டுள்ள வழங்கல் மற்றும் /அல்லது சேவைகளுக்காக தம்மை பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்கள் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-02, வொக்சால் வீதி, 27 ஆம் இலக்கத்திலுள்ள 6 ஆம் மாடியின் சதொச செயலக கட்டிடத்தில் அமைந்துள்ள சதொச கட்டுமானம் மற்றும் பொறியியல் பிரைவேட் லிமிடெட்டின் அலுவலகத்திலிருந்து உரித்தான விண்ணப்பப் படிவத்தை பெறுவதன் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள செயற்பாட்டை நிறைவேற்றலாம். பணக்கொடுப்பனவுகளின் முறைமையானது 0073263950 என்ற இலங்கை வங்கியின் கணக்கிலக்கத்திற்கு சதொச கட்டுமானம் மற்றும் பொறியியல் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் வைப்பிடலாம்.
- வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் வியாபார பதிவு சான்றிதழின் பிரதி மற்றும் கோரிக்கை கடிதம் ஆகியவற்றை ஒப்பந்ததாரர்/வழங்குநர் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விஷேட சந்தர்ப்பங்கள் மற்றும் தாமதமான பதிவிற்காகவும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கும் சதொச கட்டுமானம் மற்றும் பொறியியல் பிரைவேட் லிமிடெட் உடன் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்கள் அல்லது வழங்குநர்களுடனும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் மற்றும்/ அல்லது கட்டளையை வழங்குவதற்குமான உரிமையை முகாமைத்துவமானது கொண்டுள்ளது.

**விண்ணப்பங்கள் 2024.01.31 ஆம் திகதியன்று மூடப்படும்.**

**தலைவர்,**
**சதொச கட்டுமானம் மற்றும் பொறியியல் (பிரைவேட்) லிமிடெட்,**
**சதொச செயலக கட்டிடம், 6 ஆம் மாடி,**
**இல. 27, வொக்ஷால் வீதி,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி :0112307831**


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk


**சிறியளவிலான விவசாயவணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP)**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**

SARP

**பெறுகை அறிவித்தல்**

# SARP கருத்திட்டத்திற்காக வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்

**(Contract Ref: SARP/G/NCB/Veh/2023/65)**

1. கமத்தொழில் அபிவிருத்திக்காக சர்வதேச நிதியத்திலிருந்து இலங்கை நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பெறுகைகளின் பகுதியொன்றை SARP கருத்திட்ட அலுவலகத்திற்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. ஆரம்ப ஒப்பந்த காலமான ஒரு (1) வருடத்திற்கு வெளிக்கள தளவிஜயங்கள், குளங்கள் ஆகியவற்றின் புணருத்தாபன மேற்பார்வை போன்றவை அடங்கலான வேலைக்காக SARP அலுவலகத்திற்கு வாகனங்களை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை SARP கருத்திட்டமானது அழைக்கின்றது. விலைமனுவின் விபரமான தகவலானது 2023.12.04 ஆம் திகதியிடப்பட்ட டெயிலி நியுஸ் பத்திரிகையில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளது. விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினமானது 2023.12.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகுமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணமானது பின்வரும் முகவரியிலிருந்து 2023.12.18ஆம் திகதியன்று வரையும் பெற்றுக் கொள்ளப்படலாம்.

3. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**கருத்திட்டப் பணிப்பாளர்,**
**சிறியளவிலான விவசாயவணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP),**
**இல.: 2/2/1, கந்தேவத்த வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2770998. மின்னஞ்சல்: info@sarp.lk**


SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

Best way to fulfil your Future Dreams

Affordable & Attractive Packages for YOU.

Pay online & Save your precious time

BOC Acc. No. 000000377 Corporate Branch

077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383

E-mail - classified@lakehouse.lk

## மன்னிப்புக் கோரல்

மலவிகே லலித் குமார, 225/01, முல்லேகம, ஹோமாகம. தடை செய்யப்பட்ட மருந்தை வைத்திருக்க மாட்டேன் எனவும் இந்தத் தவறை மீண்டும் செய்யமாட்டேன் எனவும் இலங்கைக் குடியரசு மற்றும் பொதுமக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன்.

## மன்னிப்புக் கோரல்

ஹீரலு மலவிகே சுரங்க சம்பத், 16/4, பெரகும் மாவத்தை, ஹபரகட, ஹோமாகம. தடை செய்யப்பட்ட மருந்தை வைத்திருக்க மாட்டேன் எனவும் இந்தத் தவறை மீண்டும் செய்யமாட்டேன் எனவும் இலங்கைக் குடியரசு மற்றும் பொதுமக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன்.

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல. WGSWD&EIP/ACQ/KB/49**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல. 4-3/10/2019/LRB/250**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இக்காணித் துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள் 2023ஆம் வருடம் திசெம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெறும் மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.11.24ஆம் திகதிய 2359/58ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | மேல் மாகாணம் |
| மாவட்டம் | : | கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | கெஸ்பேவை |
| அமைவிடம் | : | பொரலஸ்கமுவை நகர சபை எல்லைக்குள் |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இல. 535D - திவுலப்பிட்டிய கிழக்கு |
| கிராமம் | : | திவுலப்பிட்டிய |
| வரைபட இல. | : | கடத்திரள் வரைபட இல. 521214 (தொகுதி இல. 6, தாள் இல. 1) |
| காணியின் பெயர் | : | எவல கும்புர |
| துண்டு இல. | : | துண்டு இல. 1,2,3,6,7,10, 11,12,13 (09 காணித் துண்டுகள்) |

**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை, இராஜகிரிய.**

2023.11.14

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| ஆலய வீதி-சாம்பல்தீவு (பிரிவு-01) கொன்கிறீட் வீதி நிர்மாணித்தல் (பிரிவு-01) |
| ஆலய வீதி-சாம்பல்தீவு (பிரிவு-01) கொன்கிறீட் வீதி நிர்மாணித்தல் (பிரிவு-02) |
| சோலையடி பிரதான வீதி, உப்புவெளி (பிரிவு-01) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| சோலையடி பிரதான வீதி, உப்புவெளி (பிரிவு-01) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| வரோதயநகர் உள்ளக வீதி (பிரிவு-01) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| வரோதயநகர் உள்ளக வீதி (பிரிவு-02) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| வரோதயநகர் உள்ளக வீதி (பிரிவு-03) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| அம்மன் கோவில் வீதி, அத்திமோட்டை (பிரிவு-01) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| ஆனந்தபுரி 3 ஆம் மற்றும் 4 ஆம் ஒழுங்கை (பிரிவு-01) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| ஆனந்தபுரி 3 ஆம் மற்றும் 4 ஆம் ஒழுங்கை (பிரிவு-02) கொன்கிறீட் நிர்மாணித்தல் |
| ஆனந்தபுரி 3 ஆம் மற்றும் 4 ஆம் ஒழுங்கை (பிரிவு-03) கொன்கிறீட் நிர்மாணித்தல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் www.rda.gov.lk என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதள பக்கத்தை 2023.12.05 ஆம் திகதியிலிருந்து 2023.12.14 ஆம் திகதி வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## முன்பிள்ளைப் பருவ ஆசிரிய மதியுரையாளர் (முன்பள்ளி ஆசிரியர்) பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை கோருதல்

குண்டசாலை, புதிய நகரம், இல. 2 A முகவரியில் அமைந்துள்ள மத்திய மாகாண முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவின் காரியாலய சூழலில் 2024 ஆம் வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படவிருக்கும் மாதிரி முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையத்திற்கு குறிப்பிட்ட பதவி மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் இணைந்து கொள்வதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளுடன் கூடிய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✓ விண்ணப்பதார் இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.
- ✓ விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு 05 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிட பதிவினை கொண்டிருக்க வேண்டும்.
- ✓ விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 40 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.
- ✓ க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உள்ளடங்களாக மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ✓ ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறி ஒன்று அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஊடாக வழங்கப்படுகின்ற ஒரு வருட பாடநெறிச் சான்றிதழ் அல்லது இரு வருட உயர் பாடநெறிச் சான்றிதழை பெற்றிருத்தல்.
- ✓ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலைய ஆசிரிய மதியுரையாளராக (ஆசிரியராக) 05 வருடத்திற்கு குறையாத சேவைக் காலத்தினைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை www.cm.cp.gov.lk எனும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது இல. 2A, புதிய நகரம், குண்டசாலை எனும் முகவரியில் அமைந்துள்ள மாகாண முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவுக்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியானது 2023.12.15 ஆகும்.

**பணிப்பாளர்,**
**மாகாண முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு,**
**இல. 2A , புதிய நகரம், குண்டசாலை.**
**தொ.பே. இல. - 0812424337**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை (L.N.:8996-LK)**

## தேசிய போட்டிரீதியான விலைமனு

### மண் சரிவு அபாயம் உள்ள 14 மாவட்டங்களில் தானியங்கி மழை அளவீட்டு முறைமைகளின் மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்

**ஒப்பந்த இல.: SLMOI/CRES/NBRO/G/NCB/09**

01. நீர்ப்பாசன அமைச்சின் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறையின் செலவை நோக்கி மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியில் (IBRD) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு மண் சரிவு அபாயம் உள்ள 14 மாவட்டங்களில் தானியங்கி மழை அளவீட்டு முறைமைகளின் மேம்படுத்தல் மற்றும் பராமரித்தலின் ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனில் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. மண் சரிவு அபாயம் உள்ள 14 மாவட்டங்களில் தானியங்கி மழை அளவீட்டு முறைமைகளின் மேம்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறையின் சார்பில் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
03. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மின்னஞ்சல்: pdcresmpa@gmail.com, தொலைநகல்: 0112058451, தொலைபேசி: 0112507855 கொழும்பு 05, ஜாவத்த வீதி, இல. 11, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை, பெறுகை பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.30 வரை சாதாரண வேலை நாட்களில் 2023 டிசம்பர் 5ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 26 ஆம் திகதி வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
05. எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2023 டிசம்பர் 5 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 26ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 37,000.00 இலங்கை ரூபாவை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்களை 2023 டிசம்பர் 27 ஆம் திகதி பி.ப. 2.00க்கு கீழுள்ள முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
07. 2024 ஏப்ரல் 24ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
08. அனைத்து விலைமனுக்களும் 3,000,000.00 இலங்கை ரூபாவின் (விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
09. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 05, ஜாவத்த வீதி, இல. 11, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை, மாநாட்டு அறையில் 2023 டிசம்பர் 12ஆம் திகதி பி.ப. 2.00க்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு**
**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை**
**இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05,**
**தொ.பே. 011 2507855/ 011 2058452**

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் அடகுப் பிரதிநிதிகளாக வரையறுக்கப்பட்ட ஹெலியகொட பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.

| | |
|---|---|
| 01. எஹலியகொட | 07. பத்பேரிய |
| 02. போபெத்த | 08. பொஹொரபாவ |
| 03. மாரம்பே | 09. களுஅதுர |
| 04. மாடுவகல | 10. திக்தெனிய |
| 05. புஸ்செல்ல | 11. மின்னான |
| 06. கெட்டஹெத்த | 12. ஏ/பஹலகல |

கிராமிய வங்கிகளில் 2022.06.30ம் திகதிக்கு (30திகதியுடன் உள்ளடங்கலாக) முன் அடகு வைத்து 2023 டிசம்பர் 09 சனி முற்பகல் 9.00 இற்கு முன் மீட்கப்படாத சகல அடகு தங்க நகைகளும் 2023.12.09 மு.ப. 9.00 இற்கு ஹெலியகொட கூட்டுறவு சங்கத் தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப எஹலியகொட பலநோக்கு கூட்டுறவு சங்கம்**
**எஹலிகொட.**
**2023.11.22**

தொ.பே : 036-2258216
036-2258932
036-2256025

Repeat Your Ad For Better Offers

## 2024ஆம் வருடத்தில் கொழும்பு – 10, தேசிய கண் வைத்தியசாலையில் உள்ள மத்திய வளிச்சீராக்கி முறைமையின் தடுப்புப் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்வதற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் 2024ஆம் வருடத்தில் கொழும்பு 10 - தேசிய கண் வைத்தியசாலையிலுள்ள மத்திய வளிச்சீராக்கி முறைமையின் தடுப்புப் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்வதற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய கண் வைத்தியசாலை போட்டிரீதியிலான விலைக்கோரல் முறையில் (NCB) நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் அடங்காதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2007 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் கொழும்பு 10, தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-12-26ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் மற்றும் மீளளிக்கப்படாத 1500.00 கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு 10, தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 49 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2023-12-27ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கீர்த்தி வாய்ந்த வங்கியினால் வழங்கப்பட்ட 77 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் 50,000.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
8. மேற்கூறப்பட்ட முகவரியானது:
   **பணிப்பாளர்,**
   **தேசிய கண் வைத்தியசாலை,**
   **வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
   **கொழும்பு 10.**
   **தொடர்பிலக்கம்: 0112693911**
   **தொலைநகல்: 0112698285**

## 2024/2025ஆம் வருடங்களில் கொழும்பு – 10, தேசிய கண் வைத்தியசாலையில் உள்ள PABX முறைமையின் தடுப்புப் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்வதற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் 2024/2025ஆம் வருடங்களில் கொழும்பு 10 - தேசிய கண் வைத்தியசாலையிலுள்ள PABX முறைமையின் தடுப்புப் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்வதற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய கண் வைத்தியசாலை போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் (NCB) நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் அடங்காதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2007 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் கொழும்பு 10, தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-12-26ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு 10, தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 49 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2023-12-27ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கீர்த்தி வாய்ந்த வங்கியினால் வழங்கப்பட்ட 77 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் 20,000.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
8. மேற்கூறப்பட்ட முகவரியானது:
   **பணிப்பாளர்,**
   **தேசிய கண் வைத்தியசாலை,**
   **வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
   **கொழும்பு 10.**
   **தொடர்பிலக்கம்: 0112693911-15**
   **தொலைநகல்: 0112698285**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

### தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், பழைய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் விற்பனை

கேள்வி இல.: **SDSQ/2023/S-2/V/P/M/03**

01. தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், பழைய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் விற்பனைக்காக விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
02. ஒவ்வொரு கேள்விமனுதாரரும் 2024.03.19 ஆம் திகதி வரை செல்லுபடியான கூறுவிலையிடப்படும் உருப்படியின் மொத்த பெறுமதியின் 10% இற்கான தொகைக்கு (நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம்/ விலைமனு வைப்பு) விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. அரச பொறியியற் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் 7ஆவது மாடியில் நிதிப் பிரிவுக்கு ரூபா 1,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.12.05 ஆம் திகதி தொடக்கம் 2023.12.18 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையே 5ஆவது மாடியில் வழங்கல் பிரிவில் இருந்து கேள்விமனு விண்ணப்பத்தை பெற முடியும்.
04. இரு பிரதிகளை வெவ்வேறு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அந்த இரு கடித உறைகளையும் “அசல்” மற்றும் “நகல்” என்று குறிப்பிட்டு பாதுகாப்பான ஒற்றை உறையில் இட்டு 2023.12.19 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம், 130, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் அரச பொறியியற் கூட்டுத்தாபன தலைமை அலுவலகக் கட்டிடத்தின் தரைத் தளத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும்.
05. கேள்விமனு ஆவணத்தை வாங்கிய பின்னர் 071 8574834 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் முன் பதிவு மேற்கொண்டு அநுராதபுரம், கொலன்னாவ, மஹியங்கனை, தங்கல்ல, குருநாகல், ஏகல மற்றும் பேலியகொடை கூடங்களில் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலத்தில் உருப்படிகளை பரீட்சிக்க முடியும்.
06. மேலதிக விபரங்களுக்கு 011-2451151 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் தலைமை பெறுகை அதிகாரியை தொடர்புகொள்ளவும்.
07. கிடைக்கப்பெறும் கூறுவிலைகளின் எந்த ஒரு பகுதியையும் அல்லது அனைத்தையும் ஏற்பது/ நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்,**
**இல. 130, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,**
**கொழும்பு 02.**
**2023.12.05**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

LSC

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் நிறுவனம்

## கேள்விக்கோரல்

### 2024 ஆம் ஆண்டிற்கான ஊழியர்கள், பாடசாலை சிறுவர்கள் மற்றும் தொழிலாளர்களை ஏற்றிச் செல்வதற்காக 12 பேருந்துகள் மற்றும் 40 லாரிகளை வாடகை அடிப்படையில் எடுப்பதற்கான விலைமனுக்கோரல்

வரையாறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனத்தின் திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் பெல்வத்த சீனி தொழிற்சாலை பிரிவுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான ஊழியர்கள், பாடசாலை சிறுவர்கள் மற்றும் தொழிலாளர்களை ஏற்றிச் செல்வதற்காக 12 பேருந்துகள் மற்றும் 40 லாரிகளை வாடகை அடிப்படையில் எடுப்பதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விக்கோரலை சமர்ப்பிக்க விரும்புவோர் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
   I. பயன்படுத்தப்படும் பேருந்து / லாரிகளின் இருக்கைகள் 25 பயணிகள் பயணம் செய்யக்கூடியதாக கொண்டதாக இருத்தல் வேண்டும்.
   II. பயன்படுத்தப்படும் வாகனங்கள் பதிவுச் சான்றிதழ் மற்றும் முழு பயணிகள் காப்பீடு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. சேவைக்காகப் பயன்படுத்தப்படும் பேருந்து / லாரிகள் வரையாறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனத்தில் கடமைக்குப் புறம்பாக வேறு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக் கூடாது.
2. கேள்விதாரர்கள், **2023.12.26 ஆம் திகதி வரையிலான வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 15.00** மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.20,000/-** ஐ செலுத்தி வரையறுக்கப்பட்ட லங்கா **சீனி (தனியார்) நிறுவனம், இலக்கம் 27, மெல்பனர் எவனியு, கொழும்பு 04** என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் ஊடாக முழுமையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையத்தளத்தை பார்வையிடுவதன் மூலமாக **(www.lankasugar.lk)** தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.
3. முத்திரையிடப்பட்ட கேள்விகளை கடித உறையிலிட்டு நேரில் வந்து ஒப்படைக்கவும் அல்லது குரியர் சேவை அல்லது பதிவுத்தபால் மூலமாக தலைவர், திணைக்கள வழங்கல் சபைத் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம், இலக்கம்.27, மெல்பனர் எவனியு, கொழும்பு 04 என்ற முகவரிக்கு **2023.12.27 ஆம் திகதி 14.00 மணிக்கு** முன்னர் கிடைக்குமாறு அனுப்பவும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“2024 ஆம் ஆண்டிற்கான ஊழியர்கள், பாடசாலை சிறுவர்கள் மற்றும் தொழிலாளர்களை ஏற்றிச் செல்வதற்காக வாடகை அடிப்படையிலான போக்குவரத்து சேவை பேருந்துகள் மற்றும் லாரிகளுக்கான கேள்விக்கோரல்”** எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் அவை திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம். பிந்திக்கிடைக்கும் அல்லது முறையாக பூரணப்படுத்தாத கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விக்கோரல் தொடர்பான இறுதி முடிவு கேள்விச்சபையை சார்ந்ததாகும்.
4. அனைத்து கேள்விகளும் திறக்கப்பட்ட தினத்திலிருந்து **119 நாட்கள்** செல்லுபடியாக வேண்டியதோடு, **ரூ.1,450,000.00 (பதினான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம்)** பெறுமதியான மனுப் பாதுகாப்புடன் முன்வைக்கப்பட வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வழங்கல் தலைவர், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம் **(தொ.பே +94 112 584 184, + 94 77 010 3359, பெக்ஸ் +94 11 250 0674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk)** மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனி) நிறுவனம்,
இலக்கம் 27, மெல்பனர் எவனியு,
கொழும்பு 04.

---

## பெறுகை அறிவித்தல்

### மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு

### வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு 2024ஆம் வருடத்தில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களைத் தெரிவு செய்துகொள்வதற்காக இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

A. சாலியபுர யெஹெலி அறிவுரை சேவை நிலையம்
B. சாலியபுர மகளிர் தடுப்பு நிலையம்
C. சாலியபுர க்ஷேம சுரக்ஷா சிறுவர் பாதுகாப்பு நிலையம்
D. அனுராதபுரம் அவன்திதேவி மகளிர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
E. மடாடுகம சான்றுபடுத்திய பாடசாலை
F. அனுராதபுரம் ஆண் சிறுவர் தடுப்பு நிலையம்
G. அனுராதபுரம் தஞ்சமடைபவரை ஏற்றுக்கொள்ளும் நிலையம்
H. ஹிங்குரக்கொட போசன் மகளிர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்

| வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விபரங்கள் | பெறுகை இல. | 119 நாட்கள் வரையில் செல்லுபடி யாகும் விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப் படாத விலைக் கோரல் கட்டணம் |
|---|---|---|---|
| உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (தானிய வகைகள்) | PD 04/2024/01/I | ரூ. 61,400.00 | ரூ. 2,500.00 |
| உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் (41) | PD 04/2023/02/I | ரூ. 132,000.00 | ரூ. 2,500.00 |
| மரக்கறிகள் வழங்குதல் | PD 04/2023/03/I | ரூ. 48,500.00 | ரூ. 2,500.00 |
| பழ வகைகள் வழங்குதல் மற்றும் இனிப்பு | PD 04/2023/04/I | ரூ. 36,700.00 | ரூ. 2,500.00 |
| மீன், கோழியிறைச்சி, முட்டை, சோயா மீட், கருவாடு வழங்குதல் | PD 04/2023/03/I | ரூ. 126,100.00 | ரூ. 2,500.00 |
| துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் வழங்குதல் | PD 04/2023/03/I | ரூ. 35,700.00 | ரூ. 2,500.00 |
| மருந்து வகைகள் மற்றும் பாவனைப் பொருட்கள் வழங்குதல் | PD 04/2023/03/I | ரூ. 38,300.00 | ரூ. 2,500.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
03. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பில் ஒரு (01) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் 025-2222570/025-4928619 எனும் தொலைபேசியினூடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் (மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை) விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. ஒவ்வொரு வழங்கலுக்காகவும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தை வடத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் ஆணையாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-12-05ஆம் திகதி முதல் 2023-12-27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.30 மணி முதல் பி.ப. 03.30 மணி வரையில் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. மேற்படி அட்டவணையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட 2024-04-28ஆம் திகதி வரை 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்கள ஆணையாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற பிணை முறி அல்லது அந்தப் பெறுமதிக்கான பணத்தை ‘‘வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்கள ஆணையாளர்’’ பெயரில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விலைமனுவுடனும் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.
07. சகல விலைமனுக்களும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2024-03-27ஆம் திகதி வரையில் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
08. வடமத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, அனுராதபுரம் எனும் முகவரியில் 2023-12-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும் என்பதுடன் இதில் விலைமனுதாரர்கள் கலந்துகொள்ளலாம்.
09. ஒவ்வொரு பெறுகையின் பொருட்டும் விலைமனுக்களை இரு பிரதிகளின் தயாரித்து ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ என வெவ்வேறாகக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல் - 2024’’ எனக் குறிப்பிட்டு 2023-12-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘செயலாளர் / தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபை நிர்வாகக் கட்டிடத்தொகுதி, அனுராதபுரம்’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இந்த அமைச்சில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்ததும் சகல வழங்கல் மற்றும் சேவைகளுக்குமுரிய விலைமனுக்கள் உடன் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். சகல விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்காக முன்வைக்கப்படும்.
10. சகல விலைமனுதாரர்களும் பெறுகை அறிவுறுத்தல் படிவத்தின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும் என்பதுடன் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர் / தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்**
**சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை விவகார அமைச்சு,**
**மூன்றாம் மாடி,**
**மாகாண சபை நிர்வாகக் கட்டிடத்தொகுதி, அனுராதபுரம்.**
2023-12-05

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer
adz it's what you want
Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# இலங்கை பிரதான கழக போட்டிகளில் சோபிக்காத 4 அணிகள் தரம் குறைப்பு




இலங்கையின் பிரதான கழகங்களுக்கு இடையிலான மூன்று நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு பொலிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் சிங்கள விளையாட்டுக் கழகம் (எஸ்.எஸ்.சி) தகுதி பெற்றுள்ளன.

இந்த இரு அணிகளும் ஆடும் இறுதிப் போட்டி கொழும்பு என்.சி.சி. மைதானத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதேநேரம் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு மொத்தம் 22 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் சோபிக்கத் தவறிய நான்கு அணிகள் பிரிவு ஏ வில் இருந்து பிரிவு பி க்கு தரமிறக்கப்பட்டுள்ளது.

இதன்படி பிரதான கழகங்களுக்கு இடையிலான மூன்று நாள் தொடரின் ஏ குழுவில் கடைசி இரு இடங்களை பிடித்த காலி கிரிக்கெட் கழகமும் இலங்கை இராணுவ விளையாட்டுக் கழகமும் பி குழுவில் கடைசி இரு இடங்களை பிடித்த விமானப் படை விளையாட்டுக் கழகமும் செபஸ்டியனிட்ஸ் அணியும் தரமிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நான்கு அணிகளும் தமது 10 போட்டிகளில் ஒன்றில் கூட வெற்றியீட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஏ குழுவில் பத்து போட்டிகளில் மூன்றில் வென்று ஒரு போட்டியில் கூட தோல்வியுறாது முதலிடத்தைப் பிடித்த எஸ்.எஸ்.சி. அணியும் பி குழுவில் 10 போட்டிகளில் 3 இல் வென்று ஒரு தோல்வியைக் கூட பெறாத பொலிஸ் அணியுமே இறுதிப் போட்டியில் ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு குழுக்களின் கீழ் இந்த முதல்தர போட்டிகளில் மொத்தம் 26 அணிகள் பங்கேற்று வந்தபோதும் ஒவ்வொரு ஆண்டும் அணிகளை குறைக்கும் நடைமுறையின் கீழ், 2023 இல் முதல்தர போட்டிகளில் பங்கேற்ற அணிகளின் எண்ணிக்கை 22 ஆக குறைக்கப்பட்டது. அதனை மேலும் குறைக்கும் வகையிலேயே இந்த ஆண்டு தொடரில் நான்கு அணிகள் தரமிறக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றத்துடன் அடுத்த ஆண்டின் முதல் தர பிரதான கழகங்களுக்கு இடையிலான மூன்று நாள் தொடரில் 18 அணிகள் ஆடவுள்ளன.

அதேபோன்று பி பிரிவு தொடரில் 12 அணிகள் ஆடும். இம்முறை பி பிரிவில் ஆடிய அணிகளில் ஒவ்வொரு குழுவிலும் கடைசி இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் என மொத்தம் 4 அணிகள் அடுத்த ஆண்டு தரமிறக்கம் செய்யப்படுகின்றன.

# தேசிய விளையாட்டு சபை புதிய உறுப்பினர் நியமனம்



தேசிய விளையாட்டு சபையின் புதிய தலைவராக கலாநிதி மையா குணசேகர விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தேசிய விளையாட்டுப் பேரவை மற்றும் தேசிய தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கான நியமனங்களை நேற்று (04) வழங்கினார்.

அதன்படி விளையாட்டு சபையின் தலைவராக மையா குணசேகர பெயரிடப்பட்டுள்ளதுடன், செயலாளராக ஐ.யு. விக்ரமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய விளையாட்டு சபை தலைவர் மற்றும் செயலாளர் உட்பட 15 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், தேசிய தெரிவுக்குழுவில் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட 05 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தெரிவுக்குழுவின் தலைவராக முப்படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் ஷவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளதுடன், செயலாளராக அர்ஜூன் ரிஷ்யா பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

# வடக்கு மாணவர்களுக்கு விசேட கிரிக்கெட் பயிற்சி



2014 ஆம் ஆண்டில், நாடு முழுவதிலுமிருந்து இளம் கிரிக்கெட் திறமைசாலிகளை இனங்காணும் பயணத்தை டோக்கியோ சீமெந்து குழுமத்தின் Foundation of Goodness ஆரம்பித்திருந்தது.

13 வயது முதல் 19 வரையான பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கிரிக்கெட் நிபுணர்களின் வழிகாட்டல்களின் கீழ் மாதாந்தம் கிரிக்கெட் பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அந்த வகையில் 50 வட பிராந்திய இளைஞர்களை தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு இந்தத் திட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டோக்கியோ சீமெந்து முன்னெடுக்கும் இப்பயிற்சி முகாம்கள் மூலம் இதுவரை 1,000 இற்கும் அதிக பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பல தேசிய மட்ட வீரர்கள் தயார்ப்படுத்தப்பட்டு, உலக கிரிக்கெட் அரங்கில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

# இஸ்ரேலிய கப்பல்கள் மீது யெமன் ஹூத்தி தாக்குதல்



செங்கடலின் தெற்குப் பகுதியில் 3 வணிகக் கப்பல்கள் தாக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் 2 இஸ்ரேலியக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதை ஒப்புக்கொண்டனர். யுனிட்டி எக்ஸ்பிளோரர், நம்பர் 9 ஆகிய இஸ்ரேலியக் கப்பல்களை ஆளில்லா விமானம், ஏவுகணை கொண்டு தாக்கியதாக அவர்கள் கூறினர்.

பிராந்தியத்தில் இருந்த அமெரிக்கப் போர்க் கப்பல் அந்தக் கப்பல்களின் உதவிக்குச் சென்றதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் குறிப்பிட்டது. பலஸ்தீனர்களுக்குத் துணை நிற்க யெமன் மக்கள் விடுத்த கோரிக்கைகள், இஸ்லாமிய நாடுகள் விடுத்த அழைப்புகள் ஆகியவற்றுக்கு இணங்க அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஹூத்தி பேச்சாளர் ஒருவர் கூறினார்.

வணிகக் கப்பல்களுக்கு உதவும் வேளையில் அமெரிக்கப் போர்க் கப்பல் 3 ஆளில்லா விமானங்களை வீழ்த்தியதாக அமெரிக்க இராணுவம் கூறியது.

ஈரானின் ஆதரவுடன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் அந்தத் தாக்குதல்களை நடத்தியதாகத் தாங்கள் நம்புவதாய் அது குறிப்பிட்டது.



# பிலிப்பைன்ஸில் தொடரும் அதிர்வால் மக்கள் அச்சம்

பிலிப்பைன்ஸில் பூகம்பத்திற்கு பிந்திய நில அதிர்வுகளால் அச்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கானவர்கள் முகாம்களிலிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர்.

தெற்கு பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட பூகம்பத்தில் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டனர். “நாங்கள் நில அதிர்வுகளால் பயந்துபோயிருக்கிறோம்” என்று சுரிகாவ் டெல் சுர் வட்டாரத்தின் அனர்த்த முகாமைத்துவ தலைவர் அலெக்ஸ் அரானா தெரிவித்துள்ளார். அவரது கடலோர மாகாணம் பூகம்பத்தின் மையப்பகுதிக்கு அருகில் உள்ளது. கடந்த சனிக்கிழமை (02) 7.4 ரிக்டர் அளவுள்ள பூகம்பம்; தாக்கியது. இதையடுத்து பின் அதிர்வுகள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த ஞாயிறு இரவு வரை சுரிகாவோ டெல் சுர் இடத்தில் உள்ள 115 முகாம்களில் 108,000க்கும் மேற்பட்டோர் தங்கியிருந்தனர் என்று அரசாங்கத் தரவுகள் தெரிவிக்கின்றன.


“நில அதிர்வுகளால் அடிக்கடி தலைசுற்றல் ஏற்படுகிறது. தற்போதைக்கு முகாமிலேயே தங்க விரும்புகிறோம்” என்று சுர்காவோ டெல் சுர் மாகாணத்தில் உள்ள ஹினாடுவான் நகர குடியிருப்பாளரான சுசன் கிளோர் தெரிவித்துள்ளார்.

# எரிமலை வெடித்ததில் 11 மலையேறிகள் பலி



இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் இருக்கும் மெராப்பி எரிமலை வெடித்ததைத் தொடர்ந்து குறைந்தது 11 மலையேறிகள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) அந்த எரிமலை வெடித்ததில் 3,000 மீற்றர் உயரத்திற்கு சாம்பல் வெளியானது. அந்தப் பகுதியிலிருந்து 26 பேர் இன்னும் வெளியேற்றப்படவில்லை என்று மீட்புக் குழுவின் தலைவர் கூறினார்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட 14 பேரில் 3 பேர் உயிரோடு உள்ளனர். எஞ்சிய 11 பேர் உயிரிழந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். கடந்த சனிக்கிழமையிலிருந்து அந்த மலைக்கு மொத்தம் 75 மலையேறிகள் சென்றதாகக் கூறப்பட்டது. அவர்களில் 49 பேர் மலையிலிருந்து கிழே இறங்கிவிட்டதாகவும் 12 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்டவர்களில் சிலருக்கு மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.



# இஸ்ரேலிய ஏற்றுமதிக்காக நெதர்லாந்து மீது வழக்கு

எப்–35 போர் விமானங்களின் பாகங்களை இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் காசாவில் இடம்பெறும் போர் குற்றங்களில் தொடர்புட்டிருப்பதாக நெதர்லாந்து அரசு மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்பாமின் நெதர்லாந்து கிளை உட்பட மூன்று மனித உரிமை குழுக்களே இந்த வழக்கை தொடுத்துள்ளன. இந்த விமானப்பாகங்களை அனுப்புவதன் மூலம் காசா மீது குண்டு போட நெதர்லாந்து அரசு உதவுவதாக அந்த உரிமைக் குழுக்கள் வாதிட்டுள்ளன.

காசாவில் போர் வெடித்த பின்னர் இஸ்ரேலிய எப்–35 ஜெட்களுக்கு உதிரிப் பாகங்களை வழங்க நெதர்லாந்து அரசு ஒப்புதல் அளித்திருப்பது அரச பதிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது. எனினும் எப்–35 விமானங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறியதான பதிவு இல்லை என்று நெதர்லாந்து பாதுகாப்பு அமைச்சு இதற்கு பதிலளித்திருந்தது.

## சர்வதேச செய்திகள்

# தெற்கு காசா பகுதியை நோக்கி இஸ்ரேல் படை முன்னேற்றம்

## மக்கள் வெளியேற இடமின்றி அல்லல்

தெற்கு காசாவில் தரைவழி தாக்குதல் ஒன்றுக்கு வழிவகுக்கும் வகையில் அங்குள்ள முக்கிய நகரான கான் யூனிஸில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது. பாதுகாப்பான இடங்கள் என்று நம்பப்படும் பகுதிகளிலும் குண்டுகள் விழுந்து வரும் நிலையில் மக்கள் அவநம்பிக்கையுடன் வெளியேறி வருகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவம் நேற்று (4) எக்ஸ் சமூகதளத்தில் வெளியிட்ட அறிவிப்பில், கான் யூனிஸில் மஞ்சள் நிறத்தில் அடையாளமிடப்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை ஒரே நேரத்தில் வெளியேறும்படி உத்தர



விடப்பட்டுள்ளது. மூன்று அம்புக் குறிகளால் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளை குறிப்பிட்டு, மக்களை மத்தியதரைக் கடல் மற்றும் எகிப்து எல்லையை நோக்கி மேலும் வெளியேறிச் செல்லும்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஏற்கனவே மற்ற இடங்களில் இருந்து வெளியேறி தற்காலிக முகாம்களில் எந்த வசதியும் இன்றி தங்கி இருந்த மக்களே கைகளில் சுமக்கக் கூடிய அளவான உடைமைகளுடம் மேலும் வெளியேறிச் செல்ல வேண்டிய நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

வடக்கில் காசா நகரில் இருக்கும் தனது வீட்டை கைவிட்ட நிலையில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவது இது மூன்றாவது முறை என்று அபூ முஹமது என்பவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

“முந்தைய இரவில் இஸ்ரேலிய டாங்கிகள் கிழக்கு, வடக்காக இருந்தும் கடல் பக்கமாக (போர் கப்பல்கள்) மேற்கில் இருந்தும் கூட எம்மை சுற்றி வீடுகள் அதிரும் அளவுக்கு குண்டுகளை வீசியதோடு இந்த வெடிப்புகளால் வானம் சிவப்பாக மாறி பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் அனைவரும் அச்சத்தில் உறைந்தனர்” என்று அவர் விபரித்தார்.

“அவர்கள் எங்களை இங்கே கொல்ல திட்டமிட்டிருந்தால், காஸாவில் (நகரம்) எங்கள் வீடுகளில் இருந்து எங்களை ஏன் வெளியேற்றினார்கள்?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இஸ்ரேல் இராணுவத்தினர் துண்டு பிரசுரங்கள் மூலம் இந்த இடத்தை விட்டு வெளியெறுமாறு தெரிவித்துவிட்டு, இரவு முழுவதும் தாக்குதல் நடத்தினர். குண்டுகள் சத்தம் கேட்டதாக கான் யூனிஸ் நகர வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவம் இந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள். குண்டு வீசப்போகிறோம் என்று தொலைபேசியில் தனக்கு தெரிவித்தார்கள் என்று கூறிய விதவையும், நான்கு குழந்தைகளின் தாயுமான பெண்மணி ஒருவர் கடந்த 7ஆம் திகதி வடக்கு காசாவில் இருந்து கான் யூனிஸ் நகரத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்தேன் என்றார்.

உண்மை என்னவென்றால், காசாவில் பாதுகாப்பான இடம் என்று எதுவும் இல்லை. வடக்கு பகுதியிலும் மக்களை கொல்கிறார்கள். தெற்கு பகுதியிலும் மக்களை கொல்கிறார் என விரக்தியோடு தெரிவித்தார்.

### தெற்கை நோக்கி நகரும் இராணுவம்

இந்நிலையில் இஸ்ரேல் இராணுவம் தனது தரைப்படையை தெற்கு காசாவை நோக்கி நகர்த்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கவச வாகனங்கள் மற்றும் புல்டோசர்களுடன் இஸ்ரேலிய டாங்கிகள் இடம்பெயர்ந்த மக்கள் செறிந்து வாழும் கான் யூனிஸ் நகரை நெருங்கி இருப்பதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய வாகனங்கள் அல் கராரா கிராத்திற்குள் இரண்டு கிலோ மீற்றர் உள்ளே இருப்பதாக 59 வயது அமீன் அபூ ஹவ்லி கூறியிருக்கும் அதேநேரம், இஸ்ரேலிய டாங்கிகள் காசா பகுதியில் வடக்கு மற்றும் தெற்கு நெடுஞ்சாலையான சலாஹ் அல் தீன் வீதியில் முன்னேறி வருவதாக 34 வயது முஆஸ் முஹமது தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் போர் வெடித்த நிலையில் இஸ்ரேலிய இராணுவம் வடக்கு காசாவின் பெரும்பகுதியை ஆச்சிரமித்திருக்கும் நிலையிலேயே தற்போது தெற்கு பகுதி மீது அவதானம் செலுத்தியுள்ளது.



இந்நிலையில் ஏழு நாள் நீடித்த போர் நிறுத்தம் கடந்த வெள்ளிக்கிழமை முறிந்த பின் நான்காவது நாளாக இஸ்ரேல் காசாவெங்கும் உக்கிர தாக்குதல்களை நடத்தியது. வீடுகள், வர்த்தக மையங்கள் மற்றும் அகதி முகாம்களை இலக்கு வைத்து இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியது.

கிழக்கு காசாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதல்களில் 30க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

இதன்போது அல் செய்தூன் மற்றும் அல் ஷ{ஜா பகுதிகளில் இருக்கும் பல வீடுகளை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் 50க்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

முழு முற்றுகையில் உள்ள காசா மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் அங்குள்ள பாதிக்கும் அதிகமான விடுகள் அழிக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய தாக்குதல்களில் காசாவில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 16,000 ஐ நெருக்கி இருப்பதோடு கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் பெருமளவில் வந்து சேர்ந்துள்ளன என காசாவின் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் முனிர் அல் பேர்ஸ் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த உதவியையும் வழங்க முடியாத நிலையில் எங்கள் மருத்துவமனைகள் உள்ளன என மேலும் தெரிவித்துள்ள அவர் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு படையினரால் எங்கள் மருத்துவமனையின் அனைத்து சாதனங்களும் அழிக்கப்பட்டுவிட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு காசாவில் உள்ள கமால் அத்வான் மருத்துவமனையில் மின்சாரம் துண்டிக்கப்படும் என தெரிவித்துள்ள அவர் அம்புலன்ஸ்களும் மருத்துவர்களும் தொடர்ச்சியாக இலக்குவைக்கப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு போர்க்குணமிக்க கொலைகார எதிரி பொதுமக்களை கொல்வதே அவர்களின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இஸ்ரேலி படையினர் மற்றும் பலஸ்தீன போராளிகள் இடையே காசாவில் மோதல்கள் நீடித்து வரும் நிலையில் வடக்கு காசாவில் மேலும் 3 துருப்பினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று கூறியது. இதன்படி அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 75 ஆக அதிகரித்துள்ளது.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் கல்கில்யா நகரில் இஸ்ரேல் இராணுவம் நேற்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இதன்படி இந்த ஆண்டு ஆரம்பம் தொடக்கம் மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 464 ஆக அதிகரித்திருப்பபோது இதில் காசாவில் போர் வெடித்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 256 ஆகும். மேலும் 3,100 பேர் வரை காயமடைந்துள்ளனர். இஸ்ரேலிய இராணுவம் கல்கில்யா மற்றும் ஜெனின் நகரங்களில் ஊடுருவியதை அடுத்து பலஸ்தீனர்களுடன் மோதல் ஏற்பட்டதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.